Q6
N12
118193

# PRIDE

THE

## Greatest Evil in the World.

பிரதான தீமையாகிய

# பெருமை

First Edition 1,000 Copies.

A. M. [illegible] Press, Pasumalai.

1913.

விலை காசு 4

# PRIDE

THE

# Greatest Evil in the World

# பிரதான தீமையாகிய பெருமை

"பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."

FIRST EDITION 1000 COPIES.

*PASUMALAI,*
Printed at the A. M. Lenox Press
1912.

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| 1. | முகவுரை ... ... | 1—5 |
| 2. | பெருமையும் அதின் உற்பத்தியும். | 6—8 |
| 3. | பெருமை: அதின் தன்மையும், குணங்களும் ... ... | 9—15 |
| 4. | பெருமையும் அதின் கிரியைகளும். | 16—45 |
| 5. | பெருமையும் அதின் கிரியைகளும் (தொடர்ச்சி) இயேசுகிறிஸ்துவும் அவருடைய போதனைகளும் ... | 46—67 |
| 6. | பெருமையும் அதின் பலாபலன்களும் ... ... | 68—80 |
| 7. | பெருமையும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழி வகைகளும். | 81—120 |

# நூன்முகம்.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." தேவன் தமது சாயலை மனுஷனுக்கு அணிந்து, மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டி, அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினார் (அவனைத் தம்மிலும் சற்று சிறியவனாக்கினார்). தம்முடைய கரத்தின் கிரியைகளெல்லாவற்றின்மேலும் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார். ஆயினும், மனுஷன் தன் கீழ்ப்படியாமையினாலே தன் ஆதி மேன்மைகளையெல்லாம் ஒரு நிமிஷத்தில் இழந்துபோனான். தனக்குக் கீழ்ப்பட்டவைகளுக்குங்கூடச் சற்று சிறியவன்போல் காணப்பட்டது எவ்வளவு பரிதாபம்! என்றபோதிலும், அவன்மேல் கிருபைகூர்ந்து அவனுக்காகப் பிணைப்படச் சித்தங்கொண்ட பேரன்பரின் புண்ணியத்தினால் தன் ஆதி நிலைமையைத் திரும்பவும் அடையும்படியான சிலாக்கியம் பெற்றது அவனுடைய பெரும் பாக்கியமே.

அந்நாள்முதற்கொண்டே மனுஷன் மறுபடியும் தன் மேலான நிலைமைக்கு எப்படியாயினும் வரவேண்டும் என்று கருதினபடியால், எலலாவற்றிலும் மேன்மை பெற்றோங்கவேண்டும் என்ற பேராவல் அவனை ஆட்கொண்டு நெருக்கிவந்தது. சகல காரியங்களிலும் முன்னேறி, யாவருடைய மதிப்புக்கும் கனத்திற்கும் உரியவனாகவேண்டும் என்ற ஆசையே தற்காலத்தில் மனுஷன் அடைந்திருக்கிற சகல சித்திகளுக்கும், அறிவிலும் நாகரீகத்திலும் சகல சாஸ்திரங்களிலும் அவன் முன்னேறி வந்திருக்கிறதற்கும், புதுமையும் நூதனமுமான காரியங்களைக் கண்டுபிடிக்கத் திறமையுடையவனானதற்கும்

காரணமாயிற்றென்று பார்க்கிறோம். வானத்திலும், பூமியிலும், சமுத்திரங்களிலும் அவன் நடப்பிக்காத கிரியைகளும் உண்டோ? புத்தியினால் எளிதில் கிரகிக்கக்கூடாத எத்தனையோ அரிதான காரியங்களை இவன் செய்துவருகிறதைக் கவனிக்கும்போது இவனுடைய ஆச்சரியமான செயல்கள் என்னமாய் முடியுமோ என்று எவர்களும் சொல்லக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.

இவ்வளவாய் முன்னேறி மேன்மையடைந்து வருகிற மனுஷன், ஒன்றில்தான் இன்னும் அதிகக் குறைவுள்ளவனாயிருக்கிறான். அதாவது, தனக்கும் தன்னை இவ்வளவு மேன்மைப்படுத்தின தன் தேவனுக்கும் உள்ள சம்பந்தவிஷயத்திலும், தனக்கும் தன் உத்திரவாதத்திற்குள்ளான தன் பிறனுக்குமுள்ள சம்பந்த விஷயத்திலுமே. தேவனுடைய மகிமைக்காகச் சிருஷ்டிக்கப்பட்ட இவன் தன் மகிமைக்காகப் பிழைக்கவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்ற அனுப்பப்பட்ட இவன் தன் சித்தத்தையே நிறைவேற்றவும், தன்னைத் தேவனுக்கு ஒப்பாக்கி, தேவன் இல்லையென்று கர்வத்தோடு தன் இருதயத்தில் சொல்லவும் தலைப்பட்டுவிட்டான். தன் பெலத்திலேயே சார்ந்து, தன்னுடைய சகல சித்திக்கும் ஜெயத்திற்கும் தானே காரணன் என்று தன்னைப் புகழவும், தேவன் தனக்கு விதித்திருக்கிற சட்டங்களையும் நியமங்களையும் வேண்டாமென்று தள்ளி தன்னையே தனக்கு மொத்தமும் சட்டமுமாக்கித் தன் இஷ்டப்படி நடக்கவும் துணிந்துவிட்டான். தன்னையே சகலருக்கும் மேலாக நிறுத்தி, மற்றவர்களை மிகவும் அற்பமாய் எண்ணி, பிறருடைய நன்மையையும் வாழ்வையும் விரும்பாமல் தான் மாத்திரம் மேன்மையடையவும், தன் ஜனம், தன் குடும்பம் நன்றாயிருக்கவுமே இரவு பகலாய் உழைத்து மற்றவர்களை முன்னேறவிடாமல் அவர்களை எப்போதும் கெடுக்கவுமே பிரயாசப்பட்டு வருகிறான். இப்பேர்ப்பட்ட அகங்காரமும், தன்னயமும், கேடுபாடுமான எண்ணங்களையுடைய எலும்புருக்கியைத்தான் பெருமைக்காரன் என்று அழைக்கிறோம்.



“மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்துபார்க்கும்.” தேவனுடைய ஜீவ சுவாசம் தன்னில் ஊதப்பெற்ற மனுஷன், அந்த ஆவியினாலே தான் எப்படிப்பட்டவனென்றும், தனக்கும் தன் தேவனுக்கும் உள்ள சம்பந்தம் என்னவென்றும் ஆராய்ந்து அறியக்கூடியவனும் அறியவேண்டியவனுமாயிருக்கிறான். தன்னறிவே சகல அறிவிலும் மேலான அறிவு. சகலத்தையும் அறிந்தவன் தன்னையறியாவிட்டால் அவனுக்குப் பிரயோஜனமில்லை. “தன்னையறிந்தவன் தலைவனையறிவான்.” தன்னையறிந்தவன் தன்னைச் சிருஷ்டித்தவனையும் அறிந்து, “பரிசுத்தரின் அறிவே அறிவு” என்று முழு நிச்சயத்தோடு சொல்லக்கூடியவனாவான். தேவனே, நீர் பார்க்கிறபடி நான் என்னைப் பார்க்கக் கிருபைசெய்யும்; நான் இருக்கிறபடியே என்னை எனக்குக் காட்டும், உம்மை முழுவதும் எனக்கு வெளிப்படுத்தும் என்ற ஜெபம் என் இருதயத்திலிருந்து பல வருஷங்களாய்த் தேவனிடத்திற்குச் சென்றதுண்டு. தம்முடைய பிள்ளைகளை ஒருநாளும் கைவிடாத தேவன் தமது தயவுள்ள சித்தத்தின்படியே பல ஏதுக்களைக்கொண்டு தம்மையும் என்னையும் நித்தம் வெளிப்படுத்தி வந்தார். என் ஒன்றுமில்லாமையை எனக்குக் காட்டி என்னை நானே அரோசிக்கச்செய்தார். நான் நித்தமும் பொல்லாதவனென்றும் வழுவிப்போகிற இருதயமுடையவனென்றும் கண்டேன். “தேவனே, நீர் என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர்; உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன்; நான் மிருகத்தைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவனல்ல” என்று ஓலமிடவேண்டியவனானேன். என்னை எனக்குக் காட்டின கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நான் என்னைப்பற்றி அறிந்த எல்லா அறிவைப்பார்க்கி

லும் நான் மிகுந்த பெருமைக்காரன் என்று அறிந்ததே
மிகவும் விசேஷித்த அறிவாகத் தோன்றுகிறது.

பத்து வருஷங்களுக்குமுன், எனக்குப் படித்துக்கொ
டுத்த ஒருவர் என்னைப்பார்த்து, 'நீ மெத்தப் பெருமைக்
காரன்' என்று என்னைக் கோபித்தது இன்னும் என்
காதில் தொனித்துக்கொண்டிருக்கிறது. அவர் என்
பெருமையின் மிகுதியைக் கண்டு எனக்கு அந்தப் பட்
டத்தைச் சூட்டினாராக்கும். அது எனக்கு மிகுந்த துக்
கத்தைக் கொடுக்கக்கூடியதாயினும், அது என் ஜீவியத்
தில் உண்டாக்கியிருக்கிற மாறுதல்களை நினைக்கும்போ
து சந்தோஷப்படுகிறேன். நான் பெருமைக்காரன்
என்று கர்த்தர் எனக்குக் காட்டினதற்காகவும், என் பெ
ருமையில் கெட்டுப்போகவிடாமல் அதற்குத் தப்பித்துக்
கொள்ளும்படியான போக்கையும் வழிவகைகளையும் வெ
ளிப்படுத்தினதற்காகவும் என் கர்த்தரை நான் உள்ளள
வும் பாடித்துதிக்கக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன்.

இவ்வுலகில் என்னையும், மற்றவர்களையும் மிகவும் கெ
டுத்து நரகத்திற்கு ஆளாக்கிவருகிற பெரிய பாவம் எது
என்ற கேள்வி கடந்த நாலைந்துவருஷங்களாக என் மன
தில் அடிக்கடிவந்தது. இக்கேள்வியை நான் பலரிடத்தி
லும் கேட்டதுண்டு. பெருமையே உலகத்தில் பெருந்
தீமைகளைச்செய்துவருகிறதென்று கர்த்தர் காட்டினார்.
பெருமைதான் பெரிய தீமை என்று என் மனதில் பட்ட
நாள்முதற்கொண்டு, அது என்னிலும் மற்றவர்களிலும்
நடப்பிக்கிற அதின்கிரியைகள் ஒவ்வொன்றையும் 5 வரு
ஷங்களாக ஒவ்வொருநாளும் தேவ ஒத்தாசையைக்கொ
ண்டுநுட்பமாய்க் கவனித்துவர முயன்றேன். இப்படிக்
கவனித்துவரவே, நான் எப்படிப்பட்டவன் என்றும், மற்
றவர்கள் எப்படிப்பட்டவர்களென்றும் சற்று அறியும்படி
தேவன் கிருபைசெய்தார். காலம் செல்லச்செல்ல மற்
றவர்களுக்குப் பிரயோஜனமுண்டாக இதைப்பற்றி ஏ
தாகிலும் எழுதினால் நலமாயிருக்கமாட்டாதா என்ற



எண்ணமும் அடிக்கடி மனதில் வந்தது. இதைப்பற்றி
எழுதுகிறதற்கு நான் கொஞ்சமேனும் பாத்திரவானே
அல்ல என்று கடந்த இரண்டு வருஷங்களாய்க் கடத்தி
விட்டேன். என்றாலும் அதைப்பற்றி எழுதுவதற்கு
ஏற்ற காலத்தை அவரே தெரிந்துகொண்டார் என்று
நான் அறிந்து கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறேன். கடந்
துபோன ஏழெட்டு மாதங்கள் எனக்கு மிகவும் விசே
ஷித்தவைகளாக இருந்தன. ஏனென்றால், என்னிடத்தி
லிருந்த பெருமையை முன்னில்லாதபிரகாரம் கடந்த
ஏழு மாசங்களாகக் காட்டிவந்திருக்கிறார். இப்புஸ்தகத்
தை எழுதிமுடித்தவுடன்: என்னிலுள்ள பெருமையை
முற்றிலும் அறிந்துவிட்டேன், பெருமை நீங்கிவிட்டது
என்று இலேசாய் நினைத்தேன். ஆனால் கடந்த நாலு
மாசங்களுக்குள் நடந்த பல சம்பவங்களாலும், என்னில
உண்டான பலத்த போராட்டங்களாலும், சாத்தான்
என்னில் நடப்பித்த எண்ணிறந்த அந்தகாரக் கிரியைக
ளாலும் தேவன் எனக்குக் காட்டிவந்திருக்கிற ஆச்சரிய
மான காரியங்களை எழுதப்போனால் விரியும். இந்த நா
லுமாசங்களுக்குள் நான் என்னைப்பற்றியும், என் பெரு
மையைப்பற்றியும் அறிந்ததில் அரைக்கால்வாசிகூட க
டந்த ஐந்து வருஷங்களாக அறியவில்லையென்று கண்
டேன். பெருமையின் ஆழம் எவ்வளவென்றும், அதின்
தந்திரங்கள் எவ்வளவு பயங்கரமானவைகளென்றும்,
அது எவ்வளவாய் என்னை வஞ்சித்துப்போட்டதென்
றும் அறிந்து திடுக்கிட்டேன். இந்த நாட்களில் என்
னை அறிந்த பெரியோரும், சிறியோருமான யாவரும்
என் பெருமையை வெகு தெளிவாய்க் கண்டார்கள்.
இன்றான் மெத்தப் பெருமைக்காரன், இன்னானைப் பி
சாசுபிடித்திருக்கிறதென்று பலரும் பேசிக்கொண்டார்
கள். இப்படிப் பலரும் என்னிடத்தில் நேராயும் சொன்
னதுண்டு. இவைகளையெல்லாம் நான் பார்க்கும்போது,
மெய்யாகவே பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன்

மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிற பாவிகளின் நேசர், என்மேலில் வைத்த பெரிய அன்பினிமித்தம் இவ்விதமான பல காரியங்களினாலே பெருமையின் அகோரத்தை எனக்குப் படிப்பித்துவந்தார். அவருக்கே மகிமையும், கனமும் என்றென்றைக்கும் உண்டாவதாக. நான் மற்றவர்களால் மிகுந்த வெட்கத்தையும் நிந்தைகளையும் அடைந்தபோதிலும் கர்த்தர் என் இருதயத்தில் வைத்திருக்கிற சமாதானத்தையும் ஆறுதலையும் சந்தோஷத்தையும் நினைத்து மறுபடியும் அவரை ஸ்தோத்திரிக்கிறேன். பெருமையைப்பற்றி முழுதும் அறிந்துவிட்டேனென்றாவது, அது என்னை விட்டு முற்றிலும் நீங்கிவிட்டதென்றாவது சாதங்கொள்ளத் துணியேன். நித்தம் கர்த்தர் காட்டிக்கொண்டேதான் வருகிறார். நித்தம் அது நீங்கும்படி முறையிடத்தான் சொல்லுகிறார்.

மற்றவர்களிடத்திலிருந்து கனத்தையும் புகழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற பெருமையான எண்ணத்தோடும், நோக்கத்தோடும் இப்புஸ்தகத்தை எழுதியிருந்தால் எனக்கு ஐயோ! கர்த்தர் இந்தப் பயங்கரமான சோதனையினின்று என்னைக் காப்பாராக. இப்புஸ்தகம் சாஸ்திரமுறையாகவாவது, உயர்ந்த பாஷை நடையாகவாவது எழுதப்படவில்லை. எனக்கு அப்படி எழுதவும் தெரியாது. என் சொந்த அனுபவத்தையும், தேவன் என்னைத் தாழ்த்திக் கிருபையாய் வெளிப்படுத்தினவைகளையும், மற்றவர்களுடைய கிரியைகளை உற்றுக் கவனித்து அறிந்துகொண்டவைகளையுமே இங்கு எழுதியிருக்கிறேன். கர்த்தருடைய வேதத்தையே இதற்கு ஆதாரமாகக்கொண்டு எழுதியிருக்கிறேன். பெருமையைப்பற்றிப் பலருக்கும் பல அனுபவம் இருக்கலாம். இதைப்பற்றிப் பலரும் பலவகையாக எழுதலாம். ஆகையால், பெருமையைப்பற்றி எழுதவேண்டியதையெல்லாம் எழுதிவிட்டேன் என்று சொல்லத் துணியேன்.





இப்புஸ்தகத்தில் அநேக குறைகள், பெலவீனங்கள் காணப்படலாம். அவைகளைப் பொருட்டாக எண்ணாமல் பொறுமையோடும், பெருமையினின்று எப்படியாகிலும் தப்பித்துக்கொள்ளத் தேவன் கிருபை செய்யவேண்டும் என்ற ஜெபத்தோடும் வாசித்துப் பிரயோஜனம் அடைகிறவர்கள் பாக்கியவான்கள். இப்புஸ்தகத்தைப் பற்றிய ஆலோசனைகள், பிழைதிருத்தங்கள் ஏதாகிலும் உண்டானால் அவைகளை நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளுகிறேன்.

இதை வாசிக்கிற அன்பர் யாவரும், "தேவன் எதிர்த்துநிற்கிறதும்," சகல கேட்டுக்கும் காரணமுமாகிய, பிரதான தீமையாகிய பெருமையிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், சர்வ மகிமையும் பொருந்திய நம்முடைய கர்த்தருமுள்ள தேவனுக்கே மகிமையையும் கனத்தையும் எப்பொழுதும் செலுத்தவும், அவருக்கு முன்பாக முழுவதுமாகத் தாழ்ந்து, அவர்தாமே ஏற்றகாலத்தில் நம்மை உயர்த்தும்படியாக அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்கவும் தேவன்தாமே கிருபைசெய்ய அவரை நோக்கிக் கெஞ்சுவோமாக.

Pasumalai }
March 5, 1912. } NOAH MATHEW.

# பிரதான தீமையாகிய பெருமை.

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், பெருமை எனக்கிருந்தால்; சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன்.

நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல ரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும்; மலைகளைப் பெயர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், பெருமை எனக்கிருந்தால் நான் ஒன்றுமில்லை.

எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக்கொடுத்தாலும், பெருமை எனக்கிருந்தால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

பெருமை சதா கோபமும் எரிச்சலுமுள்ளது; பெருமை பொறாமையை உண்டாக்கும்; பெருமை தன்னைப் புகழும், இறுமாப்பாயிருக்கும்.

அயோக்கியமானதைச் செய்யும், தற்பொழிவை நாடும், சினமடையும், தீங்கு நினைக்கும்.

சத்தியத்தில் சந்தோஷப்படாமல் அநியாயத்தில் சந்தோஷப்படும்.

பெருமை ஒன்றையும் தாங்காது, ஒன்றையும் விசுவாசிக்காது, ஒன்றையும் நம்பாது, ஒன்றையும் சகிக்காது.

பெருமை சீக்கிரம் தன் வாயை மூடும். நிறைவானது வரும்போது குறைவானதாகிய பெருமை காணப்படாமற்போம்.

நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போல பேசினேன், குழந்தையைப்போல சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்ற தாழ்மையை ஒழித்துவிட்டு பெருமையை எடுத்துக்கொண்டேன்.

இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.

இப்பொழுது காமியம், மாயை, பெருமை இம்மூன்று தீமைகளும் நிலைத்திருக்கிறது; இவைகளில் பெருமையே பிரதான தீமை.

# பிரதான தீமையாகிய பெருமை.

## முகவுரை.

தேசங்கள்தோறும் தீமைகள் வேறு. ஒவ்வொரு தேசத்திற்கும் அததற்குரிய தீமைகள் உண்டு. ஒரு தேசத்திற்குத் தீமையாகக் காணப்படுகிறது, இன்னொரு தேசத்திற்கு ஒருவேளை தீமையாயிராது. ஒன்றிற்கு நன்மையை விளைவிப்பது இன்னொன்றிற்குத் தீமையை விளைவிக்கலாம். அந்தந்தத் தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிக்கும் அதனதின் இயற்கை அமைப்புக்கும் தக்கதாய் அத்தேசத்தாருடைய தன்மையுமிருக்கும். பெரியவர்கள் செய்கிற பாவங்கள் வேறு, சிறுவர்கள் செய்கிற பாவங்கள் வேறு. வாலிபரையும வாலிப ஸ்திரீகளையும் கெடுக்கிற தீமைகள் வேறு, வயோதிபரைக் கெடுக்கிற தீமைகள் வேறு. படித்தவர்களுக்குள் காணப்படுகிற பாவங்களுக்கும் படிப்பில்லாதவர்களுக்குள் காணப்படுகிற பாவங்களுக்கும் வித்தியாசமிருக்கலாம். இப்படியே தீமைகளும் பாவங்களும் பலவிடத்திலும் பல அளவாகக் காணப்படும். ஆனால் எல்லா தேசங்களிலும், எல்லா ஜாதியாரிடத்திலும், எல்லா மதஸ்தரிடத்திலும், உயர்ந்தவர்களிடத்திலும் தாழ்ந்தவர்களிடத்திலும், ஐசுவரியவான்களிடத்திலும் ஏழைகளிடத்திலும், சிறுவருக்குள்ளும் பெரியவர்களுக்குள்ளும், வாலிபருக்குள்ளும் வயோதிபருக்குள்ளும், நாகரிகமுள்ளவர்களிடத்திலும் காடுகளிலும் மலைகளிலும் குடியிருக்கிற காட்டுமிராண்டிகள் என்று சொல்லப்படுகிறவர்களிடத்திலும், அதிக பக்தியுள்ளவர்கள் என்று எண்ணப்படுகிறவர்களிடத்திலும், எல்லாரிலும் பிரதான பாவிகள் என்று சொல்லிக்கொள்ளப்படுகிறவர்களிடத்திலும் காணப்படுகிற பெரிய பாவம் எல்லாரையும் ஆட்கொண்டு கேட்டுக்கு ஆளாக்கிவருகிற பெரிய தீமையாகிய பெருமை என்னும் பேய்க்குணமே.

உலகத்தில் பெரிய தீமை எது என்று பலரிடத்திலும் கேட்டால் பலரும் பலவிதமாய் உத்தரவு கொடுப்பார்கள். சிலர் அது பொய் என்பார்கள். சிலர் அது விபசாரம் என்பார்கள். இன்னும் சிலர் அது பொருளாசை அல்லது குடிவெறிதான் என்று சொல்லுவார்கள். ஆனால், பெருமைதான் பெரிய தீமை என்று நாம் சொல்லக்கூடாதா? சந்தேகமின்றிச் சொல்லலாம். பெருமையினால் உலகத்தில் விளைந்திருக்கிற தீமைகள் ஒவ்வொன்றையும் சற்று யோசித்துப் பார்ப்போமானால், அது உலகத்தாரை முற்றிலும் கெடுத்து அவர்களை நரகத்தின் பிள்ளைகளாக்கியிருக்கிற விதத்தையும், அது தேவனுக்குக்கீழ்ப்படியாமலும் கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறதையும் நாம் கண்டறிந்து, பெருமை எவ்வளவு பயங்கரமும் பெருந்தீமையை விளைவிக்கக்கூடியதுமானதென்று ஒத்துக்கொள்ளுவோம்.

பெருமைதான் எல்லாப் பாவங்களுக்கும் தாய் அல்லது வேர் என்னலாம். ஒரே தாய் பெற்ற பலபிள்ளைகளிடத்திலும் அவளுடைய குணங்கள் காணப்படுகிறதெப்படியோ, அப்படியே உலகத்தார் செய்துவருகிற சகல பாவங்களிலும் பெருமை கலந்திருக்கிறதைக் காணலாம். ஒவ்வொரு பாவத்தையும் தனித்தனியே எடுத்து, இந்தப்பாவம் எப்படிவந்தது, இந்த மனுஷன் அல்லது அந்த மனுஷி இந்தப் பாவத்தைச் செய்ததற்குக் காரணமென்னவென்று அதை நுட்பமாய் ஆராய்வோமானால் அந்தந்தப்பாவத்திற்குப் பெருமையே மூலகாரணம் என்று அறிந்துகொள்ளுவோம்.

இவ்வுலகத்தின் சகல யுத்தங்களுக்கும், கலகங்களுக்கும், வாக்குவாதங்களுக்கும், சகல பிரிவினைகளுக்கும், ஜாதிவித்தியாசங்களுக்கும் காரணமென்ன? உலகத்தின் சகல இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கோர்டுகச்சேரிகளுக்கும், சகல நியாயஸ்தலங்களுக்கும், இரவுபகலாய்ப் பாடுபட்டுச் சம்பாதித்த பணமெல்லாம் அ



லைகளில் வம்பாக இறைக்கப்படுவதற்கும் காரணமென்ன? ஒருவருக்கொருவர் எவ்வளவேனும் தாழ்ந்துபோகப்பிரியமில்லாதபடி செய்கிற குணமாகிய பெருமைதானல்லவோ?

இப்பெருமை கிறிஸ்துவின் சபைகளிலுங்கூட நுழைந்து அது விளைவித்திருக்கிற பெருந்தீமையைப் பாருங்கள். சபைகளிலே காணப்படுகிற பிரிவினைகளுக்குக் காரணமென்ன? கிறிஸ்தவர்களெல்லாரும் ஒரே கிறிஸ்துவை உடையவர்களாயிருந்தாலும், பல கிறிஸ்துக்களைச் சேர்ந்தவர்கள்போல இவ்வுலகில் ஜீவிக்கிறதை நாம் பார்க்கிறோமே. நான் அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்தவனென்றும், நான் சி. எம். எஸ். மிஷனைச்சேர்ந்தவனென்றும், நான் எஸ். பி. ஜி. மிஷனைச் சேர்ந்தவனென்றும், நான் லுதரன் மிஷனைச்சேர்ந்தவனென்றும் சொல்லி ஒருவருக்கொருவர் பெருமைபாராட்டி வருகிறதினாலே தேவனுடைய நாமம் புறமதஸ்தருக்குள்ளே தூஷிக்கப்படுகிறதைப் பார்க்கிறோமே. தங்கள் தங்கள் சொந்த மிஷன்களில் உழைத்துவருகிற தேவ ஊழியர்கூட தங்களுடைய பல சேகரங்களுக்கும் வித்தியாசம்பாராட்டி உழைக்கிறதில்லையா? என் சேகரத்திலுள்ளவர்கள் மாத்திரம் நல்ல கிறிஸ்தவர்களாயிருக்கவேண்டும், இவர்கள் மட்டும் காணிக்கைகொடுக்கிறதில் முன்னேறவேண்டும், இங்கேயிருக்கிற தேவ ஊழியரையாவது பணத்தையாவது அங்கே அனுப்பமாட்டோம் என்று இவ்விதமாய்த் தற்புகழ்ச்சியை நாடி உழைக்கிறவர்களையும் நாம் பார்க்கிறோமே. ஒவ்வொரு மிஷனும் மற்ற மிஷன்களைப்பகைத்து, தன்னயத்தை நாடிப் போட்டியாகவே வேலைசெய்து வருவதும் சகஜமாயிருக்கிறதே. இவர்களுக்குள் அடிக்கடி காணப்படுகிற சண்டைகளுக்கும் பொறாமைகளுக்கும் காரணம் யாது? மனுஷரால் வரும் மகிமையையும் தற்புகழ்ச்சியையும் நாடும் குணமாகிய பெருமைதானென்று சொல்ல யாரும் அஞ்சுவார்களா? அப்போ

ஸ்தலருடைய காலத்திலிருந்த சபைகளுக்குள் காணப்பட்ட வல்லமையும், அவர்களுக்குள்ளே சம்பூரணமாய் ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவியானவரும், அவர்களால் நடப்பிக்கப்பட்ட பலத்த அற்புதங்களும் அடையாளங்களும் தற்காலத்திலுள்ள நமது சபைகளிலும் காணப்படவேண்டிய அளவு நாம் பார்க்கிறதில்லையே என்று அநேகர் துக்கத்தோடே அறிக்கையிடுகிறதையும் நாம் கேட்டிருக்கிறோம். ஆவிக்குரிய காரியங்களில் சபை இவ்வளவு குறைவாயிருக்கிறதற்கும், உலகநேசம் ஒவ்வொருவரையும் பிடித்து ஆட்டிவருகிறதற்கும் காரணமென்ன? சகலரும் கெட்டுப்போகிறதையே விரும்புகிறதும் தேவனுக்குச் சத்துருவாயிருக்கிறதுமான பெருமைதானல்லவோ?

பெருமையினால் விளைந்திருக்கிற தீமைகளை யார் சரியாய் விஸ்தரிக்கக்கூடும்? சாத்தான் தன் பெருமையாகிய நஞ்சை உலகத்தில் காணப்படுகிற எல்லாவற்றின் மேலும் ஊற்றியிருக்கிறானென்றே சொல்லவேண்டியது. அது இயற்கையோடு இயற்கையாய்ப் போய்விட்டது. ஒருவன் பிறக்கும்போது அவனோடு பெருமையும் கூடப் பிறக்கிறது. இரண்டு அல்லது மூன்று வயதுப்பிள்ளையை எடுத்துப்பாருங்கள். அதற்கு இருக்கிற கோபம், பிடிவாதம், அகங்காரம் எவ்வளவு! சிறுபிள்ளைகளுக்குள்ளே சண்டைகள் எவ்வளவு சீக்கிரமாய் எழும்புகிறது. அவர்களையடக்குவதில் பெரியவர்கள் எவ்வளவு பிரயாசம் எடுக்கவேண்டியதிருக்கிறது. அவர்கள் கூட ஒருவருக்கொருவர் தாழ்ந்துபோகப் பிரியமில்லாமல் மேட்டிமைச் சுபாவமுள்ளவர்களாயிருக்கிறதினாலல்லவா இவ்வித பொல்லாத காரியங்கள் அவர்களுக்குள் காணப்படுகிறது. சிறு பிள்ளைகளை உற்றுக் கவனிக்கிறவர்கள் இப்பேய்க்குணமாகிய பெருமை அவர்கள் சிறுபிராயத்திலேயே அவர்களை ஆண்டு கெடுத்துவருகிறதென்பதை அறிந்துகொள்வார்கள். மனிதனை விட்டுவிட்டு, இயற்கையில் காணப்படுகிற மற்ற ஜீவஜெந்துக்களிடத்தில்போய்



விசாரித்தால், இக்குணம் ஒருவாறு மிருகங்களுக்குள்ளும், பட்சிகளுக்குள்ளும், ஊரும்பிராணிகளுக்குள்ளும், நீர்வாழும் ஜெந்துக்களுக்குள்ளுங்கூடக் காணப்படுகிறதென்று அறிந்துகொள்ளுவோம். அவைகளுங்கூட ஒன்றுக்கொன்று தாழ்ந்துபோகிறதில்லை. கோபம், மூர்க்கம், பகை எவ்வளவாக அவைகளுக்குள் காணப்படுகின்றன! தன்னையுள்ளவைகளும் மற்றவைகளுக்குத் தீங்கு செய்பவைகளும் உண்டு. ஒன்றுக்கொன்று சண்டை வந்தால் தன் உயிர்போகுமளவும் எதிர்த்து நின்று சண்டைசெய்து ஜெயிக்கிறதை நமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இவ்விதமாய், பெருமையானது மனுஷர் முதல் மிருகங்கள்வரையுமுள்ள இவ்வுலகமுழுவதையும் கறைப்படுத்தி நாசமாக்கி வருகிறதென்பதை அறிந்து திடுக்கிடவேண்டியவர்களாயிருக்கிறோம்.

தேவன் அதிகமாய் வெறுக்கிற ஒரு பாவமுண்டானால் அது பெருமைதான். பெருமையுள்ளவர்களுக்குத்தான் தேவன் எதிர்த்து நிற்கிறார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். அவர்களுக்கு விரோதமாய்க் கூறப்பட்டிருக்கிற சாபங்களும் தேவகோபாக்கினையும் மகா பயங்கரமும், எந்தமனுஷனும் திடுக்கிடத் தக்கவைகளுமாயிருக்கிறன. அருமை இரட்சகர் இவ்வுலகிலிருந்தபோது அதிகமாய் வெறுத்துக் கண்டித்ததுமான பாவம் மாய்மாலம் நிறைந்த பெருமையே. அவர் இவ்வுலகில் வந்து அவதரித்ததின் நோக்கமும் இப்பெருமையின் தலையை நசுக்கவே.

மேலே சொல்லப்பட்டவைகளினாலும், பின்வரும் அதிகாரங்களில் நாம் அறிந்துகொள்ளப்போகிறவைகளினாலும் பெருமையே பிரதான தீமை என்று அறிந்துகொள்ளுகிறோம்.

# பிரதான தீமையாகிய பெருமை.

## I. அதிகாரம்.

### பெருமையும் அதின் உற்பத்தியும்.

பெருமையின் (பாவத்தின்) உற்பத்தி என்ன என்பது நமக்கு வெளிப்படுத்தப்படாத இரகசியங்களில் ஒன்று. "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப்படுத்தப்பட்டவைகளோ நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்." நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவைகளைக்கொண்டு அதின் உற்பத்தி இன்னதென்று சத்தியவேதம் வெளிப்படுத்துகிறவரையிலும் கவனிப்போம். "உலகமுண்டாகிறதற்குமுன்னமே அது இருந்தது. அது உற்பத்தியான இடம் பரலோகமே." "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தைவிட்டுவிட்ட தூதர்களையும் மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" என்றும், "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி, நரகத்திலே தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார்" என்றும் யூதா நிருபம் 6-ம் வாக்கியத்திலும், 2 பேதுரு 2 : 4-லும் வாசிக்கிறோம். இவ்விரண்டு வாக்கியங்களும் நமக்கு மிகவும் உதவியாயிருக்கின்றன. இவைகள் இல்லாவிட்டால் பெருமையின் உற்பத்தியைக் கண்டுபிடிப்பது அதிக வருத்தம். "பாவஞ்செய்த தூதர்கள்." அந்தத் தூதர்கள் என்ன பாவஞ்செய்தார்களென்று நமக்குத் தெளிவாய்ச் சொல்லப்படவில்லை. இவர்கள் என்ன பாவத்தைத்தான் செய்திருப்



பார்கள்? கொலை செய்திருப்பார்களோ? பொய் சொல்லியிருப்பார்களோ? அல்லது விபசாரம் செய்திருப்பார்களோ? இவைகளைச் செய்திருக்கமாட்டார்கள். ஏனெனில் இப்பாவங்களைச் செய்கிறதற்கு அவர்களுக்கு ஏதுவுமில்லை, அவசியமுமில்லை. அவர்கள் பரிசுத்தத்தையேயன்றி வேறொன்றையும் பார்க்கமுடியாது. தேவனுடைய மகிமை அவர்களைச் சூழ்ந்திருந்தது. தங்களுடைய செட்டைகளால் தங்களை மூடி, முகங்குப்புற விழுந்து "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று ஓய்வில்லாமல் போற்றுவதே அவர்கள் வேலை. இப்படிப்பட்ட நிலைமையிலுள்ளவர்கள் என்ன பாவஞ் செய்யக்கூடும்?

அவர்களில் ஒருவன் தேவனைத் துதிக்கிறதை விட்டுத் தன்னைப்பார்க்க முயன்றான். நான் இதுவரையில் செய்துவந்திருக்கிறது மூடத்தனமாயல்லவோ இருக்கிறது! நான் ஏன் ஒருவரை இப்படி முகங்குப்புற விழுந்து வணங்கவேண்டும்! நானும் அவரைப்போல்தானே இருக்கிறேன். என்னை ஏன் மற்றவர்கள் வணங்கக்கூடாது என்ற கர்வமான எண்ணங்களைத் தனக்குள்ளே எண்ணியிருக்கலாம். இப்படி எண்ணினது மாத்திரமல்ல, தன்னருகிலுள்ள மற்றத் தூதர்களின் காதுகளிலும் இவைகளை ஓதியிருப்பான். சிறிது நேரத்திற்குள் பரலோகத்தில் பெருஞ் சந்தடி உண்டானது. இந்த அகங்காரமான எண்ணத்தைத் தேவன் உடனே அறிந்து, பாவத்திற்குத் தூண்டினவனையும், அவனால் இழுக்கப்பட்ட மற்றவர்களையும் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டிப் பாதாளத்தில் தள்ளினார். அவன் செய்த பாவமென்ன? நான் என்ற அகங்காரம் முதலாவது அவன் மனதில் உண்டானது. தன்னைத் தேவன்போல் ஆக்கநினைத்தான். தேவனுக்குச் செலுத்தப்படுகிற கனம் தனக்குச் செலுத்தப்படவேண்டுமென்று விரும்பினான். அந்த நான் என்ற அகங்காரமான எண்ணமே பெருமை.

இப்பாவம் உலகத்தில் எப்படி நுழைந்தது? இதோ, தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் சந்தோஷமும் பாக்கியமுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். தேவன் அடிக்கடி அவர்களிடத்திற்கு வந்து இன்ப சம்பாஷணை செய்துவருகிறார். அவர்களுக்கு யாதொரு குறைவுமில்லை. இவர்களிடத்திற்கு கேட்டின்மகனாகிய சாத்தான் வருகிறான். அவன் ஏவாளை வஞ்சித்துக் கெடுக்கும் வகையைப் பாருங்கள். "நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும், நீங்கள் நன்மை தீமை அறிந்து, தேவர்களைப்போல் இருப்பீர்கள்" என்கிறான். தேவர்களைப்போல் என்கிறதைக் கவனியுங்கள். இவனுள் நுழைந்த முதலாவது மேட்டிமையான எண்ணம் தேவனைப்போல் இருக்கவேண்டும் என்பதே. அதே எண்ணத்தைத்தான் அவன் இங்கும் வெளியிடுகிறான். இவனுடைய துர்ப்போதனைக்கு ஏவாள் இணங்கினாள். தன் புருஷனையும் கெடுத்தாள். அத்தூதர்களைத் தேவன் பரலோகத்தைவிட்டுத் துரத்தினதுபோல இவர்களையும் தம்முடைய தோட்டத்தைவிட்டுத் துரத்தினார். இதுவே பெருமை உலகத்தில் உற்பவித்த விதம். அந்நாள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் நான் என்ற அகங்காரமான எண்ணமாகிய பெருமை படிப்படியாக வளர்ந்து, உலகத்தாரை ஆண்டு அவர்களைக் கேட்டுக்கு வழிநடத்தி வந்திருக்கிறதென அறிகிறோம்.

# பிரதான தீமையாகிய பெருமை.

---

## II. அதிகாரம்.

### பெருமை: அதின் தன்மையும், குணங்களும்.

"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது." எல்லா துர்க்குணங்களைப்பார்க்கிலும் பெருமையானது மகா தந்திரமுள்ளது. மனுஷனுடைய ஒவ்வொரு நினைவிலும், பேச்சிலும், செய்கையிலும் பெருமையானது எவ்வளவு தந்திரமாய்க் கிரியை செய்கிறது என்று பார்க்கலாம். செய்கிறதெல்லாம் பெருமையாகவே இருந்தும், அதெல்லாம் தாழ்மையின் கிரியைகள்தான் என்று நினைக்கும்படி செய்யும். ஒளியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு, செய்கிறதெல்லாம் தேவனுக்குப் பிரியமானதும் அவருடைய சித்தத்திற்கு இசைந்ததுமானதென்று சொல்லும். தேவனே அதெல்லாவற்றையும் நடப்பிக்கிறார் என்று ஏமாற்றும். ஒருவனுக்குத் தெரியாமலே அவனுக்குள் பெருமை நுழைந்துவிடுகிறது. இதோ, ஒரு பிரசங்கி பெருமையைப்பற்றி அதிக விஸ்தாரமாய்ப் பேசி: பெருமை மகா பயங்கரமான பாவம், பெருமையைக் களைந்து தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். ஏனெனில் பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்துநிற்கிறார் என்று அதிக உருக்கத்தோடு சொல்லுகிறான். இப்படி அவன் பிரசங்கித்துக்கொண்டிருந்த நேரமெல்லாம் பெருமை அவனுக்குள் பூரணமாய்க் கிரியைசெய்ததென்றும், மற்றவர்களிடத்திலிருந்து புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவே பேசினானென்றும் நிதானிக்கலாம். ஆனால் இது அவனுக்குக் கொஞ்சமேனும் தெரியாமலிருக்கலாம். பெருமையைப்

பற்றி எழுதுகிற என்னிடத்திலும் அது எவ்வளவு தந்திரமாய்க் கிரியைசெய்கிறதென்று அறிவேன். இவ்வாக்கியத்தை எழுதுகிறதில்கூட எனக்குப் பெருமைவருகிறதென்றறிகிறேன். நான் என்னசெய்வேன்! நிமிஷந்தோறும் ஆண்டவரிடத்தில் ஓலமிடவேண்டியவனாய்த் தானிருக்கிறேன். பெருமையின் மகா தந்திரத்தையும் அதின் வஞ்சகத்தையும் முற்றிலும் அறிந்துகொள்ளும்படி தேவன்தான் கிருபைசெய்யவேண்டும். இது ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் சகல அறிவையும் அறிந்தவனாயிருந்தாலும் பெருமையானது தன்னிடத்தில் எவ்விதம் கிரியைசெய்கிறதென்பதை அறியாமலிருக்கலாம். தங்களிடத்தில் ஒன்றுமே இல்லையென்று பயத்தோடும் நடுக்கத்தோடும் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்துகிறவர்களுக்கே அதை வெளிப்படுத்துவார்.

பெருமைக்குக் காரணமாயிருந்தவன் வேதத்தில், மோசம் போக்குகிற பிசாசென்றும், சாத்தானென்றும், ஆகாயத்து அதிகாரப்பிரபு என்றும், அக்கிரமக்காரனென்றும், கேட்டின் புத்திரனென்றும், பழைய பாம்பென்றும் பலவிதமாய் அழைக்கப்படுகிறான். துன்மார்க்கன், பழைய மனுஷன், பாவமனுஷன், மூடன் முதலியபேர்களும் பெருமைக்காரனைக் குறிக்கிறதென்றே அறிந்துகொள்ளலாம். சகல துர்க்குணங்களும் இவனுடையவைகளே அல்லது இவன் பெற்ற பிள்ளைகளே. தற்சிநேகம், சுயசித்தம், மேட்டிமை, வீம்பு, துணிகரம், பிடிவாதம், இறுமாப்பு, மாய்மாலம் முதலியவைகள் இவனுக்கு மிகவும் அருமையும் அதிக நெருங்கிய சம்பந்தமுள்ளவைகளுமானவைகள் என்று அறிகிறோம். பெருமைக்காரனுடைய குணங்களில் இன்னும் சிலவற்றைப் பொதுவாகப்பார்ப்போம். “இவன் தற்பிரியன், பணப்பிரியன், தூஷிக்கிறவன், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவன், நன்றியில்லாதவன், பரிசுத்தமில்லாதவன்,



சுபாவ அன்பில்லாதவன், இணங்காதவன், அவதூறு செய்கிறவன், கொடுமையுள்ளவன், நல்லோரைப் பகைக்கிறவன், துரோகி, சுகபோகப் பிரியன், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவன், கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவன், மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவன்.”

“இவனுடைய கண்கள் விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமானவைகள். ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணிக் கறையும் இலச்சையுமாயிருந்து தன் வஞ்சனையில் உல்லாசமாய் வாழ்கிறவன்.

இவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ அவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்தி தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கிறவன்.

தன் இருதயத்தைத் தேவனின் இருதயத்தைப்போல் ஆக்குவான். நான் தேவன், நான் சமுத்திரத்தின் நடுவே தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன் என்று சொல்லுகிறவன்.

சுகசெல்வனாயிருந்து, விசாரமில்லாமல்வாழ்ந்து, நான்தான், என்னைத்தவிர வேறொருவருமில்லையென்று சொல்லி, தன் துன்மார்க்கத்தில் திடநம்பிக்கையாயிருந்து, என்னைப் பார்க்கிறவர் ஒருவருமில்லையென்கிறவன்.”

“அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே; ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலேவிழ வெட்டப்பட்டாயே” என்று இவனைப்பற்றியே சொல்லப்பட்டிருக்கிறது.

பெருமைக்காரன் தன் பார்வைக்கு ஞானி. தனக்கு எண்ணப்பட்டதற்கு மிஞ்சி எண்ணுவான். தானே தனக்குச் சட்டம். தான் கொடுக்கிறதே மற்றவர்களுக்கும் சட்டமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறவன்.

மற்றவர்களுடைய கடிந்துகொள்ளுதலுக்கும், ஆலோச
னைகளுக்கும் செவிகொடான். "தன் வழிகளெல்லாம்
தன் பார்வைக்குச் சுத்தமானவைகள்" நீதி. 16: 2.
"எல்லாவற்றையும் வாதினாலும் வீண் பெருமையினா
லும் செய்து, தன் பெருமையினாலே தன்னை மற்றவர்க
ளிலும் மேன்மையாக எண்ணுவான்."

தனக்கடாத காரியத்தில் வேண்டுமென்று தலையிட்
டுத் தீமையைத் தன்மேல் தானே வருவித்துக்கொள்ளு
கிறவன். தானே கேட்டுக்கு அடிமையாயிருந்தும் மற்றவ
ர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம்பண்ணுவான்.
"தான் அழுக்கறக் கழுவப்படாமலிருந்தும் தன் பார்
வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிறவன்" நீதி. 30: 12.

பெருமைக்காரன் பிறருக்கானவைகளையல்ல, தனக்
கானவைகளையே எப்பொழுதும் நோக்குவான். தான்
மாத்திரம் தேசத்தின் நடுவே வாசமாயிருக்கும்படி மற்ற
வர்களுக்கு இடமில்லாமற்போகுமட்டும் வீட்டோடே
வீட்டைச்சேர்த்து வயலோடே வயலைக்கூட்டுகிறவன்.
அடுத்தவீட்டுக்காரன் நாசமாய்ப் போகவேண்டும், நான்
மாத்திரம் நன்றாயிருக்கவேண்டும்; மற்றவர்கள் அல்ல,
நானே மகிமைப்படவேண்டும்; மற்றவர்கள் பேரல்ல,
என் பேரே பேசிக்கொள்ளப்படவேண்டும்; அவனல்ல,
நானே எல்லாவற்றிலும் முதன்மையாயிருந்து யாவரா
லும் போற்றப்படவேண்டும் என்ற தன்னயமான எண்
ணங்களே இவன் இருதயத்தின் நிறைவாயிருக்கும்.

"தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமை
யென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்
தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்
திப்பைக் கசப்புமென்று சாதிப்பான்." இவனே இம்மை
யிலும் மறுமையிலும் மன்னிக்கப்படாத பரிசுத்த ஆவிக்
கு விரோதமான பாவத்தைச் செய்கிறவன்.

பெருமைக்காரனுக்குத் தன்னடக்கமே கிடையாது.
தன்னிடத்திலுள்ளவைகள் எல்லாவற்றையும் எப்படி



யாகிலும் வெளியிடப் பிரயாசப்படுவான். இப்படி அ
வன் தனக்குள்ளதெல்லாவற்றையும் வெளியிட்டுக்கொ
ண்டே இருக்கிறபடியால் இவனிடத்தில் ஒன்றுமிராது.
இவனுடைய வாயிலிருந்து புறப்படுகிறதெல்லாம் மதியீ
னமே. "மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்
படுத்துகிறான்" நீதி. 29: 11. "மூடனின் வாய் மதி
யீனத்தைக் கக்கும்" நீதி. 15: 2; 18: 2. "தான்
மூடனென்று எல்லாருக்கும் சொல்லுகிறான். மூடன்
மிகுதியாய்ப் பேசுகிறான்" பிர. 10: 4; 10: 14. இ
வனுக்கு அமைதியென்பதும் சத்தமாயில்லை. பேச்சிலும்
அமைதியில்லை, நினைவிலும் நடையிலும் அமைதியிராது.
அங்கு ஓடுவான், இங்கு ஓடுவான், சத்தமிட்டுப் பேசு
வான், சத்தமிட்டுச் சிரிப்பான்.

பெருமைக்காரனைத் தனிமையான இடங்களில் பார்ப்
பது அபூர்வம். ஐந்து நிமிஷம் தன் அறைக்குள் தனி
மையாயிருப்பது இவனுக்குக் கஷ்டமாயிருக்கும். ஜனங்
கள் கூட்டமாயிருக்கிற இடங்களில் இவனை அடிக்கடி
காணலாம். மற்றவர்கள் தன்னை எப்பொழுதும் பார்க்
கவேண்டுமென்று விரும்புகிறபடியால் இவனைத் தனி
மையான இடங்களில் நிறுத்திவைப்பது அதிகவருத்தம்.
இவனுடைய கண்கள் நேராய்ப் பார்க்கமாட்டா. அவை
கள் பல இடங்களையும் பல ஆட்களையும் பல திசைகளை
யும் நோக்கினவைகளாக இருக்கும்.

பெருமைக்காரன் மிகு எரிச்சலுள்ளவன். இவனுடைய
இருதயம் மற்றவர்களைக்குறித்து எரிந்துகொண்டே இ
ருக்கும். இவன் சதா கோபமும் எரிச்சலுமுள்ளவன்.
"மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்" பிர.
7: 9. "அகங்காரமும் இடும்புமுள்ளவனுக்குப் பரியா
சக்காரனென்று பெயர்; அவன் அகந்தையான சினத்
தோடே நடக்கிறான். எரிகிற அக்கினிபோன்றது அ
வன் உதடுகளில் இருக்கிறது" நீதி. 21: 24; 16: 27.
மற்றவர்கள் செய்கிற யாவும் இவனுக்குக் கொஞ்சமே

னும் பிடியாது. அது நன்மையானாலும் தீமையானாலும் தன் முழு இருதயத்தோடே அதை வெறுப்பான். அவர்களைப்பற்றியும் அவர்களுடைய கிரியைகளைப்பற்றியும் மற்றவர்களிடத்தில் எவ்வளவு குறைவாய்ப் பேசக்கூடுமோ அவ்வளவு குறைவாய்ப் பேசுவான். இவனுடைய வாயில் பிறக்கிற ஒவ்வொரு பேச்சும் மற்றவர்களைக் குறைகூறுகிற பேச்சாகவே இருக்கும். கோட்சொல்லுதல் இவனுக்கு மெத்தப் பிரியம்.

பெருமை பொறாமையை உண்டாக்கும். பெருமைக்காரன் மற்றவர்கள் புகழப்பட விரும்புவான். மற்றவர்கள் நன்றாயிருப்பதையும் பொறுக்கமாட்டான். மற்றவர்கள் நன்றாயிருப்பதையும், அவர்களுடையபேர் மேன்மையாகப் பேசிக்கொள்ளப்படுவதையும் காண்பானானால், அதுவே அவனுக்கு இவ்வுலகத்திலுள்ள வருத்தங்களெல்லாவற்றிலும் அதிக வருத்தமும் சஞ்சலமுமாயிருக்கும். "உக்கிரம் கொடுமையுள்ளது, கோபம் நிஷ்டூரமுள்ளது; பொறாமையோவென்றால் அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார்?" நீதி. 27 : 4.

பெருமை தன்னைப் புகழும், தற்பொழிவை நாடும். பெருமைக்காரன் தன்னைக்கொண்டு தன்னை அளந்து, தன்னையே தனக்கு ஒப்பிட்டு தன்னைத்தானே மெச்சிக்கொள்ளுவான்.

இவன் தான் மற்றவர்கள் பார்வையில் எப்படியிருக்கிறான் என்பதை அறியான். அவர்கள் தன்னைக்குறித்து எப்படி நினைத்திருக்கிறார்கள் என்பதும் சுத்தமாய்த் தெரியாது. இவன் மற்றவர்களால் மிகவும் வெறுக்கப்படத்தக்கவன். மற்றவர்களால் தான் எவ்வளவாய் வெறுக்கப்படுகிறான் என்பது இவனுக்குக் கொஞ்சமேனும் தெரியாது. ஜனங்கள் தன்னைப் பார்க்கும்படியாகவும் தன்னை மதிக்கும்படியாகவும் அவர்கள்முன் எத்தனையோ காரியங்களைச் செய்துபார்க்கிறான். அவர்களோ அவனையும் அவன் கிரியைகளையும் பாராதபடி தங்கள் கண்



களை அவனைவிட்டு மறைக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் கனத்தையும் மகிமையையுமே தேடிக்கொண்டு திரியும்போது இவனை யார் மதிப்பார்கள்?

தன் பேரையும் அந்தஸ்தையும் காத்துக்கொள்ள அறியான். ஒரு சிறுபிள்ளைகூட இவனை அற்பமாய் எண்ணத்தக்கதாக மதியீனமான காரியங்களையே எப்பொழுதும் செய்துகொண்டு திரிவான்.

பிலிப்பியர் இரண்டாம் அதிகாரம் கிறிஸ்துவானவருடைய தாழ்மையை விஸ்தரிக்கிறதுபோல, யோபின் ஆகமம் இருபத்தொன்பதாம் அதிகாரம் பெருமைக்காரனுடைய குணங்களை அதிகமாய் விஸ்தரிக்கிறது. இந்த அதிகாரத்தில் நான், என், எனக்கு என்ற வார்த்தைகள் நாற்பதுக்குமேல் வருகின்றன. இதை பெருமைக்காரன் தன்னைக்குறித்துக் கொடுக்கும் சாட்சியின் அதிகாரம் என்று சொல்லலாம். ஒன்பதாம் சங்கீதத்திலும் இவனுடைய குணங்கள் நன்றாய் வரையப்பட்டிருக்கின்றன.

பெருமைக்காரனுடைய குணங்கள் இவைமாத்திரமல்ல. இவைகளையும் இன்னும் சிலவற்றையும் அடுத்த அதிகாரங்களில் அதிக விஸ்தாரமாய்ப் பார்ப்போம். அவைகளில், பெருமைக்காரன் தன் குணங்களைத் தன் கிரியைகள் மூலமாய் எப்படிக் காட்டுகிறான் என்பது விபரமாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

பிரதான தீமையாகிய பெருமை.

## III. அதிகாரம்.

### பெருமையும் அதின் கிரியைகளும்.

பெருமை இவ்வுலகில் தன் கிரியைகளை நடப்பிக்கும் விதம் இன்னதென்று அறிவது இக்கொடிய சத்துருவுக்குத் தப்பித்துக்கொள்வதற்கு மிகவும் உதவியாயிருக்கும். விசேஷமாக, நமது அன்றாடக ஜீவியத்தில் அது எப்படிக் காணப்படுகிறது என்று கூர்ந்து கவனிக்கவேண்டும். பெருமையானது அகம்பாவம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது, அது ஒவ்வொருவனுடைய உள்ளத்திலேயே கிரியை செய்யக்கூடியது. உள்ளத்திலிருக்கிறதாகிய இது, தன்னையும் மற்றப் புறம்பான காரியங்களையும் எதுவாகக்கொண்டு தன்னை வெளியேற்றப் பிரயாசப்படுகிறது. இதை நன்றாய் அறியவேண்டுமானால் நாம் விசேஷத்தோடும் செய்துவருகிற ஒவ்வொரு கிரியையையும் அதிக திட்டமாய்க் கவனித்து, அதின் தந்திரங்கள் எவையென்றும், அது தன்னை வெளிப்படுத்தும்படி தனக்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளுகிறவைகள் எவையென்றும் ஆராய்ந்து அறியவேண்டும். இப்படி நாம் நமது ஜீவியத்தின் ஒவ்வொரு கிரியையையும் திட்டமாய் ஆராய்ந்து பெருமை நமது ஜீவியத்தின் ஒவ்வொரு காரியத்திலும் கலந்தே இருக்கிறதென்று கவனிக்கும்போது, அதின் அகோரத்தையறிந்து அதற்குத் தப்பித்துக்கொள்ள வகைதேடுவோம். பெருமைக்காரன் தான் மற்றவர்களிடத்திலிருந்து கனத்தையும் புகழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக தனக்குள்ளேயும், புறம்பேயும் உள்ள சகலத்தையும் தனக்கு உதவியாகக்கொண்டு ஜீவிக்கிறான்.



**1. தன் சரீரத்தையும் அதின் ஒவ்வொரு அவயவத்தையும் தனக்கு ஆதாரமாகக் கொள்ளுகிறான்.**

"பின்னும் கர்த்தர் சொல்லுகிறதாவது: சீயோன் குமாரத்திகள் அகந்தையாயிருந்து, கழுத்தை நெறித்து நடந்து, கண்களால் மருட்டிப்பார்த்து, ஒய்யாரமாய் நடந்து, தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத்திரிகிறார்கள். ஆதலால் ஆண்டவர் சீயோன் குமாரத்திகளின் உச்சந்தலையை மொட்டையாக்குவார்; கர்த்தர் அவர்கள் மானத்தைக் குலைப்பார்" (ஏசா. 3: 16, 17).

(*a*) கண்.

கண்களால் ஒருவிதமாய் மருட்டிப்பார்க்கிறதினாலும், அவைகள்மூலமாய்ப் பலவித சைகைகள் காட்டுகிறதினாலும் ஜனங்கள் தன்னைக்கூர்ந்து கவனிக்கும்படி செய்கிறான். அவனுடைய கண்களோடு முகமும் சேர்ந்து கிரியைசெய்கிறது. தன் கண்களையும் முகத்தையும் ஒருமாதிரி நிலைமையில்வைத்து துக்கமுகத்தையாவது சந்தோஷ முகத்தையாவது காட்டுகிறதினாலும், தன் கண்களை மூடி, கன்னத்தை ஒருமாதிரி சுருங்கவைத்து நடிக்கிறதினாலே மற்றவர்கள் தன்னைப்பார்த்து ஏதோ ஒருவகையாய் நினைத்துத் தன்னோடு அனுதாபப்படவேண்டுமென்று நினைக்கிறதினாலும் ஒருவனுக்குப் பெருமைவருகிறது. சிலர் தங்கள் கண்களுக்கு அனாவசியமாக மையிட்டுப் பெருமையாய் நடக்கிறதும் உண்டு. பார்வைக்குறைவுள்ளவர்கள் போடும் தங்கள் மூக்குக் கண்ணாடிகளின் மூலமாகவும் அவர்களுக்குப் பெருமை வரலாம்.

(*b*) வாய்.

எல்லா அவயவங்களிலும் வாயே பெருமைக்காரனுக்கு அதிக உதவியாயிருக்கிறது. அவன் தன் வாயினால் பேசும் பெருமையான வார்த்தைகள் எத்தனை ஏராளம்! தன் சத்தத்தை மற்றவர்கள் எப்படியாகிலும் கேட்க

வேண்டுமென்று எண்ணி உரத்தசத்தமாய்ப் பேசுகிறதி
னாலும், தன்னை அவர்கள் கூர்ந்து கவனிக்கும்படியாக
அதிக மெதுவாய்ப் பேசுகிறதினாலும், அவர்கள் தன்னோ
டு அநுதாபப்படும்படியாகச் சற்று துயரக் குரலோடு
பேசுகிறதினாலும், சிரிப்புவராவிட்டாலும் ஒருவகையாய்ச்
சிரிக்கப் பிரயாசப்படுகிறதினாலும் மற்றவர்களிடத்தி
லிருந்து கனத்தைப் பெற்றுக்கொள்ளும்படி நினைக்கி
றான். இவனுடைய சத்தத்தை வீட்டிலும் கேட்கலாம்,
வெளியிலும் கேட்கலாம். அநேக ஜனங்கள் கூடியிருக்
கிற இடங்களில் இவனுடைய சத்தம் எல்லாருக்கும் மே
லாகக் கேட்கும். பாட்டுப் பாடினால் இவனுடைய தொ
னிதான் எல்லாருக்கும் மேலாக இருக்கும். மற்றவர்க
ளுக்குச் சிரிப்பு உண்டாக்கத்தக்க வார்த்தைகளைப் பேசு
வதில் அதிக சாமர்த்தியமுடையவன். இவனுடைய
வார்த்தைகள் சகலவித கேலியும் பரியாசமும் நிறைந்த
வைகளே. மற்றவர்களைச் சந்தோஷப்படுத்தவும் அவர்
களைச் சிரிக்கப்பண்ணவும் எப்பொழுதும் கேலியும் பரி
யாசமுமான வார்த்தைகளையே சகஜமாய்ப்பேசிக்கொண்
டிருக்கிறவர்கள் அதிக எச்சரிக்கையாயிருக்கவேண்டிய
தவசியம். போக்குச்சொல்ல இடமில்லை. இப்படிப்
பேசுவதினாலே மற்றவர்கள் கெட்டுப்போகிறார்கள், அ
வர்களுக்கு நன்மையைத்தானே உண்டாக்குகிறது, அ
தில் என்னபாவமிருக்கிறது என்று சொல்லித் தங்களைத்
தேற்றிக்கொள்வதினாலே பிரயோஜனமில்லை. தங்களுக்
கு மகிமையையும் புகழ்ச்சியையும் தேடும்படியாக அப்ப
டிச் செய்யும்போது அது அவர்களுக்குப் பாவமாக எண்
ணப்படும். நாவினால் விளையும் தீமைகளைப்பற்றி அடுத்
த அதிகாரத்தில் விஸ்தாரமாய்ப் பார்ப்போம்.

வெற்றிலைபாக்குப் போடுகிற வழக்கம் நமது தேசத்
திற்கு எப்படி வந்தது? அதைப் போடுகிறதினாலுண்
டாகும் ஒரு வகைச் சிவப்புச் சாயத்தினால் தங்கள் பற்
களுக்கும், உதடுகளுக்கும் அழகைத்தேடிப் பெருமைபா



ராட்ட நினைத்ததினாலேயே அந்த வழக்கம் ஆரம்பித்தது
என்று சொல்லக்கூடாதா? வெற்றிலைபாக்கில் விஷ
மிருக்கிறதென்று அநேகர் ருபித்திருக்கிறார்கள். அதைப்
போடுகிறதினால் நன்மையுண்டு என்று சொல்லுகிறவர்
கள் ஒரு போக்காகச் சொல்லுவார்களேயொழிய மற்றப்
படியல்ல. வெற்றிலைபாக்குப்போடுகிறதின் அநாவசியத்
தையும், அதினால்வரும் பண நஷ்டத்தையும், அது தேகத்
தில் செய்யும் கெடுதிகளையும் நினைத்து அதை முற்றி
லும் விலக்கிப்போடுவார்களானால் அதிக நன்மையாயும்
தேவனுக்குப் பிரியமாயுமிருக்கும். சிலர் தங்கள் மேல்
வாயின் இரண்டு முன்பக்கத்துப் பற்களில் தங்கத்தினால்
பொட்டுப்போடுகிறதைப் பார்த்திருக்கிறோம். தாங்கள்
சிரிக்கும்போதும் பேசும்போதும் அப்பற்களிலிருக்கும்
தங்கம் மினுங்குவதினாலே தங்கள் பல்லழகை மெச்சிக்
கொள்ளவேண்டுமென்றே அப்படிச் செய்கிறார்கள். பெ
ருமையானது எவ்வளவு அநாவசியமான காரியங்களையும்
செய்யச்சொல்லி ஜனங்களை அடிமைப்படுத்திப்போடு
கிறதென்று பார்க்கிறோம்.

### (c) கழுத்து.

"சீயோன் குமாரத்திகள் தங்கள் கழுத்தை நெறித்து
அகந்தையாய் நடக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லு
கிறார்." கழுத்தை நெறித்து நடக்கிறது என்ன என்பது
அப்படி நெறித்து நடக்கிறவர்களுக்குத்தான் நன்றாய்த்
தெரியும். இது எப்படி என்று இங்கு விஸ்தரிக்கவேண்
டியதில்லை. இதை அவரவருடைய அநுபவத்தில் அறிந்
துகொள்ளவேண்டியது. கழுத்து நிறைய நகைபோட்டு
கிறவர்களைக் கவனித்திருக்கிறோம். கழுத்துக்கு வேதனை
உண்டாக்கத்தக்கதாக அதிகம் நகைபோட்டிருக்கிறவர்
களைப்பற்றி நம்மிலனேகர் அநுதாபப்பட்டுமிருப்போம்.
இவர்கள் இப்படிப்போடுகிறதற்குக் காரணமென்ன?
இதற்கும் பெருமையே காரணம் என்று சொல்லக்கூடா

தா? நகை போடுகிறது பாவமோ? இக் கேள்விக்கு அவரவர்தான் மறுமொழிகொடுக்கவேண்டியது. நகை விஷயங்களைப்பற்றி இன்னும் இரண்டொரு இடங்களில் எழுதியிருக்கிறதை வாசிக்கும்போது சிலருக்குக்கோபம் உண்டாகலாம். என்றாலும் அப்படிச்செய்கிறது சரியென்றும் நன்மையென்றும் கண்டால், தங்களுடைய மனச்சாட்சிக்கும் தேவனுடைய சித்தத்திற்கும் விரோதமில்லாமல் செய்யவேண்டியது. நகைபோடுகிறது அவசியமா, தேவன் இதில் பிரியப்படுவாரா என்னும் கேள்விகளைக்கேட்டு அதற்குச் சரியான உத்தரவுசொல்லப் பிரயாசப்பட்டால் நலமாயிருக்கும். மற்றவர்கள் கேவலமாய் எண்ணுவார்களே, நகைபோடாவிட்டால் அவர்கள் எளிக்காட்டுவார்களே, சரீர அழகற்றுப்போகுமே என்று நினைத்து இவைகளுக்காகமாத்திரம் போடுகிறதாயிருந்தால் பெருமைக்காகத்தான் போடவேண்டியிருக்கிறது. அத்தியாவசியமாகக் காணப்படுகிறதெதுவோ அதைத் தகுதியாய்ப் போடலாம். இக்காரியங்கள் அவரவருடைய பிரியத்தையும் அவசியத்தையும் பற்றினதாக இருப்பதினால் இதைப்பற்றி அதிகம் எழுதத்துணியேன்.

(d) தலை மயிர்.

புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும், தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். தங்களுக்குக் கனமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற தலைமயிரை சிலர் கனவீனப்படுத்துகிறார்களென்பதை அறிவோம். இவர்கள் தலைமுழுகினால் வீட்டுக்குள் அடக்கமாயிருந்து தங்கள் முடியை உலர்த்தமாட்டார்கள். அச்சமயந்தான் தங்கள் தலைமயிரின் நீளத்தையும் அழ



கையும் மற்றவர்களுக்குக் காட்டத்தக்க நேரம் என்று எண்ணுவார்கள். இதுமாத்திரமல்ல, தங்கள் தலையைப் பலவிதமாய்ச் சிங்காரிக்கவும் செய்வார்கள். இதிலுங் கூடப் பெருமை இருக்கிறதென்று சொல்வது எனக்கு அதிக விசனமாயினும் மற்றவர்களுடைய நன்மையைக் கருதியே துணிந்து இவ்வளவு தெளிவாய் ஒவ்வொன்றையும் எழுதப் பிரயாசப்படுகிறேன். பொறுமையோடு தங்கள் குறைவுகளைக் கண்டுபிடித்து அதினால் பிரயோஜனமடைகிறவர்கள் பாக்கியவான்கள்.

(e) கை.

ஏதாவது ஒரு காரியத்தைப் பேசும்போது மற்றவர்கள் கவனத்தை இழுக்கத்தக்கதாகத் தன் கையினால் பலவித அபிநயங்கள் செய்கிறதினாலும், நடக்கும்போது பலவகையாகக் கைவீசி நடக்கிறதினாலும் ஒருவனுக்குப் பெருமை வரக்கூடியது இயல்பே. பெண்கள் தண்ணீர் எடுக்கப்போகும்போது தங்கள் கைகளை வீசிக்கொண்டு நடப்பதை அதைப் பெருமையாய் எண்ணுவார்கள். கைகளுக்கு மோதிரங்களும், காப்புகளும், வளையல்களும் இன்னும் சில நகைகளும் போட்டு அவைகளை அலங்கரிக்கிறதும் உண்டு. ஒரு நிமிஷத்திலிருந்து அடுத்த நிமிஷத்தில் உடைந்துபோகக்கூடிய வளையல்களுக்குச் செலவழிக்கப்படுகிற பணம் எவ்வளவு! இப்படிச் செய்ய வேண்டுவதேன்? சிலர் தங்கள் கைகளில் பச்சைகுத்துகிறதும் நகங்களுக்கு அழகு உண்டாகத்தக்கதாக மருதோன்றி போடுகிறதும் எதற்காக?

(f) கால்.

மற்றவர்கள் பார்க்கத்தக்கதாக அதிக விரைவாயும் அவசரமாயும் நடப்பதினாலும், மெதுவாய் நடந்தால் அது மற்றவர்களுக்குத் தெரியாது ஆகையால் விரைவாய் ஓடினால் ஏதோ ஒரு அவசரமான காரியமாய் ஓடுகிறான் என்று அவர்கள் நினைக்கத்தக்கதாக ஓடுகிறதினாலும்,

தன்னை அதிகப் பெலவீனனென்றும் வியாதியஸ்தனென்றும் அல்லது ஏதோ ஆழ்ந்த யோசனைகளை யோசித்துக்கொண்டு போகிறவனென்றும், ஒரு ஆக்கமான செய்தியைத் தான் பெற்றுக்கொண்டவனென்றும் மற்றவர்கள் நினைத்துத் தன்னோடு அனுதாபப்படும்படியாக மிகவும் மெதுவாக நடித்துக்கொண்டு நடக்கிறதினாலும் ஒருவனுக்குப் பெருமை வருகிறது. விளையாட்டு ஸ்தலங்களில் ஒருவனுக்கு அதிகப் பெருமை வரக்கூடியதே. கால்களில் போடும் பாதரக்ஷைகளினாலும், தண்டை, பாதசரம் முதலிய நகைகளினாலும் பெருமை வருகிறது. "சீயோன் குமாரத்திகள் ஒய்யாரமாய் நடந்து தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிகிறார்கள்" என்று கர்த்தர் விசனத்தோடு நம்மில் யாரையாவது பார்த்துச் சொல்லாதபடி எச்சரிக்கையாய் நடப்போமாக. "ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்குசெய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே."

## பொது.

ஆண்களும் பெண்களும் நகைகளினால்மாத்திரமல்ல, உயர்ந்த பட்டுவஸ்திரங்களினாலும் இன்னும் சிலவற்றாலும் தங்களை அலங்கரிக்கிறார்கள். பட்டுவஸ்திரங்களையும் இன்னும் அதிகம் விலையேறப்பெற்ற வஸ்திரங்களையும் அவசியமில்லாமல் உடுத்துகிறதாயிருந்தால் அவைகளைப் பெருமைக்காகத்தான் உடுத்தவேண்டியதாயிருக்கிறதென்று சொல்லக்கூடாதா? இதுவிஷயத்திலும் நான் பயத்தோடும் நடுக்கத்தோடும்தான் பேசவேண்டியவனாயிருக்கிறேன். சீதோஷ்ண ஸ்திதிக்கும் தங்கள் சுகத்திற்கும் ஏற்ற விலையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்துகிறதைப்பற்றிக் குறைவாய்ப் பேசத் துணியேன். மற்றவர்களிடத்திலிருந்து வீண் புகழ்ச்சியையும் கனத்தையும் மதிப்பையும் பெற்றுக்கொள்ளுகிறதற்கென்று வீணாக அநேக பணத்தைச்செலவழித்து விலை உயர்ந்த வஸ்திரங்களை அனாவசியமாக உடுத்துகிறதைப்பற்றித்தான் இங்கு பேசப்படுகிறது. சிலருக்கு வஸ்திரங்களும் நகைகளுமே அவர்கள் தெய்வமாயிருக்கிறது. அவைகளே அவர்களுடைய நாட்டமும் தேட்டமும். அவர்களுடைய பேச்செல்லாம் அவைகளைப்பற்றித்தான். ஸ்திரீகள் இவ்விஷயத்தில் தங்கள் புருஷருக்கு அதிகப் பாரமாயும் அதிகக் கவலையை உண்டுபண்ணுகிறவர்களாயுமிருக்கிறார்கள். தங்களுக்கு இவைகள் அனாவசியமாகத்தோன்றினபோதிலும்: அந்தப்பெண் இவ்வளவு விலையுள்ள வஸ்திரம் உடுத்தியிருக்கிறாளே, இவள் இத்தனை ரூபா நகைபோட்டிருக்கிறாளே. நான்மாத்திரம் இப்படிக் கோட்டிக்காரிபோலிருக்க வேண்டுமா, நாலுபேர் என்னைப்பார்த்துச் சிரித்துப்போடுவார்களே என்று தினந்தினம் இப்படித் தொந்தரவுசெய்து, கடன்பட்டாகிலும், இன்றைக்குக் கஞ்சித்தண்ணீருக்கு இல்லாவிட்டாலும் வாங்கிக்கொடுக்கத்தான் வேண்டுமென்று சாதித்துவிடுப்பார்கள். தாங்கள் விரும்பினது கிடைத்தால்தான் அவர்களுக்குச் சந்தோஷம். அது கிடைக்குமளவும் மனதில் எவ்வளவு கோபம், வீட்டிலே ஓயாத சண்டை, வேலைகளைச் செய்வதில் எவ்வளவு ஒழுங்கீனம்! தாங்கள் விரும்பினதெல்லாம் கிடைத்துவிட்டால் அதுவே அவர்களுக்குப்போதும். அப்புறம் பேச்சும் நடையும் வித்தியாசப்பட்டுப்போம். அருமையான சகோதரிகளே, உங்களோடு அன்போடு பேசுகிறேன். "மயிரைப் பின்னி பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்ப

யிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இரு
தயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்
காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்
வையில் விலையேறப்பெற்றது" என்றும், "சவுந்தரியம்
வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படு
கிற ஸ்திரீயே புகழப்படுவாள்" (I பேது. 3: 3; நீதி. 31:
30) என்றும் சத்தியவேதம் உரைக்கிற அருமையான
வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து அவைகளின்படி
செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். நீங்
கள் மனுஷருடைய பார்வையில் அழகற்றவர்களாய்த்
தோன்றினபோதிலும் தேவனுடைய பார்வையில் மிக
வும் விலையேறப்பெற்றவர்களாயிருப்பீர்கள்.

தேவனுடையவார்த்தைகளுக்குச் செவிகொடாமலும்,
அவரால் இனிமேல் தங்களுக்குக் கிடைக்கப்போகிற
கனத்தையும் மேன்மையையும் மதியாமலும் உலகத்தின்
மதிப்பையே பெரிதாக எண்ணி இப்படிப் புறம்பாகத்
தங்களை அலங்கரித்துக்கொண்டு திரிகிறவர்கள் பிரயோ
ஜனமானவைகளிலே தங்கள் மனதைச் செலுத்தாமலும்,
பரத்துக்கடுத்தவைகளை நினைத்துச் சிந்தியாமலும், வீ
ணும் வியர்த்தமுமான காரியங்களிலேயே தங்கள் மன
தைச்செலுத்தி, ஒன்றுக்கும் உதவாதவைகளும் மிகவும்
அற்பமாய்க் காணப்படுகிறவைகளுமான வார்த்தைகளை
யே பேசிக்கொண்டு திரியவும் பிரியப்படுவார்கள். தங்
கள் வீடுகளில்கூட அதிகமாய்த் தரித்திருக்கமாட்டார்
கள். அடுத்தவீடுகளில்தான் இவர்களைப்பார்க்கலாம். கூட்
டங்கூட்டமாய்க் கூடிப்பேசுவார்கள். இவர்கள் பேச்
சைக்கவனித்தால் அதெல்லாம் வஸ்திரங்களைப்பற்றியும்,
நகைகளைப்பற்றியும், தங்கள் அழகைப்பற்றியுந்தானிரு
க்கும். தேவனுக்கடுத்த பேச்சுகள் இவர்கள் வாயிலி
ருந்து புறப்படுவது அபூர்வம். ஜெபிக்கவாவது வேதம்
வாசிக்கவாவது மனம்வராது. இவர்களில் சிலர் அதி
கம் படித்தவர்களாயிருப்பினும் தங்கள் ஆத்துமாக்களுக்



குப் பிரயோஜனமானவைகளும் தங்களுக்கு அறிவைக்
கொடுக்கக்கூடியவைகளுமான புஸ்தகங்களை வாசிக்க
வும் பிரியப்படார்கள். இவர்களுடைய நேரமெல்லாம்
வீண்பேச்சிலும், கதையிலும், சிரித்துவிளையாடுவதிலு
மே கழியும்.

ஓய்வுநாளாவது, பண்டிகை நாட்களாவது, வேறு வி
சேஷித்த தினங்களாவது வந்துவிட்டால் பெருமைக்
காரருக்கு மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிக சந்தோஷ
மிருக்கும். கூட்டங்களுக்குப் போகத் தவறமாட்டார்
கள். காரணமென்ன? தேவனுடைய ஆலயத்திற்குப்
போய் அவரைத் தரிசித்து மனம்மாறித் திரும்பிவரலா
மென்ற நோக்கத்தோடே போகிறார்களோ? அநேக
மாய் அப்படியல்ல. இன்றைக்கு அநேக ஜனங்கள் அங்
கு வருவார்கள், அவர்களெல்லாரும் பார்க்கத்தக்கதாக
நன்றாய் உடுத்திச் சிங்காரிக்கவேண்டும் என்று நினைத்
தே அதிக சந்தோஷப்பட்டுப் போகிறார்கள். கூட்டங்
களிலிருக்கும்போது அவர்களுடைய மனதில் எழும்பும்
எண்ணங்கள்: எல்லாருடைய கண்களும் என்மேல்தான்
நோக்கமாயிருக்கின்றன. எல்லாரைப்பார்க்கிலும் நான்
தான் அழகாயிருக்கிறேன். என்னைப்பற்றித்தான் எல்
லாரும் நன்றாய் நினைக்கிறார்கள் என்பவைகளே. கூட்
டத்தில் பேசப்படும் காரியங்கள் ஒன்றும் இவர்கள் மன
தில் ஏறாது. தாங்கள்தான் பிரசங்கிக்கிறவனை அதிகமா
ய்க் கவனிக்கிறவர்களென்றும், பிரசங்கத்தினால் உணர்
வடைந்தவர்களென்றும் மற்றவர்களுக்கு முன்பாகக்
காணப்படவும் அதிக தந்திரமெடுத்துக்கொள்வார்கள்.
இதுவிஷயத்தில் மற்றவர்களால் குறைவாய் எண்ணப்
படாதபடி மாய்மாலமாய் நடந்துகொள்ளுவார்கள். கூட்
டத்தில் தங்களை ஒருவரும் பார்க்கவில்லையென்றும், மற்
றவர்களால் கவரப்படவில்லையென்றும் கண்டால், மற்ற
வர்களுடைய பார்வையும் கவனமும் தங்கள்பேரில்
செல்லத்தக்கதாக கூட்டத்தைவிட்டெழுந்து அடிக்கடி
2

வெளியேபோய் உலாவுவார்கள், சொருகுவார்கள், மற்றவர்களுடைய காதுகளில் பல காரியங்களை கசகுசென்று ஓதிக்கொண்டிருப்பார்கள். கூட்டம் முடிந்தவுடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிற காரியங்களென்ன? தங்கள் ஆத்தும இரட்சிப்புக்கடுத்த [illegible] அதிகமாய்ப் பேசமாட்டார்கள். பின்னை [illegible]ப் பற்றி? இந்த வஸ்திரத்தின் வி[illegible]லையென்ன? அந்த நகை எவ்வளவுக்குச் செய்தது? அந்த ஆள் [illegible]றைக்கு நன்றாய் உடுத்தியிருந்தது. நான் [illegible]க்கு அவ்வளவு நன்றாய் உடுத்தவில்லையென்று பலவிதமாய்ப் பேசி சிரித்துக்கொண்டும், தங்கள் ஆத்துமாக்களுக்கு யாதொரு பிரயோஜனமுமில்லாமல் பா[illegible] பாவத்தைச் சம்பாதித்துக்கொண்டும் [illegible] வெறுமையாய் வீட்டிற்குத் திரும்பிப்போவார்கள். [illegible] இவர்களுக்குக் கிடைத்த பலன்.

இன்னும் சிலவற்றைப் பொதுவாகப் பார்ப்போம். மாட்டுவண்டியில் ஏறிப்போவதைப்பார்க்கிலும் குதிரை வண்டியில் ஏறிப்போவது பெருமையாம். ரெயில் வண்டியிலாவது, குதிரை, சாரட் வண்டிகளிலாவது இன்னும் தற்காலத்துச் [illegible] வண்டிகளிலாவது ஏறிப் போகும்போது அங்கும் இங்கும் பார்ப்பார்கள். மற்றவர்கள் தங்களைப்பார்த்து மதிக்கிறார்களா என்று [illegible]ப்பார்கள். அவர்களை யார்தான் பார்த்து மெச்சிக்கொள்ளப்போகிறார்கள்? அவர்கள்மேல் பொறாமைப்பட்டு அவர்களை வெறுக்கிறதற்கு இவ்வுலகில் ஆட்களிருக்கிறார்களேயொழிய அவர்களுக்குக் கனத்தை [illegible]க்கப் போகிறவர்கள் இருக்கிறார்களோ? மண் குடங்களில் தண்ணீர் எடுப்பதிலும் செப்புக்குடங்களில் தண்ணீர் எடுப்பதை அதிகப்பெருமையாக நினைப்பார்கள். மண் கலயம் அல்லது சட்டியைத் தூக்கிக்கொண்டுபோவது கனவீனமாம். சருவச்சட்டி அல்லது செப்புத்தவலையோ அதை மற்றவர்கள் பார்க்கத்தக்கதாக சந்தோஷத்



தோடு தூக்கிக்கொண்டுபோவார்கள். சிலபேர் தங்கள் வீடுகளில் ஏராளமான வெண்கலபாத்திரங்களை வாங்கி வைக்கப் பிரியப்படுவார்கள். எதற்காக? அதிகாலையில் எடுத்து அவைகளையெல்லாம் முற்றத்தில் பரப்பி விளக்கும்போது மற்றவர்கள் அவைகளின் மிகுதியைக் கண்டு அவர்களை மெச்சிக்கொள்ளும்படியாகத்தான். சில பாத்திரங்கள் அநேகவருஷங்களாக உபயோகப்படாமல் துருப்பிடித்துக்கூட இருக்கும்.

பலவித வாத்தியக்கருவிகளை வாசிக்கிறதில் அதிகத் திறமையுடையவர்களுக்குப் பெருமை அதிக இலேசாக வரக்கூடியதே. இவர்களிடத்திற்கு அநேகர் கூட்டங் கூட்டமாய் வருகிறதுண்டு. மனுஷக்கூட்டங்களை [illegible]கிறதற்குச் சிலாக்கியம் பெறுவார்கள். விசேஷித்த சந்தோஷ சமயங்களில் இவர்கள் அழைக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட சமயங்களில் இவர்களுக்கு வரக்கூடிய பெருமை அதிகம். பயங்கரமான பாவங்களுக்கு உட்படக்கூடியவர்களாயுமிருக்கிறார்கள்.

ஒரு மனுஷன் பசியோடு ஒரு சிநேகிதனுடைய வீட்டிற்கு வருகிறான். வீட்டிலுள்ளவர்கள் அவனைப்பார்த்து, [illegible] சாப்பிடுங்கள் என்று சொல்லும்போது, அவன் நான் [illegible] பொழுதுதான் சாப்பிட்டுவிட்டுவந்தேன், அதி[illegible]லை என்பான். இவன் சாப்பிடவில்லையென்று சம் பசியி[illegible] நன்றாய்த்தெரியும். மறுபடியும் மறுபடியும் அவர்களுக்[illegible]டிச் சாப்பிடச்சொல்லுவார்கள். பிற்பாடு அவனை அவ[illegible]ர்த்து சாப்பிடத்தொடங்குவான். அவர்கள் அவன் உ[illegible] சொன்னவுடனே சாப்பிட்டால் தன்னைக் கள் சாப்பிட[illegible] எண்ணிவிடுவார்களாம். சாப்பிடும்போது சேவகமாய் [illegible] வரும்போது வேண்டாமென்று சொல்லுவான். மறுசாதம்போ[illegible] நேரம் அலட்டினபிறகு வாங்கிச் சாப்பிடுவான். அ[illegible] அரைவயிறு நிறைந்திருந்தாலுங்கூட பிடுவான். [illegible]ாமல்போய்விடுவார்கள். கொஞ்சம் மறுசாதம் வ[illegible]

சாப்பிடுகிறவர்கள் என்று தங்களை நினைத்துக்கொள்ள வேண்டுமென்றே அப்படிச் செய்கிறார்கள். பெருமை இலேசாகக் கிரியைசெய்கிற இதைப்போலொத்த வராளமான அற்பசொற்ப காரியங்களுமுண்டு. அவைகளைப் பற்றி அதிகமாய் விஸ்தரிக்கவேண்டிய தவசியமில்லை. பெருமையின் கிரியைகளை நுட்பமாய்க் கவனித்து வருவோமானால் நமது அன்றாடகக் காரியங்கள் ஒவ்வொன்றிலும் பெருமைகாணப்படுகிறதென அறியலாம். அவைகள் ஒவ்வொன்றையும் எழுதத்துவக்கினால் நமது ஜீவிய காலமே போதாதென்றும், எழுதப்படும் புஸ்தகங்களுக்கும் கணக்கிராது என்றும் நினைக்கிறேன்.

கலியாண காலங்களில் நமது தேசத்தார் அதிகமாய்க் கடன்படுகிறார்கள். ஒருவன் கூலிக்காரனாயிருந்தாலும் சொற்பசம்பளம் வாங்குகிறவனாயிருந்தாலும், ஒரு ஆஸ்திக்காரனைப்போல் டம்பமாக அச்சமயங்களில் செலவழிக்கப் பிரயாசப்படுகிறான். இவன் இப்படிக் கடன் படுவதினாலே ஆயுள்பரியந்தமும் கஷ்டப்பட்டு மிகவும் கேவலமான நிலைமைக்கு வரக்கூடியவனாயிருக்கிறான். இப்படிக் கடன்படுவதற்குக் காரணமென்ன? இப்படிப் பட்ட விசேஷ சமயங்களில் ஜனங்கள் தன்னைத் தாழ்வாக எண்ணி யேசிக்காட்டக்கூடாது, அவர்கள் தன்னை மெச்சிப்பேசவேண்டும் என்ற பெருமையான எண்ணமே அதற்குக் காரணம். என்ன கடன்பட்டாகிலும் காரியத்தைமாத்திரம் சற்று முறுக்காய் நடத்திவிடவேண்டும், பிற்பாடு என்னபாடுபட்டாலும் கடனைத் தீர்த்துப் போடலாம் என்று இலேசாக நினைத்துக் கஷ்டத்திற் குள்ளாகிறான். இன்னான் இவ்வளவு பணஞ் செலவிட்டான், இத்தனைபேருக்கு இத்தனைதரம் விருந்து செய்தான், கலியாணத்திற்கு இன்ன இரதம் வந்தது என்று மற்றவர்களால் பேசிக்கொள்ளப்படுகிறதை விரும்பியே வீண்செலவுசெய்து கடன்படுகிறான். கலியாணங்களில் எவ்வளவு பணம் வீணாகச் செலவழிக்கப்படுகிறது! அ-



நேக வருஷங்களாய் வயிற்றை வாயை ஒறுத்துச் சம்பாதித்து வைத்திருந்த பணமெல்லாம் இரண்டொரு நாட்களில் கையைவிட்டுப் போய்விடுகிறது. அந்தச் சமயத்தில் பணத்தின் அருமை தெரிகிறதில்லை. மூன்றே முக்கால் நாழிகைக்கு ஒரு மேளக்காரனுக்குக் கொடுக்கப்படும் பணம் எவ்வளவு! ஒரு தெருவிலிருந்து இன்னொரு தெருவிற்குப் பட்டணப்பிரவேசம் போகிறதற்கு ஒரு இரதத்திற்கு அல்லது பல்லக்குக்குச் செலவழிக்கப்படுகிற பணம் எவ்வளவு! ஆ, ஜனங்கள் கலியாண காலங்களில் தங்கள் பணத்தை மட்டாய்ச் செலவிடப் பழகுவார்களானால் பிற்காலத்தில் எவ்வளவு சந்தோஷமும் திருப்தியுமுள்ளவர்களாய் ஜீவிப்பார்கள். கலியாணத்தில் அனாவசியமாக 200 ரூபா செலவழிக்கிறவர்கள் 50 ரூபாமட்டும் செலவழிக்கப் பிரயாசப்பட்டால் மற்ற 150 ரூபாவுக்கு அநேக நாட்களாய் நல்ல சாப்பாடு சாப்பிடலாமே. மற்றவர்கள் என்ன நினைத்தாலும் நினைக்கட்டும். அவர்கள் புகழ்ந்து பேசுகிறதினால் யாதொரு மேன்மை வரப்போகிறதுமில்லை, இகழ்ந்து பேசுகிறதினாலே யாதொரு குறைவு வரப்போகிறதுமில்லை. அதிகமான பணத்தைச் செலவழித்து மற்றவர்களால் மதிப்பை அடைய விரும்புகிறவர்கள் அவர்களால் அதிகமாய் இகழப்படுகிறார்களேயன்றி, அதிகமாய்ப் புகழப்படுகிறதில்லையென்கிற இந்த இரகசியத்தை அறிந்தார்களானால் நலமாயிருக்கும். அவன் எவ்வளவுதான் செலவழித்தாலும் அவனை மற்றவர்கள் மெச்சிக்கொள்ளுகிறார்களா? அவனைப்பற்றிக் குறைவாய்ப் பேசிக்கொண்டு போகிறார்களேயொழிய, அவனைப் புகழ்ச்சியாய்ப் பேசுகிறதைக் காணோமே. புகழ்ச்சியல்ல இகழ்ச்சியே பெருமைக்காரருக்குக் கிடைக்கும் பலன். மற்றவர்களைப் பிரியப்படுத்தவும், அவர்களால் புகழப்படவும் விரும்பி இரக்குடிப் படுவதைப்பார்க்கிலும் அவர்களால் இகழப்பட்டு ஒன்றும் குறைவில்லாமல் நன்றாயிருப்பதே நலம்.

## 2. பணப் பெருமை.

'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது' என்று சத்தியவேதம் கூறுகிறது. பெருமை எல்லாப் பாவங்களுக்கும் தாய் அல்லது வேர் என்று சொன்னோம். இதினால் பெருமைக்கும் பண ஆசைக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்றும், பணக்காரன் அதிகப் பெருமையாயிருக்கக்கூடியவனென்றும் அறிந்துகொள்ளுகிறோம். நமது இரட்சகர் "ஐசுவரியவான்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது அதிக எளிதாயிருக்கும்" என்று சொன்னதிலிருந்து பணக்காரனின் அபாயநிலைமையைப் பார்க்கிறோம். பணக்காரன் அதிகத் தன்னயமுள்ளவனுமாயிருக்கக்கூடியவன். தன் பணத்தின் மிகுதியால் கர்வமடைந்து சகல தீமைகளையும் அஞ்சாமல் செய்யத் துணிந்து நிற்பான். இவன் "பணக்காரன், கோடீஸ்வரன்" என்று பேர்பெறுகிறதற்கு அவன் எடுத்துக்கொள்ளும் பிரயாசம் எவ்வளவு. "திரைகடலோடியும் திரவியந்தேடு" என்பதைச் சிரமேற்கொண்டு, தேசம்விட்டுத் தேசம்போய் இரவுபகலாய்ப் பணத்தைத் தேடுகிறான். தான்கூட நன்றாய்ச் சாப்பிடாதபடி எவ்வளவு கவலையோடு பணத்தைச் சம்பாதித்துப் பத்திரப்படுத்துகிறான்! ஏழைக்கும் இரங்கமாட்டான், தானும் அனுபவிக்கமாட்டான். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார் என்று சொல்லப்பட்டதுபோல பண ஆசையுள்ளவர்களுக்கும் தேவன் எதிர்த்து நிற்கிறார் என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு பயங்கரமான நிலைமையிலிருக்கிறான். தேவனைப்பற்றிய பேச்சல்ல, பணத்தைப்பற்றிய பேச்சே எப்பொழுதும் இவன் வாயிலிருந்து வரும். தன்னயக்காரனாகிய பணக்காரன் மற்றவர்கள் பார்வையில் எவ்வளவு அருவருப்பாயிருக்கிறானென்று நாம் நமது அனுபவத்தில் பார்த்ததில்லையா? தன் முகத்தில் கொஞ்சங்கூடக் களையிராது. அவனை மற்ற



வர்கள் கொஞ்சங்கூட மதிக்கிறதுமில்லை. இவன் உயிரோடு செத்த பிணம்போல்தானிருக்கிறான். பெருமை ஒரு பணக்காரனை வைத்திருக்கிற நிலைமையைப் பார்த்தீர்களா!

## 3. கல்விப் பெருமை.

கல்வியும் நாகரீகமும் ஒரு மனுஷனை மேலான நிலைமைக்கும் பதவிக்கும் நடத்துகிறதற்குப் பதிலாக சிலரை அதிகக் கேவலமான நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறது. தன்னயமும் தற்புகழ்ச்சியும் எக்கெந்தக் காரியங்களில் பிரவேசிக்கிறதோ அவைகள் மிகவும் கேவலமான நிலைமைக்குத்தான் நடத்தும். பெரியபட்டம் பெற்றவர்கள் என்று மற்றவர்களால் மதிக்கப்பட விரும்புவதே சிலருடைய முக்கியநோக்கமாயிருக்கிறது. படித்தவுடனே சிலர் சாதாரணமானவர்கள் செய்கிற வேலைகளை அற்பமாய் எண்ணி அவற்றை அலட்சியம்பண்ணுகிறார்கள். படித்த பெண்களில் சிலர் தங்களுக்கு வேலைக்காரரைத் தேடுகிறார்கள். தங்களுக்கிருக்கும் பெரிய வேலைகளைச்செய்ய நேரமில்லாததினிமித்தமல்ல, அவர்கள் மற்றப் பெண்கள் செய்கிறதுபோல வீட்டுவேலைகளைச்செய்கிறதில்லை என்று காண்பிக்கும்படிக்கே அப்படிச் செய்கிறார்கள். பாரமான வேலைகளினிமித்தம் வேலைக்காரரை வைத்திருக்கிறவர்களைப்பற்றிக் குறைவாய் எடுத்துரையேன். தங்களுக்கு வேலைக்காரரை நியமித்துவிட்டு அடுத்தவீட்டுப் பெண்களோடுசேர்ந்து வீண் கதைகளைப்பேசிக் காலங்கழிப்பார்கள். படித்த வாலிபர்கள் மண்வெட்டிபிடித்து தோட்டவேலை, காட்டுவேலை செய்ய வெட்கப்படுகிறார்கள். படித்தவர்களில் சிலர் எங்கேயோ ஆகாயத்திலிருந்து இறங்கினவர்களென்று தங்களை நினைத்துக்கொள்ளுகிறார்கள். இதற்கெல்லாம் பெருமையே காரணம். இப்படிப்பட்டவர்கள் தங்கள் தேவனிடத்தில் இலவசமாய்ப் பெற்ற நன்மைகளை இழந்து போவார்கள்.

## 4. பராக்கிரமப் பெருமை.

பராக்கிரமமுள்ளவன் தன் பெலனே தனக்குத் தெய்வம் என்று நினைக்கிறான். அதை அதிகமதிகமாய்ப் பெலப்படுத்துவதையே தன் முக்கிய நோக்கமாகவைத்து அதற்கென்றே தன் நேரத்தையெல்லாம் செலவிடுகிறான். தன் சரீரக்கட்டையும், தன் சதையையுமே எப்பொழுதும் பார்த்துத் தன்னைப்போல் பராக்கிரமசாலி இவ்வுலகிலெங்கும் கிடையாது என்று எண்ணி தன் பெலத்தை மற்றவர்களுக்குக் காட்டப் பிரயாசப்படுவான். சகல குழப்பங்களுக்கும் சண்டைகளுக்கும் காரணமாயிருக்கக்கூடியவன் இவனே. வாலிபர்கள் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாயிருந்து தங்களைக் காத்துக்கொள்வது அவசியம். அவர்களுக்குத் தங்கள் பராக்கிரமத்தினால் வரக்கூடிய பெருமை அதிகம். சில வாலிபர்கள் தங்கள் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தின் சதையையே பார்த்துச் சந்தோஷப்படுவதில் தங்கள் நேரத்தைச் செலவிடுவார்கள்.

உலகத்தார் அதிக மேன்மையாக எண்ணிப் பெருமை பாராட்டிவருகிற மேற்சொன்ன பணம், கல்வி, பராக்கிரமம் முதலியவற்றைக்குறித்து தேவன் சொல்வதைக் கேட்போம். "ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மை பாராட்டவேண்டாம், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; மேன்மைபாராட்டுகிறவன், பூமியிலே நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன். இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 9: 23). தேவனை அறிகிற அறிவின் மேன்மை இன்னதென அறியாதவர்கள்தான் ஒன்றுமில்லாமல் அழிந்துபோகிறவைகளைக்குறித்துப் பீத்துவார்கள். "ஒன்றான



மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" என்று அருமை இரட்சகர் சொன்னதை உலகத்தார் நன்குமதித்து தேவனை அறிகிற அறிவின்மேன்மையைக்குறித்தே மேன்மை பாராட்டுவார்களானால் எவ்வளவு நலமாயிருக்கும்! "மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்குமுன்பாக அருவருப்பாயிருக்கிறது" (லூக். 16: 15) என்று கிறிஸ்துவானவர் சொன்ன வார்த்தைகளையும் நினைக்கவேண்டும்.

## 5. குலப்பெருமை அல்லது ஜாதிப்பெருமை.

உலகத்தில் விசேஷமாக நமது தேசத்தில் ஜாதிவித்தியாசம் அதிகமாய்க் காணப்படுவதற்குப் பெருமையே காரணம். அவனைவிட நான் உயர்ந்தவனாயிருக்கவேண்டும் என்ற எண்ணம் துவக்கத்திலேயே மனுக்குலத்தாரை ஆண்டுவந்தபடியால், தங்களுடைய அதிகாரத்தினாலும் செல்வாக்கினாலும் சிலரைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தி அவர்களிடத்தில் வேலைகொண்டார்கள். இதினால் படிப்படியாக உயர்ந்தஜாதி, தாழ்ந்தஜாதி என்ற வித்தியாசம் உண்டாயிற்று. அதிகத் தாழ்வாக எண்ணப்படுகிறவர்களுக்குள்கூட ஜாதிப்பிரிவுகள் அநேகம் இருக்கிறதாகப் பார்க்கிறோம். ஜாதிவித்தியாசம் யாரைத் தான்விட்டது? அது கிறிஸ்துவின் பிள்ளைகளையும் விட்டு நீங்கியிருக்கிறதோ? சிலரைவிட்டு நீங்கியிருக்கிறது, கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆயினும் இது இன்னும் அநேகரைப்பிடித்து ஆட்டிவருகிறதைக்குறித்து நாம் அதிக விசனப்படவேண்டியதே. இன்னும் அநேகர் தங்கள் ஜாதிப்பட்டத்தை விடவில்லை. கலியாணவிஷயமாக ஓலைகூறும்போதும், திருமணப்பத்திரிகைகளை அச்சடிக்கும்போதும், கடிதங்களில் மேல்விலாசம் எழுதும்போதும் தங்கள் ஜாதிப்பட்டத்தைப் போடுகிறதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்கள் பெருமைநிறைந்த இந்த உலகத்தைவிட்டு முற்றிலும் நீங்கி

இன்னும் முழுவதும் கிறிஸ்துவினுடையவர்களாகவில்லை.

ஒருவனுக்கு இனஜனத்தார் அதிகமாயிருந்தால் அவனுக்குண்டாகும் பெருமை எவ்வளவு! எனக்கு எத்தனையோ மாமன், மைத்துனன், சிற்றப்பன், பெரியப்பன், பாட்டன், பூட்டன், அண்ணன், தம்பி இருக்கிறார்கள். அவர்கள் பெரிய உத்தியோகத்திலிருக்கிறார்கள் என்ற எண்ணம் அதிகமாய் வந்து ஒருவனைப் பெருமைக்குள்ளாக்குகிறது. ஒருவனுக்கு அநேகம் பிள்ளைகள் பிறந்தால் அவனுக்கு வரும் பெருமை அதிகம். ஸ்திரீகள் இதுவிஷயத்தில் அதிகம் பெருமை பாராட்டுவார்கள். அவளுக்குப் பிள்ளைகள் இல்லை. என்ன பாவஞ்செய்தாளோ, எனக்கோ எத்தனையோ பிள்ளைகள் வாழைக்கன்றுகள்போலிருக்கிறார்கள் என்று சொல்லி பிள்ளைப்பெறாதவர்களை மலடிகள் என்று கர்வத்தோடு ஏசிப் பரியாசம்பண்ணுகிறவர்களை நாம் கண்டிருக்கிறோம். சிலருக்குப் பிள்ளைகள்தான் அவர்கள் தெய்வம். பிள்ளைகளுக்கு நல்ல உடுப்புகள்போட்டு அவர்களை முன்னே விட்டு நடந்து, மற்றவர்கள் அவர்களைப்பார்த்து மெச்சிக்கொள்ளும்படியாக விரும்புகிறவர்களும் உண்டு. இப்படிச்செய்வது தப்பிதமா? இப்படிச்செய்கிறது பெற்றோருக்கு எவ்வளவு பிரியம். என்றாலும் பெருமைக்காகச் செய்யும்போதுதான் அது தப்பிதமாக நினைக்கப்படுகிறது.

## 6. மாய்மாலம் அல்லது வேஷம்.

பெருமைக்காரரை வேஷக்காரர் அல்லது மாயக்காரர் என்று அழைக்கலாம். தங்களிடத்திலுள்ளவைகளை மறைக்கிறதினாலும் இல்லாதவைகளை உள்ளவைகள்போலக் காண்பிக்கிறதினாலும் இவ்வேஷம் காணப்படுகிறது. இவர்களுடைய கிரியைகள் ஒவ்வொன்றிலும் மாய்மாலம் காணப்படுகிறது. நல்லவைகளும் தீயவைகளுமான சகலத்தையும் தங்களுக்கு ஆதாரமாகக்கொண்டு மாய்மால



மாய் நடக்கிறார்கள். அவைகளை இருபிரிவாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் இரண்டொரு உதாரணங்களைமட்டும் பார்ப்போம். இவர்களுடைய மாய்மாலம் இவர்களுடைய கிரியைகள் ஒவ்வொன்றிலும் காணப்படுவதால் இவ்விடத்தில் அதைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசுவதவசியமில்லை.

### (a) நற்குணங்களின் வேஷம்.

(1) பக்திப் பெருமை. தன் உள்ளத்தில் அக்கிரமத்தையே யோசித்து அதைச்செய்வதிலே தன் காலத்தைக் கழிக்கிற ஒருவன், பொல்லாதவர்களாகிய தன் தோழருக்குள் கிடைக்கும் கனம் தனக்குப்போதாது என்று எண்ணி பக்தியுள்ளவர்களுக்கு மற்றவர்களால் கிடைக்கும் கனத்தையும் மரியாதையையும் பெற்றுக்கொள்ளும்படியாகச் சகல நற்குணங்களும் நிறைந்தவன் போலவும், தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளின்படியெல்லாம் தவறாமல் செய்கிறவன்போலவும் நடிப்பான். கூட்டங்களுக்கு ஒழுங்காய்ப் போவான். யார் ஜெபம்பண்ணவிட்டாலும் இவன் ஜெபிக்கிறதற்கு முன்னிற்பான். யார் கூட்டங்களில் பேசாவிட்டாலும் இவன் பேசுவான். கிறிஸ்துவைப்பற்றிக் கண்டவர்களுக்கெல்லாம் வெட்கப்படாமல் அதிக உற்சாகமாய்ப் பேசுவான். பக்தியுள்ளவர்களோடு சகவாசம்பண்ணி அவர்கள் சிநேகத்தையும் அடைந்துகொள்ளப் பிரயாசம் எடுப்பான். அப்படிச்செய்தால்தானே அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய கனம் இவனுக்கும் வரும். பக்தியுள்ளவர்கள் வீட்டிற்கு அடிக்கடி போகவும், அவர்களோடு வழிநடந்துபோகவும், கூட்டங்களை நடத்தும்படிக்கு அவர்களோடு சேர்ந்துபோகவும் இவனுக்கு அதிகப்பிரீதி. இவன் அதிக பக்தியுள்ளவனென்று மற்றவர்களால் நினைக்கப்படும்படியாகத்தான் இவ்வளவு உபாயங்களெல்லாம் செய்கிறான். அதேசமயத்தில் தன் பொல்லாத சிநேகிதருடைய சகவாசத்தையும் விட்டுவிடமாட்டான்,

அவர்களுடைய சகல பாவங்களுக்கும் உள்ளாகத்தானி
ருப்பான். அவர்கள் தனக்குப் பயப்படும்படியாக அதிகத்
துஷ்டனென்று பேரெடுக்கவும் முயற்சிசெய்வான். இங்
குமிருப்பான், அங்குமிருப்பான். இப்படிப்பட்டவர்
களைப் பார்த்தவர்களுக்குத்தான் இது நன்றாய் விளங்
கும். சாத்தானுடைய தந்திரங்கள் எவ்வளவென்று பா
ருங்கள்.

உண்மையாகவே தேவனுக்குப் பயந்து பக்தியாயிருக்
கிறவர்களும் ஒன்றைக் கவனிக்கவேண்டும். ஒருவனுக்
குத்தான் பக்தியுள்ளவனென்று தெரிவதும், மற்றவர்கள்
அப்படி நினைப்பதும் அவனுக்குக் கண்ணியாம். பக்தி
யுள்ளவனுக்குத் தன் பக்தி யின்னதென்று தெரியாமலி
ருந்தால் அதுவே அவனுக்குப் பாக்கியம். பக்தியுள்ள
வர்களென்று எண்ணப்படுகிறவர்களுக்கு அதிகப் பெரு
மைவரக்கூடியது என்று சொல்லலாம். அவர்களுக்குத்
தெரியாமலே பெருமை நுழைந்துவிடும். கூட்டங்களை
நடத்த இடம்பெறும்போதும், பிரசங்கிக்க சிலாக்கியம்
கிடைக்கும்போதும், ஜெபிக்கும்பொழுதும், வேதம் வா
சிக்கும்போதும் பெருமை இலேசாக வரக்கூடியதே.
இச்சமயங்களில் பெருமையின் தந்திரத்தையும் வஞ்சகத்
தையும் நன்றாயறிந்து தேவனுடைய ஒத்தாசையைக்
கொண்டு அதற்குத் தப்பித்துக்கொள்ளப் பிரயாசப்பட
வேண்டும். தேவனுக்கே எப்பொழுதும் மகிமையையும்
கனத்தையும் தேடப்பிரியமானால் பெருமைக்கு இலே
சாய்த் தப்பித்துக்கொள்ளலாம். தேவனையும் அருமை
இரட்சகரையும் நேசித்து அவரில் சொல்லிமுடியாத
அன்புவைத்துவருகிற தேவனுடைய பிள்ளைகளே, உங்
களில் யாதொரு வேஷமும் மாய்மாலமும் காணப்படா
மல் உங்கள் பக்தியும் நேசமும் கிறிஸ்துவில் மறைந்து
போய் அவர் ஒருவரே உங்களில் காணப்படும்படி அவ
ரை நோக்கி மன்றாடுங்கள்.

(2) மனத்தாழ்மைப் பெருமை. சிலர் தங்கள் குற்



றங்களையும் குறைவுகளையும் பலவிதமாய் மறைத்தும்,
தங்களிடத்திலிருக்கும் நல்ல காரியங்களையும் தங்கள்
திறமையையும் சற்று ஒளித்தும் தந்திரமாய்ப் பேசி
தங்கள் மேன்மையை அறிந்துகொள்ளும்படி செய்கிறா
கள். மற்றவர்களிடத்தில் பேசும்போதெல்லாம் அநா
வசியமாகத் தங்களை அதிகம் தாழ்த்தியே பேசுவார்கள்.
ஒருவன் தன் வேலையை நன்றாய்ச் செய்திருக்கிறான்.
அதை யாராவது ஒருவர் வந்து பார்க்கும்போது, அவன்:
இன்று நான் என்வேலையைக் கூடியமட்டும் கேவலமாய்ச்
செய்திருக்கிறேன். நான் செய்தது எனக்கே நன்றாயி
ல்லை, மற்றவர்களுக்கு இது எப்படியிருக்குமோ என்று
தன்னைத் தாழ்த்திப் பேச ஆரம்பிப்பான். அப்பொழுது
அதைப் பார்க்கவந்தவர்; தம்பி, நீ அப்படிச்சொல்லாதே.
நீ உன் வேலையை நன்றும் செவ்வையுமாய்ச் செய்திருக்
கிறாய். உன் வேலை யாவருக்கும் திர்ப்தியைக் கொடுக்
கக்கூடியதுதான் என்று இவ்விதமாய் அவனை மெச்சிப்
பேசுவார். இப்படித் தன்னை மெச்சிப் பேசுகிறதற்கு
இடமுண்டாக்கவே அவன் இவ்வளவு தன்னைத் தாழ்த்
தினது. சிலர் நன்றாய் உடுத்தாமல் சற்று தாழ்ந்த உடுப்
புகளை உடுத்தித் தாங்கள் தாழ்மையுள்ளவர்களென்று
மற்றவர்கள் நினைக்கும்படி செய்வார்கள். தாழ்விலும் பெ
ருமை வருகிறது, உயர்விலும் பெருமை வருகிறது.
எச்சரிக்கை.

## (b). துர்க்குணங்களின் வேஷம்.

(1) நோயப் பெருமை. இதை விளக்குகிறதற்கு
நமது அன்றாடக ஜீவியத்தில் நாம் அடிக்கடி பார்க்கிற
சில காரியங்களை இங்கு எழுதுவோம். ஒரு கலியாணம்
நடக்கிறது. எல்லாம் சரிவர நடந்தேறும்படிக்கு வீட்
டிலுள்ள யாவரும் முயற்சியோடு வேலைசெய்கிறார்கள்.
இதோ இந்தக் கலியாணத்திற்கு முதன்மையான ஒரு
வன் அங்கு இருக்கிறான். அவன் ஒரு பெருமைக்காரன்
என்று வைத்துக்கொள்ளுவோம், அவன் என்ன செய்

வான் தெரியுமா? கலியாணவிஷயங்களில் ஏதாவது அற்ப சொற்பக் குறைவுகள் இருக்கிறதா என்று கவனித்துக்கொண்டேயிருப்பான். அக்குறைவுகளைக் கண்டுபிடித்துத் தன் மனதில்வைத்துக்கொண்டு அங்குள்ளவர்களோடு அதிகக்கோபமான வார்த்தைகளைப் பேசவும், கோபமான முகத்தைக்காட்டவும் ஆரம்பிப்பான். சிறிது நேரத்திற்குள் கோபதாபமாய் எழுந்து வெளியே போவான். எதற்காக? அங்குள்ள சகல பெரியமனுஷரும் கலியாணத்திற்கு வந்திருக்கிற மற்றவர்களும் அதிக விசனத்தோடு அவன் பிறகே போய், அவனைத் தாங்கித் தடுக்கி, ஐயா, சாமி, நாங்கள் என்னசெய்தோம்? எங்களிடத்தில் காணப்பட்ட குறைவு என்ன? இந்த மங்கள காரியம் தடைப்பட்டுப்போகிறதுபோலிருக்கிறதே. எங்களிடத்தில் என்னகுற்றமிருந்தாலும் நீர் அதைப் பொறுத்துக்கொண்டு தயவுசெய்து திரும்பிவாருங்கள் என்று இவ்விதமாய் அவனைக் கெஞ்சிக்கேட்பார்கள். இந்தக் கனத்தை அடையும்படிக்கே கோபத்தையணிந்து இப்படி நடித்தான். இப்படிப்பட்டவர்கள் இவ்வுலகில் எவ்வளவு ஏராளம். சகல விசேஷித்த தினங்களிலும், இழவுகொண்டாடுகிற காலங்களிலும் இப்படிப்பட்டவர்களை மிகுதியாய்க் காணலாம்.

புருஷரும் மனைவிகளும் ஒருவருக்கொருவர் வேண்டுமென்று கோபித்துக்கொண்டு அடுத்தவருக்கு அல்லது அடுத்தவீட்டிற்குப்போய்விடுவார்கள். பெரிசுபண்ணிக் கெஞ்சிக்கூப்பிட்டாலொழிய வீட்டிற்கு வரமாட்டார்கள்.

சின்னப்பிள்ளைகள் சில சமயங்களில் இடுவென்று சாப்பிடமாட்டோம் என்று சொல்லிப்போடுவார்கள். ஏதாவது விசேஷித்த இடங்களுக்குப்போக ஆயத்தப்படும்போது சிலர் வம்பாகமாட்டோமென்று சொல்லிப்போடுவார்கள். நல்ல வஸ்திரங்கள், பலகாரங்கள் முதலியவற்றைக்கொடுத்தால் முகத்தைத்திருப்பிக்கொண்டு



வேண்டாமென்று சொல்லிவிடுவார்கள். ஒரு வேலையைச்செய்ய ஏவினால், அதை நான்தான் செய்யவேண்டுமோ, அதைச் செய்கிறதில்லையென்று சொல்லிப்போடுங்கள் என்று அதிகக் கோபத்தோடும் கர்வத்தோடும் சொல்லுகிறதை நாம் கேட்டிருக்கிறோம். இவைகளும் இன்னும் இங்கு எழுதப்படாத அநேகமும் பெருமைக்காரருடைய கடிப்புகளே.

ஒருவன் இன்னொருவனுக்குப் பிரியமில்லாத ஒரு காரியத்தைத் தெரியாமல் செய்துவிட்டான். அப்பொழுது இவன் அவ்விஷயங்களையிட்டு நியாயப்பேசும்போது தன் கோபத்தையெல்லாம் மற்றவர்களுக்குக் காட்டும்படியாக அவனை அதிகமாய்த்திட்டி பலத்த சத்தத்தோடும் மூர்க்கத்தோடும் அவனோடு பேசி இவ்விதமாய்த் தன் கோபத்தைக் காட்டப்பார்ப்பான்.

சிலர் எப்போதும் கோபமான முகத்தையே காட்டப் பிரயாசப்படுவார்கள், கோபமும் கடுகடுத்ததுமான வார்த்தைகளையே பேசுவார்கள். மற்றவர்களை வேலை ஏவும்போது கோபமான வார்த்தைகளைச்சொல்லி மிகுந்த சத்தத்தோடு கட்டளைகொடுப்பார்கள். இவர்கள் வேண்டுமென்றே இப்படிச்செய்கிறார்கள். வீண் புகழ்ச்சியை நாடும் பெருமையே இதற்குக் காரணம்.

(2) பிடிவாதப் பெருமை. "தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்ற பழமொழி பெருமைக்காரனுடைய பிடிவாதத்தை விளக்கும்படி சொல்லப்பட்டது என்று வைத்துக்கொள்ளலாம். அவன் செய்த தப்பிதத்தை மற்றவர்கள் எடுத்துக்காட்டி அவனை உணர்த்தும்போது அவன் குற்றத்தை ஒத்துக்கொள்ளவாவது அவர்களுக்குச் செவிகொடுக்கவாவது பிரியப்படவே மாட்டான். தான் அதைச் செய்யவே இல்லையென்று சாதித்து அக்குற்றத்தை மற்றவர்கள்பேரில் சுமத்துவான். தான் செய்ததெல்லாம் சரி மற்றவர்கள் செய்ததெல்லாம் தப்பிதம் என்று சாதிப்பான். தன் குற்றங்களை

ஒருவனை பிந்தி ஒத்துக்கொள்ளுவானேயொழிய உடனே ஒத்துக்கொள்ளமாட்டான்.

யாராவது அவனைக் கோபித்துவிட்டால் அல்லது அவனுடைய குறைவுகளைக் கண்டுபிடித்து அவனை உணர்த்தினால், அவர்களோடு நான் ஒருக்காலும் பேசவேமாட்டேன். அவர்கள் வீட்டுத் தலைக்கடைக்குக்கூட இனிமேல் போகமாட்டேன் என்று இருதயத்தில் வீண் வைராக்கியத்தோடு சொல்லிக்கொள்ளுவான்.

(3) **பொறாமைப் பெருமை.** மற்றவர்கள் நன்றாயிருக்கப் பொறுக்கமாட்டான். மற்றவர்கள் நன்றாய் உடுத்துவதும், அவர்கள் அழகாயிருப்பதும் பெருமைக்காரனுக்குக் கொஞ்சமேனும் பிடியாது. ஒருவன் எந்தக்காரியத்திலாவது முன்னேறிவருவதைக் காண்பானானால் அவன் அதில் முன்னேறவிடான். மற்றவர்கள் உயர்ந்த உத்தியோகங்கள்பெற்று எல்லாக் காரியங்களிலும் சித்திபெற்று யாவராலும் கனம்பண்ணப்பட்டுப் புகழ்ச்சியாய்ப் பேசிக்கொள்ளப்படுவதைக் காண்பதைப்பார்க்கிலும் சாவை விரும்புவான். பொறாமையைப்பற்றி இரண்டாம் அதிகாரத்திலும் சற்று பார்த்திருக்கிறோம்.

## 7. வியாதி, மரணம், துக்கம் முதலியவைகளை ஆதாரமாகக்கொண்டு பெருமைபாராட்டல்.

ஒருவனுக்குக் கொஞ்சம் சுகமில்லாவிட்டாலும், தான் அதிக வியாதியாயிருக்கிறதுபோலப் பாவித்துவருகிறதினாலே அவனுக்குப் பெருமை வரக்கூடும். அவன் இப்படிச்செய்வதின்நோக்கம் மற்றவர்கள் தன்னோடு அனுதாபப்பட்டு அதிகக் கரிசனையோடே தனக்கு உதவிசெய்யும்படிக்கும், அநேகர் தன்னிடத்திற்கு வரவும், தனக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லிவிட்டுப்போகவும் விரும்புவதே. இச்சமயங்களில் அதிக அதிகாரம் செலுத்தவும், அதிக கோபமான வார்த்தைகளைப்பேசவும் விரும்புவான்.



ஒருவனுக்கு ஏதோ ஒரு துக்கமான செய்திவருகிறது. கடிதத்தை அல்லது தந்தியை வாசித்தவுடன் அதிகத் துக்கமுள்ளவனாகத் தன்னைக்காட்டுவான். அது இவனுக்கு அதிக துக்கத்தை உண்டாக்கத்தக்க செய்தியாயில்லாவிட்டாலும் மற்றவர்கள் இவன் துக்கத்தைக்கண்டு தன்னோடு அனுதாபத்தோடு பேசும்படி வரவிரும்பியே இப்படிச் செய்கிறான்.

ஒரு வீட்டில் மரணம் நேரிட்டிருக்கிறது. இந்த துக்கவீட்டில்கூடப் பெருமை காணப்படக்கூடுமா? கூடும் என்றுதான் துக்கத்தோடு சொல்லவேண்டியதாயிருக்கிறது. எங்கே ஜனக்கூட்டம் மிகுந்திருக்கிறதோ அது எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பமாயிருந்தாலும் அங்கே பெருமையின் கிரியைகள் ஏராளமாய்க் காணப்படக்கூடியதே. துக்கவீட்டிற்கு அநேக ஜனங்கள் போகிறதும் வருகிறதுமாயிருப்பார்கள். வருகிறவர்களெல்லாரும் அதிக பட்சமும் ஆறுதலுமான வார்த்தைகளையே பேச வருவார்கள். பெருமையை நாடுகிறவன், தனக்குக் கொஞ்சம் துக்கமிருந்தாலும் அதிக துக்கத்தைக்காட்டப் பிரயாசப்படுவது இயல்பே. மற்றவர்கள் தன்னோடு அதிகமாய் அனுதாபப்படக்கூடிய வழிவகைகளையெல்லாம் செய்வான். விசேஷமாய்ப் பெண்கள் இச்சமயங்களில் அழுகிறவிஷயத்தில்கூட மற்றவர்களிடத்திலிருந்து மதிப்பைப்பெற விரும்புவார்கள். இழவுவீட்டிற்குவந்து போகிறவர்கள்: இன்றைக்கு அவள்தான் நன்றாய் அழுதாள், அவளுக்குத்தான் அதிக துக்கம் இருந்தது. அல்லது அவள் சரியாய் அழவில்லையென்று இவ்விதமாய்ப் பேசிக்கொள்ளுகிறதும் உண்டு. பெருமை எங்கெங்கு நுழைந்து கிரியைசெய்கிறதென்பதைப் பார்த்தீர்களா?

## 8. மற்றவர்களுடைய மேன்மையையும், அந்தஸ்தையும் ஆதாரமாகக்கொண்டு பெருமை பாராட்டல்.

பெரிய மனுஷர் தங்கள் வீட்டுக்குவந்தால் அதைத்

தங்களுக்குக் கண்ணியமாக எண்ணி மற்றவர்களிடத்
தில் அவர்களைப்பற்றிப் புகழ்ச்சியாய்ப் பேசவும், அவர்க
ளுடைய அந்தஸ்தையும் அவர்களுடைய சொத்துக்களை
யும் குறித்துப்பேசி அவர்கள் தங்களுக்கு அதிக நெருங்
கிய இஷ்டர் என்று காட்டவும் விரும்புவார்கள். அவர்
களுடைய வண்டி தங்கள் வீட்டுக்குமுன் வந்துநிற்பதே
அவர்களுக்கு அதிகப் பெருமை. ஒரு பெரிய மனுஷனு
டைய வீட்டுக்குப் போஜனம்பண்ணவாவது அல்லது
ஏதோ ஒரு விசேஷித்த காரியமாகவாவது அழைக்கப்
பட்டிருந்தால் அதை அதிக மேன்மையாக மற்றவர்களி
டத்தில் சொல்லுவார்கள். பெரியவர்களோடு வழிநடக்
கப்போவதினாலும், அவர்களோடு பேசச் சிலாக்கியம்பெறு
வதாலும் ஒருவனுக்குப் பெருமை வரக்கூடும். மற்றவர்
களுடைய அருமையும் பெருமையுமான பொருட்களை
இரவலாக வாங்கி அவைகளைத் தங்கள் வீடுகளில்வைத்
து, அவைகளைத் தங்களுடையதாகப் பாவித்து அவைக
ளைப்பற்றி மற்றவர்களிடத்தில் பெருமையாய்ப் பேசுகிற
வர்களும் உண்டு. ஒரு பெரிய மனுஷனிடத்திலிருந்து
கடிதங்களாவது தந்தியாவது வந்தால் அவைகளைப்பற்றி
யும் பெருமையாக நினைப்பதும் இயல்பே.

சிலர் பெரியவர்களைப் பிரியப்படுத்தவும், அவர்களி
டத்திலிருந்து கனத்தைப் பெற்றுக்கொள்ளவும் அவர்
களைப் பற்றிக்கொண்டு திரிகிறதைப் பார்த்திருக்கி
றோம். அவர்கள் தங்களை நன்றாய் மதிக்கும்படியாக
அநேக காரியங்களைச் செய்வார்கள். அவர்கள்முன் மு
கஸ்துதியான வார்த்தைகளையே பேசிக்கொண்டிருப்
பார்கள். சகல காரியங்களையும் பார்வைக்கென்றே செய்
வார்கள். அவர்களுடைய காரியங்கள் யாதொன்றை
யுங்குறித்துக் குறைவாய்ப் பேசமாட்டார்கள். ஆனால்
அவர்களைப்பற்றிக் காணாத இடங்களில் புறணிபேசிக்
கொண்டிருப்பார்கள். வெளியே அவர்களை இகழ்ந்து
உள்ளே அவர்களைப் புகழுவார்கள். இப்படிப்பட்டவர்



கள் கிறிஸ்துவின் சபைக்குள்கூட உண்டு. மிஷனெரி
மார்களையும், போதகன்மார்களையும், மற்ற அதிகாரிகளை
ம் பிரியப்படுத்தும்படி பார்வைக்கு ஊழியஞ்செய்கிற
ர்களில்லையா? இவர்கள்தான் அவர்களுக்குத் தெய்
தேவனை நினைக்கவும் மதிக்கவுமாட்டார்கள். வே
வ
லை செய்யாவிட்டாலும் செய்ததுபோலப் பாவித்துப்
பொ யான ரிப்போர்ட் சொல்லுகிறவர்களையும் கண்
ணார கண்டு விசனப்பட்டிருக்கிறோம். அவர்களிடத்தி
லிரு து கனத்தையும், தயவையும் பெற்றுக்கொள்ளும்
படிக் இப்படிச் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்க
ளுக்கு தேவனிடத்தில் பங்குமில்லை, பாகமுமில்லை.

## 9. வஊழியர், பிரசங்கிகள் முதலியவர்களி டத்தில் காணப்படக்கூடிய பெருமை.

நல்ல பிரசங்கிகளையும், தேவ ஊழியரையும் கண்ணிக்
குள் அகப்படுத்துகிறது இந்தப் பெருமையே. வீண்
புகழ்ச்சி அல்லது மனுஷரால் வரும் மகிமை என்ற கொ
டிய சத்துருவுக்குத் தப்பித்துக்கொள்ள உதவியாயிருக்
குமென்று எண்ணியே பின்வருபவைகளை எழுதத் து
ணிந்தேன். அப்படித் தப்பித்துக்கொள்ளவே தேவன்
அதிகமாக விரும்புகிறார்.

பிரசங்கிகள் அநேக இடங்களுக்கும் பலகூட்டங்களு
க்கும் போய் அநேக ஜனங்களைக் கண்டுபேசவேண்டிய
வர்களாயிருக்கிறார்கள். மற்றவர்களிடத்திலிருந்து மதிப்
பை விரும்பும் எண்ணம் தங்களை அறியாமலே இவர்க
ளுக்குள் நுழைந்துவிடுகிறது இயல்பே. பிரசங்கிகளுக்
கு வருகிற முதல் சோதனை கூட்டங்களுக்கு அநேக
ஜனங்கள் வரவேண்டும் என்பது. கூட்டத்திற்குத் தா
ங்கள் எதிர்பார்த்த அவ்வளவு ஜனங்கள் வரவில்லையென்
று கண்டால் அதிக விசனப்படுவார்கள். கொஞ்சப்பே
ரைக் கண்டால் தங்களுடைய ஆவியில் பாதி போய்வி
டும். ஆயத்தம் பண்ணின பிரசங்கமும் பாதி தெரியா

ததுபோலத் தோன்றும். பேசும்போது, அநேக ஜனங்களுக்குப் பிரசங்கிக்கும்போது பேசும் அவ்வளவு ஊக்கத்தோடும் ஆவியோடும், இந்தக் கொஞ்ச ஜனங்களுக்குப் பேசமுடியாதவர்களாய்ப் போய்விடுகிறார்கள். அப்படிப் பேசப் பிரயாசம் எடுக்கிறதுமில்லை.

வீண் புகழ்ச்சியையே நாடித்தேடுகிறவர்கள், மனுஷர்களுக்குப் பிரியமானதும், அவர்களைச் சந்தோஷப்படுத்தத்தக்கதும், அவர்களுக்குச் சிரிப்புண்டாக்கத்தக்கதுமான வார்த்தைகளையே பேசப் பிரயாசப்படுவார்கள். பாவத்தைப்பற்றி ஒருபோதும் கண்டித்துப் பேசமாட்டார்கள். தங்கள் குறைவுகளை எடுத்துரைக்கமாட்டார்கள். பேசப்படுகிற பொருளைப்பற்றியல்ல, தங்களைப்பற்றியும் தங்கள் சாதுரியத்தைப்பற்றியுமே மற்றவர்கள் அறிந்துகொள்ளத்தக்கதாகப் பேசுவார்கள். கிறிஸ்துவைப்பற்றிப் பேசும்போது தங்கள் சாதுரியத்தினாலும், சொல் அலங்காரத்தினாலும், அநாவசியமானவைகளை அதிகமாய் வர்ணித்துப் பேசுகிறதினாலும் அவரை மறைத்துப்போடுகிறார்கள். கிறிஸ்துவானவரல்ல, அவர்களுடைய சாதுரியப் பிரசங்கமே எல்லாராலும் மதிக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவைப் பிரசங்கியாமல் தங்களையே பிரசங்கிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

கூட்டம் முடிந்தவுடன் இவர்கள் பேசிக்கொள்ளுகிறதென்ன? தங்களுடைய பிரசங்கத்தினால் எத்தனை பேர் குணப்பட்டிருப்பார்கள், இது எத்தனை பேருக்குப் பிரயோஜனமாயிருந்தது என்று பயத்தோடும் நடுக்கத்தோடும் தேவசமூகத்தில் நின்று யோசித்து ஜெபிக்கிறதற்குப் பதிலாக, என் பிரசங்கம் இன்று நன்றாயிருந்ததோ என்னமோ, மற்றவர்கள் இதைக்குறித்து என்னமாய் நினைத்திருக்கிறார்களோ என்றுதான் கவலைப்படுவார்கள். அதுமாத்திரமல்ல, தங்கள் மனதிற்குத் திருப்தியுண்டாக்கத்தக்கதாக மற்றவர்களிடத்தில் போய் அ



தைப்பற்றி விசாரிக்கப் பிரயாசப்படுவார்கள். என் பிரசங்கம் இன்று நன்றாயிருந்திருக்கமாட்டாது. நான் இன்று சரியான ஆயத்தத்தோடு பேசவில்லை. இன்னின்ன காரணத்தினால் இன்று நான் பேசவேண்டிய பிரகாரம் பேசமுடியாமல் போய்விட்டது என்று இவ்விதமாய்த் தங்களைத் தாழ்த்திப்பேச ஆரம்பிப்பார்கள். அப்பொழுது மற்றவர்கள், ஐயா, நீங்கள் அப்படிச் சொல்லவேண்டாம். இன்றைக்குத்தான் உங்கள் பிரசங்கம் வெகு நேர்த்தியாயிருந்தது. இன்றைக்கு நீங்கள் பேசினதுபோல ஒருநாளும் பேசவில்லையென்று முகஸ்துதியாய்ப் பேச ஆரம்பிப்பார்கள். அப்பொழுது அவர்களுக்கு இருக்கும் சந்தோஷம் எவ்வளவு! அவ்வளவுதான் அவர்களுக்கு வேண்டியது. "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தது."

இப்படிப்பட்டவர்களுடைய பிரசங்கம் அநேகருக்குப் பிரயோஜனமாயிருக்கிறதாக நாம் பார்க்கிறதில்லை. ஏனெனில் இவர்களுடைய பிரசங்கம் பரிசுத்த ஆவியானவராலும் தேவனுடைய ஞானத்தினாலும் சாரமேற்றப்படவில்லை. அது உலக ஞானத்தினாலும் தங்களுடைய சுய அறிவினாலும் நிறைந்திருக்கிறது. ஆகையால் அவர்களுடைய பிரசங்கம் ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனத்தையல்ல, இருதயக் கடினத்தையே உண்டாக்குகிறது. இவர்களுடைய பிரசங்கத்தை அடிக்கடி கேட்கவும் ஜனங்கள் பிரியப்படமாட்டார்கள். இன்றைக்கு யாருடைய பிரசங்கம்? இன்னாருடைய பிரசங்கமா? அப்படியானால் இன்றைக்குக் கூட்டத்துக்குப் போகவேண்டியதில்லையென்று சொல்லி வீட்டிலிருந்துவிடுகிறார்கள். சுயமேன்மையைத் தேடுகிறவர்கள் மற்றவர்களால் எவ்வளவாய் அருவருக்கப்படுகிறார்கள் என்ற இந்த இரகசியத்தையறிந்தார்களானால் நலமாயிருக்கும்.

# பிரதான தீமையாகிய பெருமை.

## IV. அதிகாரம்.

## பெருமையும் அதின் கிரியைகளும்.

(தொடர்ச்சி.)

### இயேசுகிறிஸ்துவும் அவருடைய போதனைகளும்.

இயேசுகிறிஸ்து வானலோகத்தைவிட்டு பூலோகத்திற்கு வந்து அவதரித்ததின் நோக்கம் பெருமையாகிய சாத்தானைத் தமது காலின்கீழ் மிதித்து அவனுடைய தலையை நசுக்கவே. அவர் உலகில் வந்து உதித்தகாலத்தில் உலகமானது மகா கேவலமான நிலைமையிலிருந்தது. உலகமுழுவதும் பெருமையினால் நிறைந்திருந்தது. சாத்தான் தன் வல்லமை முழுவதையும் செலுத்தியிருந்தான். இந்நிலைமையிலுள்ள உலகத்தின் நடுவே வரச்சித்தம் கொண்ட அருள்நாதர் உலகத்தாருடைய நினைவுகளுக்கும் அவர்களுடைய வழிகளுக்கும் தாம் முற்றிலும் விகற்பமும் விரோதமுமாய்க் காணப்படத்தக்கதாய்வந்தார். யூதர்களும் இன்னும் சிலரும், மேசியா மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் வந்து இராஜரீகம்பண்ணி ரோமருடைய இராஜ்யத்தை ஜெயிப்பார் என்று எண்ணியிருந்தார்கள். அவரோ அவர்களுடைய எண்ணங்களுக்கு நேர் விரோதமாய், பரலோகத்தின் சகல மகிமைகளையும், தமது அருமைப் பிதாவின் இன்ப மடியையும் விட்டுவிட்டு சகல தாழ்மையையும், பாடுகளையும் அடைகிறதற்கு வந்தார். அவருடைய தாழ்மையைப்பற்றி பவுல் அப்போஸ்தலன் சுருக்கிச் சொல்லுவதை இங்கு எழுதுவோம். "கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தே-



வனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலி. 2: 5—8).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவியமும் அவருடைய மரணமும், மனுஷரை ஆட்கொள்ளக்கூடிய எல்லாவிதமான பெருமையையும் கண்டிக்கிறவைகளாயிருந்தவென்று திட்டமாயறியலாம். கிறிஸ்துவானவர் பிறந்த இடமாகிய மாட்டுக்கொட்டில், அவர்மேல் சுற்றப்பட்டிருந்த கந்தைத்துணிகள், யோசேப்பு மரியாளுடைய வறுமை ஆகிய இவைகள் ஏரோதின் அரமனையிலுள்ளவர்களையும், மாயக்காரராகிய வேதபாரகர், பரிசேயர் முதலிய ஞானிகளையும் கல்விமான்களையும் வெட்கப்படுத்துகிறவைகளாயும், அவர்களுடைய சகல ஆடம்பரங்களையும், உலக மேன்மைகளையும் கண்டிக்கிறவைகளாயுமிருந்தன. உலகத்தாராலே மெச்சிக்கொள்ளப்படுகிற யாதொன்றும் அவரிடத்தில் காணப்படவில்லையென்று பின்வருகிற வாக்கியங்களினால் அறியலாம்.

1. பிறப்பைப்பற்றியும் அந்தஸ்தைப்பற்றியும் உலகத்தார் பெருமைபாராட்டுகிறார்கள். கிறிஸ்துவோ மாட்டுத் தொழுவத்தில் பிறந்து துணிகளினால் சுற்றப்பட்டார். ஜனங்கள் அவரைப்பார்த்து, "இவன் தச்சனுடைய குமாரனல்லவா?" என்றார்கள். (மத். 13: 55).

2. பணப் பெருமை. மிகவும் எளியகுடும்பத்தில் பிறந்தார். தமது சொந்தக் கைகளினாலே வேலைசெய்தார். "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" (மத். 8: 20) என்றார்.

3. உலகத்தார் பல விஷயங்களில் நன்றாய் மதிக்கப்பட விரும்புகிறார்கள். "பிலிப்பு நாத்தான்வேலைக்

கண்டு: அவர் யோசேப்பின் குமாரனும், நாசரேத்தூராருமாகிய இயேசுவே என்றான். அதற்கு நாத்தான்வேல், நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையுண்டாகுமோ என்றான்" (யோவா. 1 : 48). இப்படித் தாழ்வாக எண்ணப்பட்ட இடமே அவர் வளர்ந்த இடமாயிருந்தது. அவர் ஜனங்களால் எப்படி எண்ணப்பட்டார்? அவர்கள் அவருக்குக்கொடுத்தபேர்கள் அவருக்கு எவ்வளவு மதிப்புக்குறைவை உண்டாக்கின! அவர், "நசரேயன்" என்று அழைக்கப்பட்டார். "இதோ! போஜனப்பிரியனும், மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்" என்றார்கள் (மத். 11 : 19). அவரைச் சமாரியனென்றும் பிசாசு பிடித்தவனென்றும் சொன்னார்கள் (யோவா. 8: 48). அவரை எத்தனென்று அழைத்தார்கள் (மத். 27: 63).

4. கல்விப்பெருமை. இவர் அதிகம் கற்றவரல்ல. "அப்பொழுது யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்" என்று ஆச்சரியப்பட்டார்கள் (யோவா. 7: 15).

5. சரீர அழகும் தோற்றமும் உலகத்தாரால் அதிக மேன்மையாக எண்ணப்படுகிறது. "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கில்லாதிருந்தது" (ஏசா. 53: 2).

6. உத்தியோகப் பெருமை. "நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப் போலிருக்கிறேன். அவர் தம்மைத்தாமே சிலுவையின் மரணபரியந்தம் தாழ்த்தினார். அவர் நமக்காகச் சாபமானார்" (லூக். 22: 27; பிலி. 2: 8; கலா. 3: 13).

7. தங்களுக்குக் கிடைக்கும் சிந்திகளைப்பற்றிப் பெருமை பாராட்டுகிறார்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவா. 1: 11).



"அவருடைய சகோதரரும் அவரை விசுவாசிக்கவில்லை" (யோவா. 55: 3). "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார்" (ஏசா. 53 : 3).

8. திறமைப் பெருமை. "நான் சுயமாய் ஒன்றும் செய்யக்கூடாது என்றார்" (யோவா. 5: 30).

9. சுயசித்தப் பெருமை. "எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என் பிதாவுக்குச் சித்தமானதையே தேடுகிறேன்" (யோவா. 5 : 30).

இந்த அதிகாரத்தில் கிறிஸ்துவானவர் மலைப்பிரசங்கத்தில் சொன்னவைகளையும், சுவிசேஷங்களில் வருகிற அவருடைய வேறு சில போதனைகளையும் பொறுக்கி, அவைகளில் அவர் பெருமையின் எந்தெந்தக் கிரியைகளைக் கண்டிருக்கிறாரென்று பார்ப்போம்.

I. பாக்கியவான்களைப்பற்றி. (மத். 5. 3—11; லூக். 6 : 20—26).

உலகத்தார் யார்யாரைப் பாக்கியவான்கள் என்கிறார்கள் என்றும், இரட்சகர் யார் யாரைப் பாக்கியவான்கள் என்று அழைக்கிறார் என்றும் பாருங்கள். இதைப்பற்றி லூக்கா சுவிசேஷம் வெகு தெளிவாய்ச் சொல்லுகிறது. உலகத்தார் ஐசுவரியவான்களையும், திருப்தியாயிருக்கிறவர்களையும், உலகத்தின் சகல சிற்றின்பங்களிலும் பாவசந்தோஷங்களிலும் நகைத்துக் களித்து உல்லாசமாய் வாழுகிறவர்களையும், மற்றவர்களால் புகழப்பட்டு வருகிறவர்களையும் பாக்கியவான்கள் என்று அழைக்கிறார்கள். கிறிஸ்துவோ அப்படிப்பட்ட ஒவ்வொருவருக்கும் "ஐயோ" என்று கூறி, தரித்திரரையும், பசியுள்ளவர்களையும், துக்கம் நிறைந்தவர்களையும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டு இகழப்பட்டவர்களையும் பாக்கியவா

ன்கள் என்று அழைக்கிறார். இவ்விஷயத்தில் உலகத்தாருடைய நினைவுகளுக்கும் கிறிஸ்துவின் நினைவுகளுக்கும் எவ்வளவு வித்தியாசம்! "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, என் வழிகள் உங்கள் வழிகளுமல்ல என்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும், உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசா. 55: 8, 9).

II. தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்." அருமை இரட்சகர் சொல்லும் இவ்வார்த்தைகளின் ஆழ்ந்த கருத்தை நன்றாய்க் கவனித்தல் அவசியம். நமக்கு அதிக சகஜமாகவும் வழக்கமாகவும் தோன்றுகிற காரியங்களைக்குறித்து அவர் இவ்வளவு கண்டிப்பாய்ப்பேசுவது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. நமக்குக் கோபம் இயல்பாகவும் இலேசாகவும் வரக்கூடியது. யோசனையில்லாமல் ஒருவனைப்பார்த்து வீணன் என்று சொல்லிவிடுகிறோம். நாம்தான் எல்லாவற்றையும் அறிந்த நிபுணர் என்று மேட்டிமைகொண்டு இன்னொருவனை மூடன் என்று சொல்லிவிடுகிறோம். அறிவீனமாகவும், கேலியாகவும் மற்றவர்களை வைது இடுகிறதைக்குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும் என்று இரட்சகர் கற்பிக்கிறார். இது விசேஷமாக [illegible] தேசத்தாரை அதிகமாய் ஆண்டுகொண்டிருக்கிறது. ஏதாவது ஒரு மனஸ்தாபம் அல்லது சண்டை உண்டானால், ஆண்களும் பெண்களும் பேசுகிற கோபமான வார்த்தைகளும், பலவித அசங்கியமான பேர்களைச்சொல்லித் திட்டும் வார்த்



தைகளும், பேசும் தூஷணங்களும் எவ்வளவு கேவலமும் காதுகொடுத்துக் கேட்கக்கூடாதவைகளுமாயிருக்கின்றன! இப்படிப்பட்ட வார்த்தைகளைக்குறித்துத்தான் இரட்சகர் இவ்வளவு கண்டிப்பாய்ப் பேசுகிறார். 'மூடனே' என்று சொல்லும் ஒரே வார்த்தையினிமித்தம் ஒருவன் எரிநரகத்திற்குப் போகிறவனாயிருந்தால் அது எவ்வளவு பயங்கரமானது! தாழ்ந்துபோகக் கொஞ்சமேனும் மனமற்று எப்பொழுதும் பெருமையானவைகளையே பேசுகிற நமது நாவைக்குறித்து நாம் எவ்வளவு எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்று ஆண்டவர் தெளிவாய்க் காட்டுகிறார். "நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். நாவும் நெருப்புத்தான்; அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயுமிருக்கிறது." ஆ, நாவினால் வரும் பெருமை எவ்வளவு! அது பேசும் பெருமையும் வம்புமான வார்த்தைகள் எத்தனை எத்தனை! வாயிலிருந்து பிறக்கும் தூஷணங்களுக்கும் கூக்குரலுக்கும் கணக்குண்டோ? கோள்சொல்லுதல், மற்றவர்களுடைய பேரைத் தூற்றிக்கொண்டு திரிதல் எத்தனை அதிகம்! நாவினால் விளையும் தீமைகளை ஒருவனாலும் முழுவதும் விஸ்தரிக்கமுடியாது. சகல பெருமையும், தீமைகளும் பிறப்பிடம் உற்பத்தியிடம் இதுவே. ஆண்டவர்தாமே நமது நாவிலிருந்து வருகிற பெருமைக்குத் தப்பித்துக்கொள்ள கிருபைபுரியவேண்டும். "நாவை யடக்க ஒருவனாலுங்கூடாது", என்ற வார்த்தைகளினால் நாம் அதைரியப்பட்டு, அதைக்குறித்து அசட்டையாயிராமலிருப்போமாக. "யூதாகோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர்," நம்து நாவையடக்கப் பெலன்கொடுக்கும்படி ஆயத்தமாயிருக்கிறார். "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையுங்குறித்து நியா

யத்தீர்ப்புநாளில் கணக்குக் கொடுக்கவேண்டும்" (மத். 12 : 36) என்று இரட்சகர் சொன்ன எச்சரிப்பான வார்த்தைகளைச் சிந்தித்து, நாம் பேசுகிற வார்த்தைகள் வீணானவைகளோ பிரயோஜனமானவைகளோ என்று தேவனுடைய பலத்தைக்கொண்டு ஆராய்ந்துபார்த்து, நமது வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையையுங் குறித்துக் கவலையாயிருப்போமாக.

## III. பொய்யாணையிடுதல் (மத். 5: 36, 37).

பொய்யாணைகளும் நாவினால் விளையும் தீமைகளே. பொய்யாணையிடுகிறதற்குக் காரணமென்ன? தங்களுக்குள்ள மேன்மையும் அந்தஸ்தும் தாங்கள் செய்த ஒரே தவறுதலினாலே கெட்டுப்போகவிடாமல் காக்கப் பிரயாசப்படுவதே. பொய்சொல்லியாகிலும், பொய்யாணையிட்டாகிலும், தங்கள் கனத்தையும் மரியாதையையும் காத்துக்கொள்ளவேண்டும் என்ற பெருமையான எண்ணமே இதற்குக் காரணம். சகல இடங்களிலும் இந்தப் பாவம் காணப்படும். விளையாட்டு ஸ்தலங்களைக் கவனித்துப்பாருங்கள். ஒரு கட்சிக்காரர் வாஸ்தவமாகவே ஜெயித்துக்கொண்டாலும், மறுகட்சிக்காரர் அது இல்லவே இல்லையென்று சத்தியம்பண்ணத் தொடங்குவார்கள். அப்படி இல்லையென்று சொல்வது நியாயமல்லவென்று அவர்களுக்கே தெரிந்தாலும் தங்களுக்கு வருகிற கனம் போய்விடக்கூடாது என்று ஆசிக்கிறதினாலே நியாயத்தை வேண்டுமென்று அநியாயமாக்குகிறார்கள். ஒருவன் மற்றொருவனுக்கு விரோதமான ஒரு காரியத்தைச்செய்திருக்கும்போது இவன் அவனிடத்தில்போய்: அப்பா, நீ எனக்கு விரோதமாக அந்தப் பொல்லாத காரியத்தைச் செய்ததாகக் கேள்விப்படுகிறேனே, நீ என்ன சொல்லுகிறாய் என்று கேட்கும்போது அவன்: அப்பனாணை, சாமியாணை, நான் உனக்கு விரோதமான யாதொன்றையும் செய்யவே இல்லை என்பான். அநேகர் நிலங்



களின்விஷயமாகவும், பலவித வாக்குவாதங்களினாலும், வேதபுஸ்தகத்தின்பேரிலும், தேவனுடைய ஆலயத்தின்பேரிலும் சத்தியம்பண்ணிவருகிறதை நமது சபைகளுக்குள்ளும் பார்க்கிறோம். ஒரு அற்ப கனம் அல்லது இலாபம் கிடைக்கும்படியாக எத்தனைபேர் வேண்டுமென்றும் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் பொய்சொல்லிச் சத்தியம்பண்ணுகிறதை நாம் தினந்தினம் பார்க்கிறோம். ஆண்டவர் நாம் இதிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியாக: "பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள், இதற்கு மிஞ்சினது தீமையினாலுண்டாயிருக்கும்" என்கிறார்.

## IV. "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்."

மத். 5: 39—48ல் சொல்லப்பட்ட வசனங்களை உலகம் அறிந்துகொள்ளவும் அதை ஏற்றுக்கொள்ளவுமாட்டாது. இவைகள் அவர்களுக்குக் கேலியும் பரியாசமுமாய்த் தோன்றும். இது அதிகக் கடினமான உபதேசமாகவும் சிலருக்குக் காணப்படலாம். மனத்தாழ்மையுள்ள ஒருவன் உலகத்தார்முன் நடந்துகொள்ளவேண்டியவிதம் இன்னதென்று வெகு தெளிவாய் இங்கு காட்டப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்குமுன் நாம் தாழ்ந்து பணிந்து தீமையோடு எதிர்த்துநிற்காமல் தீமைக்கு நன்மைசெய்ய வேண்டுமென்பதை அவ்வாக்கியங்கள் நன்குவிளக்குகின்றன.

"உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு." ஒருவன் இன்னொருவனை அநியாயமாக அடித்துப்போட்டால், அவன் என்னை அடித்துவிட்டானே, நான் அவனுக்குத் தாழ்ந்துபோகிறதா, அவன் என்னை ஒரு அடி அடித்தால் நான் அவனுக்கு ஒன்பதடிகொடுப்பேன் என்று கோபத்தோடே அவனை அடிக்கப்போவான். இந்த எண்ண

மே சகல சண்டைகளுக்கும் காரணம். கொஞ்சம் தாழ்ந்துபோனால் சகல சண்டைகளும் அடங்கிப்போகும். "இணங்குதல் திரளான குற்றங்களை மூடும்." பெருமைக்காரனோ ஒருபோதும் தாழ்ந்துபோகமாட்டான். நான் அவனுக்குத் தாழ்ந்துபோகவா என்ற இந்த ஒரே எண்ணம் உலகில் எவ்வளவு தீமையையும் நஷ்டத்தையும் விளைவித்திருக்கிறது! இந்த எண்ணம் ஜனங்களுடைய மனதில் குடிகொண்டிருக்கிறபடியால் எவ்வளவு உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் உண்டாகிறது! இந்தப் பெருமையான எண்ணமே ஜனங்களைக் கோர்ட்டு கச்சேரிகளுக்கு இழுத்து தங்கள் பணத்தையெல்லாம் வம்பாகச் செலவழிக்கச்செய்கிறது. அருமை இரட்சகரின் அன்பையும் தாழ்மையையும் அறிந்து உணர்ந்திருக்கிறவர்கள்கூட இந்தப் பொல்லாத குணத்திற்கு இடங்கொடுத்து, திடமென்று ஒருவருக்கொருவர் சண்டைபண்ணித் தேவனுக்குச் சத்துருக்களாய்ப் போகிறார்கள். இந்த எண்ணம் யாரைத்தான் பற்றித்தொடர்ந்து கேட்டுக்குள்ளாக்காமலிருக்கிறது. ஒருவருக்கொருவர் தாழ்ந்துபோவது எவ்வளவு கஷ்டமாய்த் தோன்றுகிறது! என் உயிர்போனாலும் போகட்டும், நான் நரகத்திற்குப் போனாலும் போகிறேன், அவனுக்குமாத்திரம் தாழ்ந்துபோகமாட்டேன் என்று சிலர் சொல்லத்தக்கதாக ஜனங்களை எவ்வளவு பயங்கரமான நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறதென்று பாருங்கள். ஒருவருக்கொருவர் தாழ்ந்துபோகும் சிந்தையைத் தேவன் தாமே கிருபையாய் நமக்குக்கொடுத்து நம்மைக் காப்பாற்றவேண்டும்.

மத். 5: 40—42ல் உள்ள வாக்கியங்களில் வம்பு அல்லது அழிவழக்காடுகிறவர்களுக்கு நாம் தாழ்ந்துபோகவேண்டுமென்று காட்டுகிறார். நம்மோடு வேண்டுமென்று வம்புவழக்காடி நம்மோடு அநியாயமாய் நடந்துகொள்ளுகிறவர்களும் உண்டு. தங்களுடையதல்லாததை தங்களுடையதென்றுசொல்லித் தங்களுக்குச்சொந்





தமாய் எடுத்துக்கொள்ளுவார்கள். அங்கும் இங்கும் போகச்சொல்லி சிலர் வம்பாகக் கட்டளை கொடுப்பார்கள். இப்படிப்பட்டவர்களோடு நியாயம் ஒன்றும் பேசாமல், நம்மை முழுவதும் தாழ்த்தி, எல்லா அநியாயத்தையும் நஷ்டத்தையும் பொறுத்துக்கொண்டு அவர்களுக்குப் பணிந்துபோய் இவ்விதமாய்ப் பெருமையை அகற்றித் தாழ்மையை அணிந்துகொள்ளவே கிறிஸ்து இங்கு நமக்குக் கற்பிக்கிறார். நாம் ஒவ்வொன்றிற்கும் நியாயம்பேச ஆரம்பிக்கிறபடியால் அநேக சமயங்களில் நமது நற்குணங்களை இழந்துபோகிறவர்களாயிருக்கிறோம். இது சிலருக்கு அதிகக் கடினமான உபதேசமாகக் காணப்பட்டாலும், இதின்படி செய்கிறவர்கள் இம்மையில் யாதொரு கனத்தை அடையாமற்போனாலும் மறுமையில் மிகுந்த பலனையடைவார்கள்.

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். அவர்களை ஆசீர்வதியுங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள்" என்கிறார் அன்புள்ள இரட்சகர். என் சத்துரு நாசமாய்ப் போகவேண்டும், அவனைத் தெய்வம் முற்றிலும் அழிக்கட்டும். அவன் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவானாக என்று மண்ணைவாரித் தூற்றிச்சொல்வார்கள் இருதயத்தில் அசுத்தையுள்ளவர்கள். சாந்தமுள்ள இயேசுவோ, "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்" என்கிறார். அப்படிச் சிநேகிக்கிறதற்கு அவர் நியாயம் சொல்லுகிறார். உலகத்தார் எல்லாரும் ஒருவகையாய் எனக்குச் சத்துருக்களாய்த்தானிருக்கிறார்கள். நித்தம் எனக்கு முன்பாகப் பெருமை பாராட்டி வீம்புபேசி நிமிஷந்தோறும் எனக்குக் கோபமூட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். அப்படியிருந்தும் நான் அவர்களைச் சிநேகித்து, சூரியனையும், மழையையும், மற்றும் ஏராளமான நன்மைகளையும் அவர்களுக்குக் குறைவில்லாமல் கொடுத்துக்கொண்டேயிருக்கிறேன். நான் செய்கிறதுபோல நீங்களும் சகல அநியாயத்தையும் பொறுத்து உங்கள் சத்து

ருக்களைச் சிநேகியுங்கள், அப்பொழுது நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்கிறார்.

"உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறதென்ன, உங்களுக்குப் பலன் என்ன?" நமது இனஜனத்தாரையும், நமது சிநேகிதர்களையும், நமக்கு உதவிசெய்கிறவர்களையுமே வழக்கமாக நேசித்து, அவர்களுக்கு உபசரணைசெய்து, விசேஷித்த தினங்களில் அவர்களுக்கு விருந்துசெய்துவருகிறோம். இப்படிச்செய்கிறதற்குக் காரணமென்ன? நம்மைச் சேர்ந்தவர்கள் நன்றாயிருக்கவேண்டுமென்றெண்ணியும், அவர்களும் நமக்குப் பதிலுக்குப் பதில் செய்வார்களென்று எதிர்பார்த்தும் அப்படிச் செய்கிறோம். இதில் தன்னயம் காணப்படுகிறது. இப்படிச்செய்கிறதினாலே நமக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது என்று இரட்சகர் சொல்லுகிறார். நமக்குப் பதில் ஒன்றுமே செய்யக்கூடாத ஏழைகள், குருடர், சப்பாணிகள் முதலியவர்களையே அதிகமாய் சிநேகித்து அவர்களுக்கே நன்மைசெய்யவேண்டுமென்பது அவருடைய கருத்து. இப்படிச் செய்கிறவர்களுக்குத் தேவனே பூரணமாய்ப் பலனளிப்பார். மேற்சொன்னவைகள் எல்லாவற்றின்படியும் செய்கிறவர்களே தேவனைப்போல் பூரணசற்குணராயிருக்கக்கூடியவர்கள்.

V. தர்மம், காணிக்கை (மத். 6: 1—4). இத்தனை பேருக்கு அன்னங்கொடுத்தேன், இத்தனை ஏழைகளை ஆதரித்தேன், இத்தனை கட்டடங்களைக் கட்டி வைத்தேன் என்று பெருமை பாராட்டுவது உலகத்தாரின் இயல்பே. தாங்கள் செய்கிற தர்மமும், கொடுக்கிற காணிக்கையும் மற்றவர்களுக்கு எப்படியாகிலும் தெரிந்துவிடவேண்டும் என்று நினைக்கிறார்கள். இது இன்னாருடைய தர்மம், இது இன்னாரால் கட்டப்பட்டது என்று வாசிக்கிறோம். இப்படிப்பட்டவர்களைக் குறித்துத்தான் ஆண்டவர் இங்கு பேசுகிறார். சிலர் காணிக்கை போடும்போது, அது ஒரு பைசாவானால் தங்கள் ஐந்துவிரல்களினால் நன்றாய் மூடிக்கொண்டும், அது ஒரு ரூபாவானால் அது எல்லாருக்கும் தெரியத்தக்கதாய் இரண்டு விரல்களினால் பிடித்துக்கொண்டும் போடுகிறதைக் கவனித்திருக்கிறோம். சிலர் அதிகம் பணங்கொடுத்து தங்கள் பேர் பத்திரிகைகளில் அடிபட விரும்புகிறார்கள். சிலருக்கு அநேக ஜனங்கள் கூடியிருக்கிற கூட்டங்களில் தங்கள் தர்மப் பணத்தை வாக்குப்பண்ணுகிறதற்கு அதிகப்பிரியம். இப்படிப்பட்டவர்களை எச்சரித்தே, "உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது" என்கிறார். இவர்கள் மனுஷர் காணவேண்டுமென்று தங்கள் தர்மத்தைச் செய்கிறபடியால், பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் அவர்களுக்குப் பங்கில்லையாம்.



VI. ஜெபம் (மத். 6: 5—12). பக்தியின் வேஷம் போட்டுப் பெருமை பாராட்டுகிறவர்கள் ஜெபத்தையும் தங்களுக்கு ஆதாரமாக்கிக்கொள்ளுகிறார்கள். இவர்களுக்கு அந்தரங்க ஜெபம் பிடியாது. அப்படிச் செய்கிறதினால் பலனென்ன என்றும் நினைப்பார்கள். அறைவீட்டுக்குள் பிரவேசித்து ஐந்து நிமிஷம் ஏகாந்தத்தோடு ஜெபிக்க இவர்களால் கூடும் என்று நினைக்க ஏதுவில்லை. மூலைகளிலும், சந்துகளிலும், தெருக்களிலும், சந்தைக் கூட்டங்களிலும் நின்று மற்றவர்கள் பார்க்கத்தக்கதாகத் தங்கள் கைகளை விரித்து, தலையை நிமிர்த்திச் சத்தமிட்டுப் பலவித அபிநயங்களோடு ஜெபிக்க விரும்புவார்கள். இவர்கள் ஜெபிக்கும்போது, மற்றவர்கள் பாவங்களைக் கண்டிக்கிறவர்களாகவும், தங்கள் பாவங்களை அதிகமாய் அரோசிக்கிறவர்கள்போலவும், பாவிகள்பேரில் அதிக அனுதாபங்காட்டி அவர்களுக்காக அதிகம் கவலைப்படுகிற

வர்கள்போலவும்பாவித்து கோபமான வார்த்தைகளை உ
பயோகித்து அதிக வைராக்கியத்தோடு ஜெபிப்பார்கள்.
மற்றவர்களுடையகுறைவுகளையெல்லாம் தங்கள் ஜெபத்
தில் வெளியிட்டுவிடுவார்கள். தங்களுக்குப் பிரியமில்
லாத காரியத்தைச் செய்த சிலரை மனதில் குறிப்பாய்
வைத்துக்கொண்டு அவர்களுடைய குறைவுகளைக் காட்
டிக் கோபத்தோடு ஜெபிப்பார்கள். தங்களை மகா பரி
சுத்தவான்களாகக் காட்டுவார்கள். ஜெபத்தில் ஒரு
சிறு பிரசங்கம் செய்துவிடுவார்கள். உபமானம் உபமே
யங்களை ஜெபத்தில் உபயோகிப்பது இவர்களுக்கு மெத்
தப்பிரியம். மாய்மாலக்காரருடைய ஜெபத்தை ஆயக்
காரன் பரிசேயன் என்பவர்களுடைய உவமையில் நன்
றாய் விளக்கியிருக்கிறார். பரிசேயன் செய்த ஜெபத்தைப்
பாருங்கள். "தேவனே! நான் பறிகாரர், அநியாயக்கா
ரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும்
இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை
ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவா
சிக்கிறேன். என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம்
செலுத்திவருகிறேன்" (லூக் 18: 11, 12). பெருமைக்
காரனுடைய ஜெபத்தை இதைவிட நன்றாய் விஸ்தரிக்க
அவசியமில்லை, இப்படிப்பட்டவர்களுடைய ஜெபம் தே
வனுக்கும் மனுஷருக்கும் அதிக அருவருப்பாயிருக்கிறது.
இவர்கள் வார்த்தைகள் "வீண் வசனிப்பு" என்கிறார்.
இவர்கள் இவ்வுலகத்திலேயே தங்கள் பலனையடைந்து
தீர்ந்தது.

VII. மன்னிப்பு (மத். 6: 14, 15). அவன் குற்
றஞ்செய்திருக்க நானே அவனிடத்தில் போய் மன்னிப்
புக் கேட்கவேண்டும் என்ற எண்ணமும், அவன் முதலா
வது என்னிடத்தில் வந்து மன்னிப்புக் கேட்டால்தான்
மன்னிப்பேன் என்ற கர்வமான வைராக்கியமும், அவன்
என்னிடத்தில் வந்து மன்னிப்புக்கேட்டாலும் நான் அ
வனுக்கு மன்னிக்கமாட்டேன், அவனோடு பேசவாவது



சகவாசம்பண்ணவாவது மாட்டேன் என்று வீண் வை
ராக்கியம் பாராட்டிப் பிடிவாதமாயிருக்குதலும் ஆகாது
என்று வற்புறுத்தி அவைகளைக் கண்டிக்கும்படியாக இவ்
வாக்கியங்களைச் சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் அ
நேக நாட்களாய்ப் பேசாமலும், ஒருவர்முகத்தை ஒருவர்
பாராமலும் இருக்கிறவர்கள் எத்தனை ஏராளம். இதைவா
சிக்கிற சகோதரனே, சகோதரியே, ஏதோ ஒரு சிறு மன
ஸ்தாபத்தினிமித்தம், இதுவரையில் நீ யாரோடேயாவ
து பேசாமலிருக்கிறாயா? உன்னிடத்தில் குற்றமில்லாவி
ட்டாலும் போய் அவனிடத்தில் மன்னிப்புக்கேட்டு, அவ
னோடு ஒப்புரவாகி, பின்புவந்து உன்காணிக்கையைச் செ
லுத்து. ஆண்டவர் ஏழுதரம்மட்டுமல்ல, ஏழெழுபதுத
ரம் மன்னிக்கச் சொல்லுகிறார். இரக்கமற்ற ஊழியக்
காரனுடைய உவமையில் அவனுக்குக் கிடைத்த பங்கு
உனக்கும் கிடையாதபடி எச்சரிக்கையாயிரு. "உங்கள்
பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். நீங்
களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பி
தங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால் என் பர
ம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்று
ஆண்டவர் சொன்ன எச்சரிப்பான வார்த்தைகளை நி
னைத்துக்கொள்வதவசியம்.

VIII. உபவாசம் (மத். 6: 16, 17). மூன்றின அதி
காரத்தில் பக்தியின் வேஷத்தைக்குறித்துத் தியானித்
திருக்கிறோம். இதுவும் அதில் ஒரு பாகம்தான். நாம்
ஒன்றை முக்கியமாய் அறிந்துகொள்ளவேண்டியது.
நாம் பக்தியாயிருப்பது மற்றவர்களுக்குத் தெரியாமற்
போகாது. என்றாலும் அதை வேண்டுமென்று காட்டப்
பிரயாசப்படக்கூடாது. நமது பக்தி எவ்வளவு அந்தர
ங்கமாயிருக்கக்கூடுமோ அவ்வளவுக்கு அந்தரங்கமாயிருப்
பது நலம். நாம் செய்கிற உபவாசத்தையோ வேறெந்தக்
கிரியையையோ மற்றவர்கள் எப்படியாகிலும் பார்த்துவி
டவேண்டும் என்கிற சோதனை நமக்கு லேசாக வரும். ந

மது பக்தியின் வாசனை அந்தரங்கமாய்ப் பரம்பி நம்மைச் சுற்றியிருக்கிறவர்களை மாறுதல்படுத்தட்டும். நாம் பக்தியுள்ளவர்களென்று காணப்படுவதைப்பார்க்கிலும் நமது பக்தியை மறைத்துப் பக்தியில்லாதவர்களாகக் காணப்படுவதே உத்தமம். "உன் தலைக்கு எண்ணெய் பூசி உன் முகத்தைக் கழுவு" என்று கிறிஸ்துநாதர் சொல்வதின் கருத்தென்ன? பரிசுத்த ஆவியானவர் ஒருவனுடைய இருதயத்தில் கிரியை செய்யும்போதும், கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்பட்டு அவருக்காக வைராக்கியங்கொள்ளும்போதும், அவனுடைய இருதயம் பரவசப்படும். அந்தச் சமயத்தில், அதை வெளியே காட்டும்படியாக முகத்தை ஒரு மாதிரி நிலைமையில் வைத்து, கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, இவ்விதமாய்த்தான் தேவனோடு நெருங்கி ஜீவிக்கிறவன் என்று காணப்பட விரும்பும் சோதனை இலேசில் உண்டாகும். இத்தச்சமயத்தில் மிகவும் எச்சரிக்கையாயிருந்து இந்தச் சோதனைக்குத் தப்பப் பிரயாசப்படவேண்டும்.

மத. 6: 1—18ல் ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்துகிற ஒரு பயங்கரமான சத்தியத்தை நாம் நன்றாய் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். அவர் வாயிலிருந்து பிறக்கும் வார்த்தைகளைப்பாருங்கள். "மனுஷர் காணவேண்டுமென்று" "மனுஷரால் புகழப்படுவதற்கு" "மனுஷர் காணும்படியாக," "மனுஷர் காணும் பொருட்டாக" என்ற வார்த்தைகளும், "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை" என்பதும், "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று மும்முறை கூறுவதும் நமக்கு மிகுந்த பயத்தையும் அதிக எச்சரிப்பையும் கொடுக்கத்தக்கவைகளே. மனுஷரால் புகழப்படுகிறதற்கென்று செய்கிற ஒவ்வொரு கிரியைக்கும் இவ்வுலகத்திலேயே பலன் கிடைத்துவிடுமானால் பரலோகத்திலே என்ன பலன் கிடைக்கப்போகிறது! "எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ" என்று இரட்சகர் சொல்லுகிறார். இவ்வுலகத்திலேயே எல்லா கனத்தையும் மதிப்பையும் பெறத்தானே நாம் விரும்புகிறோம். ஐயோ, நாம் எவ்வளவு பயங்கரமான நிலைமையிலிருக்கிறோம்! இவ்வுலகத்தில் நாம் அடைகிற ஒவ்வொரு கனமும் பரலோகத்தில் நமக்குக் கிடைக்கப்போகிற மகிமையைக் குறைத்துவிடுகிறதென்றும், பெருமைக்காரருக்குப் பரலோகத்தில் ஒரு துளி தண்ணீர் கூடக் கிடையாதென்றும் அறிந்துகொள்ளுவோமாக.



**IX. மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்த்தல்** (மத். 7: 1—5). பெருமையுள்ளவர்களுக்கு அதிகப் பிரியமானவைகளில் ஒன்று மற்றவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்ப்பது. மற்றவர்களிடத்தில் எப்பொழுதும் குற்றங்கண்டுபிடிக்கப் பிரயாசப்படுவதும், அவர்கள் செய்வதெல்லாம் தப்பு, தாங்கள் செய்கிறதெல்லாம் சரி என்று சாதிப்பதும் அவர்களுக்கு மிகவும் பிரியம். தங்கள் குற்றம் தங்களுக்குத் தெரியாது. அவர்கள் செய்கிறதெல்லாம் அவர்கள் பார்வையில் சரியாகவே தோன்றும். தங்கள் குற்றம் மிகவும் அற்பமாகவும், மற்றவர்களுடைய சிறு தப்பிதங்கூட ஒரு பெரிய தூண்போலவும் தோன்றும். பெருமைக்காரர் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் மற்றவர்களுடைய குறைவுகளை எடுத்துப்பேசுகிறதாகவே இருக்கும். இப்படிப்பட்டவர்களுடைய பேச்சு மற்றவர்களுக்கு எவ்வளவு வெறுப்பை உண்டாக்குகிறது என்று அறிந்திருக்கிறோம். தேவன் இவர்களை எவ்வளவு அதிகமாய் அருவருக்கவேண்டும். இவர்களை "மாயக்காரரே" என்று அழைக்கிறார். நாம் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் எவ்வளவு அற்பமாய்க் காணப்படுகிறோமோ என்று நினைத்து, மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறதைப்பற்றிக் கவலையாயிருப்போமாக.

பொற்பிரமாணம் பெருமைக்காரனுடைய புத்திக்கும் அவனுடைய கிரியைகள் யாவற்றிற்கும் முற்றிலும் விரோதமே.

பெருமைக்காரருடைய வழிகள் கேட்டுக்குப்போகிறவைகளும் அதிக விசாலமுமானவைகள். இவர்களுக்கு நெருக்கம் வருத்தங்கள் உதவாது.

மத். 7: 14—20-ல் பெருமைக்காரருடைய மாய்மாலத்தை எடுத்துக்காட்டிச் சீஷரை எச்சரிக்கிறார். இதோடு மத். 23 அதி-ல் மாயக்காரரைக்குறித்து அதிக பயங்கரமாய்ப் பேசுகிற வார்த்தைகளைக் கவனிப்போமாக. இவர்களுடைய குணங்கள் எல்லாவற்றையும் மாய்மாலம் என்ற ஒரே வார்த்தையில் அடக்கிப்போடலாம். இந்த அதிகாரத்தில் அவர்களுடைய கிரியைகள் எல்லாவற்றையும் திரட்டிச் சுருக்கிச் சொல்லுகிறார். "பாக்கியவான்கள், பாக்கியவான்கள்" என்று எட்டுத் தரம் சொன்ன இரட்சகருடைய திருவாயிலிருந்து "ஐயோ, ஐயோ" என்று எட்டுத்தரம் வந்தது மிகுந்த ஆச்சரியமே. அவர் இப்படி கண்டிப்பாக "ஐயோ" கூறினதால் மாய்மாலக்காரருடைய பாவம் எவ்வளவு கொடிதானதென்று அறிகிறோம். இவர்களுடைய கிரியைகளைப்பற்றி மூன்றின அதிகாரங்களில் அதிகமாய்ப் பார்த்திருக்கிறபடியால் அவைகளை இங்கு அதிக சுருக்கமாய் எழுதுகிறோம்.

மற்றவர்களுக்குச் சட்டங்களை ஏற்படுத்துவார்கள், அவர்களோ அவைகளைக் கைக்கொள்ளமாட்டார்கள்.

மற்றவர்களிடத்தில் ஊழியங்கொள்வது இவர்களுக்கு மெத்தப்பிரியம். ஒரு மூட்டையையாவது வேறெந்தப் பொருளையாவது தங்கள் கைகளினாலே தூக்கிக்கொண்டுபோவது கண்ணியக்குறைவாம்.

புறம்பான அலங்கரிப்பில் அதிகமாய்ப் பிரியப்படுகிறவர்கள். ஜனங்களுடைய கண்களை ஏதேது கவரக்கூடு



மோ, ஏதேது அவர்களை மற்றவர்களினின்று வித்தியாசப்படுத்தக்கூடுமோ அதை அணிந்துகொள்ள விரும்புவார்கள்.

விருந்துகளிலும், கூட்டங்களிலும் முதன்மையான இடங்களை விரும்புவார்கள். முதலில் தாழ்ந்த இடத்தில் உட்கார்ந்து பிற்பாடு உயர்ந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோகப்படுவது நலம் என்று கிறிஸ்து காட்டுகிறார். (பெரிய விருந்தின் உவமை. லூக். 14: 7-14). பெருமைக்காரரோ முதலில் ஆத்திரத்தோடே முதல் இடத்திற்போய் உட்கார்ந்து பிற்பாடு வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்கு அனுப்பப்படுகிறதை விரும்புகிறார்கள்.

மற்றவர்களால் கனம்பண்ணப்படுவதற்கு முந்திக்கொள்ளுகிறவர்கள். இவர்கள் முந்திக் கைகொடுக்கமாட்டார்கள். வீதியிலே நடந்துபோகும்போது, மற்றவர்களைக் கடைக்கண்ணால் பார்த்து, அவர்கள் தங்களைக் கனம்பண்ணக் கைகொடுத்துவிட்டார்களென்று கண்டால்தான் தங்கள் தலையை ஏறிட்டுப்பார்ப்பார்கள். மற்றப்படி காணாதவர்களைப்போலப் போய்விடுவார்கள். மற்றவர்களுடைய கனத்தை ஏற்றுக்கொள்ளும்போதுகூடக் கர்வமான பார்வையோடேதான் தங்கள் கையை எடுப்பார்கள், அல்லது தலையை அசைப்பார்கள். கனம்பண்ணப் பிரதிக்கொள்வதே இவர்களுடைய வழக்கம். பிதாக்கள், குருக்கள், ஞானிகள் என்று அழைக்கப்படுவது இவர்களுக்கு எவ்வளவோ ஆனந்தம். இவ்வளவு கிடைத்தால் அவர்களுக்குப்போதும், வேறொன்றும் இவர்களுக்கு அதிகமாய் வேண்டியதில்லை.

தங்கள் நடக்கைகளினாலும், போதனைகளினாலும் மற்றவர்களைக் கெடுப்பதே இவர்களுடைய பிரதான நோக்கம்.

அலங்காரமான வார்த்தைகளோடு பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுவதில் தேர்ந்தவர்கள்.

மனுஷரால் புகழப்படுவதற்கென்று தசமபாகம் முதலிய காணிக்கைகளைக் கொடுப்பார்கள். வெந்தயம், சீரகம் முதலிய அற்பமானவைகளில்கூடத் தவறாமல் தசமபாகம் செலுத்துகிறோம் என்று காட்டுகிறவர்கள். ஆனால் இவர்கள் விசேஷித்த காரியங்களைச் செய்வதில் அதிகக் குறைவுள்ளவர்கள்.

இவர்கள் வெளியாசாரங்களை அதிகத் திட்டவட்டமாகக் கைக்கொள்ளுவார்கள். ஓய்வுநாட்களை மிகவும் கட்டமாய்க் கைக்கொள்ளுகிறவர்கள்போல் காணப்படுகிறவர்கள். ஓய்வுநாளில் வீட்டிலுள்ளவர்களில் யாராவது ஏதேனும் ஒரு சிறு வேலையைச் செய்துவிட்டால், அல்லது கடையில் ஒரு சிறு சாமானை வாங்கிவிட்டால், இவர்களுக்குக் கோபம் அதிகம் வரும். என்றாலும் அந்த நாள் முழுவதும் இவர்களுடைய மற்ற காரியங்கள் அதிக அவலட்சணமாயிருக்கும். இவர்களை "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்" என்று இரட்சகர் அழைப்பது சரியே.

விசேஷித்த தினங்கள் வந்தால், தங்கள் முன்னோருடைய கல்லறைகளைப் புதுப்பித்து, மெழுகுவார்கள். அவர்களுக்குச் செய்யவேண்டிய அநேக சடங்குகளைச் செய்வார்கள்.

X. கிறிஸ்துவின் சீஷர்களிடத்திலும்கூடப் பெருமை காணப்பட்டது. "தங்களில் எவன் பெரியவன்" என்ற கேள்வி அடிக்கடி அவர்களுக்கு வந்து அவர்களைச் சோதனைக்குள்ளாக்கப்படுத்தினது. இதைப்பற்றிப் பல சமயங்களில் அவர்களுக்குள் வாக்குவாதங்கள் உண்டானது. அந்தந்தச் சமயங்களில் கிறிஸ்துவானவர் அவர்களுடைய பெருமையைக் கண்டித்துத் தாழ்மையைப் போதித்தார். அவைகளில் இரண்டு மூன்று சம்பவங்களைச் சுருக்கமாய்ப் பார்ப்போம்.



"பரலோக இராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான்" என்று சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து கேட்டபோது, இயேசு ஒரு சிறு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்றும், இந்தப் பிள்ளையைப்போல் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானென்றும் போதித்தார் (மத். 18: 1-5).

செபெதேயுவின் குமாரர் அவரிடத்தில் வந்து முதன்மையான இடங்களைக் கேட்டபோது பாடுகளைச் சகிக்கிறதற்கு ஆயத்தமாயிருக்கிறீர்களாவென்று கேட்டார். மற்றப் பத்துப்பேரும் இவர்கள்மேல் எரிச்சலடைந்ததைக் கண்டு அவர்களை நோக்கி: "புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்களென்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்களென்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் கடையானவனும் உங்களுக்கு ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்று உபதேசித்தார். இந்த உபதேசம் பெருமை நிறைந்த உலகத்திற்கு எவ்வளவு வெறுப்பான உபதேசம். பணிவிடைக்காரனாயிருப்பதும், ஊழியக்காரனாயிருப்பதும், எல்லாருக்கும் கடையானவனென்று காணப்படுவதும், மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்வதும் மனதிற்கு எவ்வளவு வருத்தமாய்த் தோன்றுகிறது! இரட்சகர் சொன்னபடி நடக்கக்கூடியவர்க

னே பாக்கியவான்கள். அப்படி இந்த உலகத்தில் நடக்கிறவர்கள் அதிக சொற்பம். இவ்வுலகில் அதிகாரிகளென்றும், பெரியவர்களென்றும், புகழ்பெற்றவர்களென்றும் எண்ணப்படுவதே மிகுந்த பாக்கியமாகவும் அதிக கனமாகவும் நினைக்கப்படுகிறது. ஆனால் இதெல்லாம் அவர்களைக் கண்ணிக்குள்ளாகப்படுத்தக்கூடியது என்று அவர்கள் அறியவேண்டும். சபைகளிலும் மற்றும் இடங்களிலும் பெரிய உத்தியோகம் பெறுவதற்குச் சண்டைகளும் வாக்குவாதங்களும் செய்துகொண்டும் மனுஷர்கள் எழும்பிக்கொண்டும் இருக்கிற அநேகரை நாம் பார்த்திருக்கிறோம். மற்றவர்களுக்குக் கிடைத்திருக்கிற பட்டங்களைக் குறித்தும், உத்தியோகங்களைக் குறித்தும் மிகுந்த எரிச்சலடைகிறவர்களும் உண்டு. இது தகாதென்று கிறிஸ்து போதிக்கிறார். அருமை இரட்சகரைப்போல இந்த உலகத்தில் ஊழியஞ்செய்து பணிவிடைக்காரராகவும், எல்லாருக்கும் கடையானவர்களாகவும் எண்ணப்படுகிறதற்கு நமக்கு விருப்பத்தைக் கொடுக்கும்படி அவரை நோக்கி அதிகமதிகமாய் வேண்டிக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்.

கிறிஸ்துவானவர் பாடுபடுகிறதற்குக் கொஞ்ச நேரத்திற்குமுன்கூட தங்களில் எவன் பெரியவன் என்று வாக்குவாதம்பண்ணினார்கள். அந்தச்சமயத்தில் இயேசு இராஜா செய்ததைப்பாருங்கள்: "போஜனத்தைவிட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து; ஒரு சீலையை எடுத்து அரையில் கட்டிக்கொண்டு, தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்" என்று வாசிக்கிறோம். "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவனுடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" என்றும் சொன்னார். இவர் செய்ததும், உபதேசித்ததும் உலகத்தாருக்குப் பைத்தியமாகவே தோன்றுகிறது.

இன்னும் எத்தனையோ காரியங்களைப் போதித்தார்.



அவருடைய போதனைகள்யாவும் பெருமையைக் கண்டித்து உணர்த்தக்கூடியவைகளென்றே சொல்லவேண்டியது. அவர் போதித்தது மாத்திரமல்ல தமது நடக்கைகள் எல்லாவற்றினாலும் சாதித்தும் காட்டினார்.

இவ்விதமாகக் கிறிஸ்துவின் அருமையான போதனைகளும், அவருடைய சாதனைகளும் பெருமை நிறைந்த உலகத்தாருடைய மாய்மாலமான கிரியைகளைப் பட்டப்பகல்போல் எடுத்துக்காட்டுகிறவைகளாகவும், அவர்களுடைய மேட்டிமையான சகல கிரியைகளையும் எண்ணங்களையும் அரோசிக்கிறவைகளாகவும் இருந்ததென்று பார்க்கிறோம். உலகமுண்டாகிறதற்கு முன் பரலோகத்தில் பிரவேசித்ததும், அதற்குப்பின் உலகத்தில் பிரவேசித்துச் சகல கேட்டுக்கும் தண்டனைக்கும் காரணமாயிருந்ததுமான பெருமையை மேற்கொள்ளும்படிக்கும், அதினின்று நாம் தப்பித்துக்கொள்ளும்படியான மாதிரியைக் காட்டும்படிக்கும், அவர் இவ்வுலகத்திற்கு வந்து பரம மாதிரியைக் காட்டிவிட்டுப்போனது இரட்சகருக்கு ஏற்றதும் நமக்குப் பெரும் நன்மையை உண்டாக்குகிறதுமாயிருந்தது.

# பிரதான தீமையாகிய பெருமை.

V. அதிகாரம்.

## பெருமையும் அதின் பலாபலன்களும்.

"அழிவுக்குமுன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி. 16 : 18).

1. பெருமையுள்ளவர்களுக்கு இவ்வுலகில் கிடைக்கும் பலாபலன்கள்.

மற்றவர்கள் தன்னைக் காணும்படியாகவும், அவர்களால் புகழப்படும்படியாகவும் பெருமைக்காரன் எத்தனையோ மாய்மாலமான கிரியைகளைச் செய்துபார்க்கிறானே, அவன் வாஸ்தவத்திலே அவர்களால் மதிக்கப்படுகிறானா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்படி நாம் பார்க்கும்போது மற்றவர்களால் அதிகமாய் அருவருக்கப்படுகிறானேயொழிய அவர்களால் மதிக்கப்படுகிறதில்லையென்று தெளிவாய்க் கண்டுகொள்ளுவோம். உதாரணமாக: நமது நடுவில் எப்போதும் பெருமையான காரியங்களையேசெய்துகொண்டிருக்கிறதொருவன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவனுக்கு நாம் கொடுக்கிற கனம் என்ன? அவனைப்பற்றி நாம் எண்ணுகிறதென்ன? நாம் அவனைக் காணும்போதெல்லாம் நம்முடைய இருதயம் அவனை அரோசிக்கிறதில்லையா? அவன் பேசுகிற பேச்சுகளும், அவனுடைய நடிப்புகளும் அவன் பேரில் நமக்கு எவ்வளவு வெறுப்பை உண்டாக்குகிறது! அவன் எவ்வளவுதான் நல்லகாரியங்களைச்செய்தாலும் எவ்வளவுதான் நம்மைப் பிரியப்படுத்தப் பார்த்தாலும் நாம் கொஞ்சமேனும் அவனைச் சட்டைபண்ணுகிறதில்லையல்லவா?

இவன் எப்பொழுதும் தன் புத்தியீனத்தையே வெளியிட்டுக்கொண்டிருக்கிறபடியால் சீக்கிரத்தில் மற்றவர்களால் வெட்கப்படுத்தப்படுகிறான். இவன் பேசு



கிற பேச்செல்லாம் சாரமற்றதும் அற்பப்பிரயோஜனமுமான பேச்சாயிருப்பதால் இவன் பேசுகிறவைகளை ஒருவரும் ஆவலோடு கேட்கப் பிரியப்படமாட்டார்கள். அவைகளைக் கொஞ்சங்கூட மதிக்கவுமாட்டார்கள். இவன் எவ்வளவுதான் அந்தஸ்துடையவனாயிருந்தாலும் ஒரு வேலைக்காரன்கூட அவனைத் தாழ்வாக எண்ணுவான். சுருக்கிச் சொன்னால் ஒருவரும் இவனைக் கால்துட்டுக்குக்கூட மதிக்கமாட்டார்கள். "இவனுடைய மனம் அற்பவிலையும் பெறாது" (நீதி. 10 : 20).

இவனுடைய பேர் எவ்வளவு சீக்கிரமாய் மறக்கப்பட்டுப்போகிறது! இவனுடைய பேர் ஒருக்காலும் பூமியில் நிலைபெறுகிறதில்லை. இவனுடைய பேர் புழுதியில் எழுதப்பட்டதற்குச் சமானம். இவ்வுலகத்தில் தன் பேரை நிலைநிறுத்தும்படிக்கு எத்தனையோ கட்டடங்களைக் கட்டிவைத்தால்தானென்ன? ஏராளமான குளங்களையும் கிணறுகளையும் வெட்டிவைத்தால்தானென்ன? இவனுடைய ஆஸ்தியினிமித்தமும், இவனுடைய செல்வாக்கினிமித்தமும், இவன் செய்கிற சகல நற்கிரியைகளினிமித்தமும் இவன் பேர் உலகமுழுவதிலும் சொல்லிக்கொள்ளப்பட்டால்தானென்ன? உலகத்தின் நாலுபாகங்களிலும் இவனுக்காக ஞாபக சின்னங்கள் கட்டப்பட்டு அவைகளில் இவனுடைய பேரும் இவன் கிரியைகளும் தங்க எழுத்துக்களால் எழுதப்பட்டால்தானென்ன? எவ்வளவு காலம் இவன் பேர் சொல்லிக்கொள்ளப்படும்? இன்னுங் கொஞ்சநேரந்தானே. உலகமும் அதிலுள்ளவைகளும் சீக்கிரம் அழிந்துபோகுமே. இவன் மரித்துப்போன பின்பு தன்னைப்பற்றி மற்றவர்கள் புகழ்ச்சியாய்ப் பேசிக்கொள்ளுகிறதினாலே இவனுக்கு யாதேனும் பிரயோஜனமுண்டோ?

இவ்வுலகம் இவனைத் திர்ப்தியாக்குகிறதோ? இங்கே ஒரு பெருமைக்காரன் இருக்கிறான். இந்த உலகத்தில் வேறெந்த மனுஷனுக்கும் இல்லாத ஆஸ்தி, கல்வி, பரா

க்கிரமம் இவனுக்குண்டு. உயர்ந்த உத்தியோகம் பெற்றவன். உலகத்தின் எல்லாப்பாகங்களிலும் இவனுக்குப் போக்குவரவு உண்டு. இவனுக்கு வேலைக்காரர் ஏராளம். இவனால் உதவிபெற்று ஜீவிக்கிறவர்கள் அனந்தம். இவன் வாசமாயிருக்கும் இடம் தங்கத்தினாலும் தந்தத்தினாலும் கட்டப்பட்ட அரமனை. இவனுக்குக் கைபிடிக்கவும், கால்பிடிக்கவும் அநேக ஆட்கள் உண்டு. இவன் வெளியேபோனால் இவனுக்குப்பின் கைகட்டிக்கொண்டுபோகிறவர்கள் ஏராளம். எளியவர்கள் இவனைக்கண்டால் சாஷ்டாங்கமாய் விழுந்து இவனைப் பணிந்துகொள்வார்கள். இவனுடைய பேரை ஒருவனும் தன் வாயினால் உச்சரிக்கக்கூடாது. இவனுடைய வீடு சகல இன்பங்களினாலும் சந்தோஷமான காரியங்களினாலும் நிறைந்திருக்கிறது. தன் கண்கள் இச்சித்தவைகளும் தன் இருதயம் விரும்பினவைகளும் குறைவில்லாமல் கிடைக்கிறது. இவனுக்கு இவ்வளவெல்லாமிருந்தபோதிலும் மனத்திருப்தியடைகிறானோ? இதோ எல்லாம் மாயையும் மனதிற்குச் சஞ்சலமுமாயிருக்கிறதென்றே சொல்லவேண்டியவனாயிருக்கிறான். இவனிடத்தில் தேவகுமாரனில்லாதபடியால் ஜீவனில்லாதவனாயிருக்கிறான். பெருமைக்காரன் நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும்தான் என்ன? தேவனுக்கு அஞ்சி அவருக்குப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள். இவனோ நன்றாயிருப்பதில்லை. அவன் தேவனுக்கு முன்பாகப் பயப்படாதிருக்கிறபடியால் நிழலைப்போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதில்லை.

இவன் தேவனைக் கொஞ்சமேனும் நினையாமலும் மதியாமலும் தன் மனம்போன போக்கில் எல்லாவற்றையும் அகங்காரமாய்ச் செய்துவருகிறபடியால் இவனுக்குச் சடிதியான வியாதிகளும், கொள்ளைநோயும், அபாயமான சம்பவங்களும், அகால மரணமும் சம்பவிக்கிறதைப் பார்த்



திருக்கிறோம். இப்படிப்பட்ட சமயங்களில் யார் இவனைத் தேற்றுவார். ஆறுதலொன்றுங்காணாமல் இவன் அடைகிற துக்கமும் மனச்சஞ்சலங்களும் மெத்த. தேவனுடைய உதவியைத் தேடாமல் மனுஷருடைய உதவியையே நாடி ஆறுதலையும் சந்தோஷத்தையும் அடையாமற்போகிறான். "இவன் பயமில்லாத இடத்தில் பயப்படுகிறவன்."

சகல காரியங்களிலும் மட்டுக்குமிஞ்சிப் பெருமை பாராட்டுகிறபடியால் பெருமைக்காரருடைய பொருட்களும், ஆடுமாடுகளும், சொத்துக்களும் சடிதியில் கொள்ளைகொண்டுபோகப்படுகின்றன. இவர்கள் பெற்றிருக்கிற உத்தியோகங்களைச் சடிதியில் பறிகொடுக்கிறார்கள். கொஞ்சக்காலம் நன்றாயிருப்பார்கள், சீக்கிரம் தரித்திரமடைந்து பிச்சையெடுப்பார்கள். பல காரியங்களிலும் இவர்களுக்குச் சித்திகிடையாமற்போகிறது.

மீட்கப்பட்ட பாவிகள் அடையும் இரட்சிப்பின் சந்தோஷத்திற்கு இவர்கள் அந்நியர். ஆவிக்குரிய ஆறுதலும் மனப்பாக்கியமுமில்லாமல் நிர்விசாரிகளும் நிர்ப்பாக்கியருமாயிருக்கிறார்கள். இவர்களுக்கு மரணகாலம் சமீபிக்கும்போது இவர்களுக்குண்டாகிற மனக்கலக்கம் அதிகம். இவர்கள் சமாதானமாய் மரணமடைகிறதைநாம் பார்க்கிறதில்லை. "துன்மார்க்கருக்குச் சமாதானமில்லையென்று என் தேவன் சொல்லுகிறார்" (ஏசா. 47: 22; 57: 21).

மேலே சொல்லப்பட்டவைகளுக்கு வேறு அத்தாட்சிகள் வேண்டுமானால் சத்தியவேதத்திற்குத்தான் போய் விசாரிக்கவேண்டும்.

"தேவன் நேபுகாத்நேச்சாருக்கு இராஜ்யத்தையும், மகத்துவத்தையும், கனத்தையும் கொடுத்தார். அவனுடைய இருதயம் மேட்டிமையாகி, அவனுடைய கர்வத்தினால் கடினப்பட்டபோதோ, தேவன் அவனைத் தன் சிங்

காசனத்திலிருந்து தள்ளினார். அவனுடைய மகிமை அவனைவிட்டு அகன்றுபோயிற்று. மனுஷரினின்று தள்ளப்பட்டான்; அவனுடைய இருதயம் மிருகங்களுடைய இருதயம் போலாயிற்று; காட்டுக் கழுதைகளோடே சஞ்சரித்தான்; உன்னதமான தேவன் மனுஷரின் இராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனை அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று அவன் உணர்ந்துகொள்ளுமட்டும் மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான்; அவனுடைய சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது" (தானி. 5: 18-21).

பலாதானின் குமாரனாகிய மெரோதாக்பலாதான் என்னும் பாபிலோனின் இராஜா, எசேக்கியா வியாதிப்பட்டிருந்து ஆரோக்கியமானதைக் கேள்விப்பட்டு, அவனிடத்தில் நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான். எசேக்கியா அவர்களைக்கண்டு சந்தோஷப்பட்டு தன்பொக்கிஷசாலையையும், தனக்குண்டான எல்லாவற்றையும் அவர்களுக்குக் காண்பித்தான். தன் அரமனையிலும் தன் இராஜ்யத்தில் எங்கும் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றுமில்லை. இவனுடைய பெருமையைச் சண்டிக்கும்படி இவனுக்கு விரோதமாகச் சொல்லப்பட்ட சேனைகளின் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்போம்: "இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும். நீ பெறப்போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் இராஜாவின் அரமனையிலே அரமனைவேலைக்காரராயிருப்பார்கள்" என்றார் (ஏசா. 39 அதி).

சவுல் இராஜா மேட்டிமைகொண்டு கர்த்தரை மதியாமல், அவரைப் புறக்கணித்துத்தள்ளி தன் இஷ்டப்படி பலியிட்டதினிமித்தம் இராஜ்யபாரம் அவனைவிட்டு நீங்கி



னது. பொல்லாத ஆவியும் அவனைப் பிடித்துக் கலக்கப் பண்ணினது (1 சாமு. 15 அதி).

தாவீது சணல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழு பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான். சவுலின் குமாரத்தியாகிய மீகாள், தாவீது இராஜா கர்த்தருக்கு முன்பாகக் குதித்து, நடனம் பண்ணுகிறதைக்கண்டு, தன் இருதயத்தில் அவனை அவமதித்து, அவனைப்பார்த்து: அற்ப மனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறதுபோல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்குமுன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் இராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள். தாவீது அவளைப்பார்த்து: என்னை இவ்வளவு மேன்மைப்படுத்தின கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன். இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் அற்பனுமாவேன். அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன் என்றான். அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாளமட்டும் பிள்ளை இல்லாதிருந்தது (II சாமு. 6: 14-23).

பெருமை நிறைந்த பாபிலோனுக்கு நேரிட்ட அழிவைப்பற்றி வெளிப்படுத்தல் 18-ம் அதிகாரம் சொல்வதை வாசித்துப்பாருங்கள். வாசிக்கிற எவனையும் திடுக்கிடப்பண்ணத்தக்கதாய் வெகு பயங்கரமாய் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

அனனியா சப்பீராள் என்பவர்கள் ஒரே நாளில் மாண்டதற்குக் காரணமென்ன? ஏரோது புழுப்புழுத்து செத்தது தேவனுக்கு மகிமையைச் செலுத்தாததினாலல்லவோ? பெத்சாயிதா, கொராசீன், கப்பர்நகூம்பட்டணங்கள் அழிந்துபோனதற்கும், எருசலேமுக்கு நேரிட்ட பயங்கரமான அழிவுக்கும் காரணமென்ன? சத்தியமே

த்தில் இன்னும் இப்பேர்ப்பட்ட எத்தனையோ சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

பெருமைக்காரருடைய முடிவைக் காட்டும்படி பின்வரும் வாக்கியங்கள் நீதிமொழிகளிலிருந்தும் விசேஷமாய் சங்கீதங்களிலிருந்தும் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன.

நீதியைச் சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தாவே, நீதியைச் சரிக்கட்டுகிற தேவனே, பிரகாசியும். பூமியின் நியாயாதிபதியே, நீர் எழுந்து பெருமைக்காரருக்குப் பதிலளியும். கர்த்தாவே, துன்மார்க்கர் எதுவரைக்கும் மகிழ்ந்து, அவர்கள் எதுவரைக்கும் களிகூர்ந்திருப்பார்கள்? எதுவரைக்கும் அக்கிரமக்காரர் யாவரும் வாயாடி கடினமாய்ப்பேசி பெருமை பாராட்டுவார்கள்?

துன்மார்க்கர் பூமியில் வசிப்பதில்லை. அவர்கள் தீமையினால் நிறையப்படுவார்கள். பெருமைக்காரனின் ஆஸ்தி நீதிமானுக்காகச் சேர்த்துவைக்கப்படும். அவர்கள் நீதிமான்களுடைய வாசற்படிகளிலும் குனிவதுண்டு. இவர்களுடைய வருமானத்தில் துன்பமுண்டு. அகங்காரியின் வீட்டைக் கர்த்தர் பிடுங்கிப் போடுவார். பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன். அவனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்.

பெருமைக்காரன்மேல் தேவன் நாள்தோறும் சினங்கொள்ளுகிறார். இவர்கள் இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலகமக்கள்.

துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில் வீம்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமைகொண்டேன். மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை; அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது. நரர்படும் வருத்தத்தில் அகப்படார்கள். மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள். ஆகையால் பெருமை சரப்பணி



யைப்போல் அவர்களைச் சுற்றிக்கொள்ளும், கொடுமை ஆடையைப்போல் அவர்களை மூடிக்கொள்ளும். அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப்பார்க்கிறது. அவர்கள் சீர்கெட்டுப்போய் அகந்தையாய்க் கொடுமை பேசுகிறார்கள்; இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள். தங்கள் வாய் வானமட்டும் எட்டப்பேசுகிறார்கள்; அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது. இதோ, இவர்கள் துன்மார்க்கர்; இவர்கள் என்றும் சுக ஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள். தங்கள் செல்வத்தை நம்பி தங்கள் திரளான ஐசுவரியத்தினால் பெருமை பாராட்டுகிறார்கள். தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறைதலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம்; அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறார்கள்.

ஆகிலும் கனம்பொருந்தினவனாயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிறதில்லை. அவன் மரிக்கும்போது ஒன்றும் கொண்டுபோவதில்லை; அவன் மகிமை அவனைப் பின்பற்றிச் செல்வதுமில்லை. அவன் உயிரோடிருக்கையில் தன் ஆத்துமாவை வாழ்த்தினாலும்: நீ உனக்கு நன்மையை நாடினாய் என்று மனுஷர் அவனைப் புகழ்ந்தாலும் அவன் என்றென்றைக்கும் வெளிச்சத்தைக்காணாத தன் பிதாக்களின் சந்ததியைச் சேருவான். கனம்பொருந்தினவனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்.

கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன். அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சைமரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான். ஆனாலும் அவன் ஒழிந்துபோனான்; பாருங்கள், அவன் இல்லை: அவனைத் தேடினேன், அவன் காணப்படவில்லை. நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில்

நிறுத்திப் பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர். அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள். நித்திரை தெளிந்தவுடனே சொப்பனம் ஒழிவதுபோல், ஆண்டவரே, நீர் விழிக்கும்போது, அவர்கள் வேஷத்தை இகழுவீர். ஆட்டுமந்தையைப்போல் பாதாளத்தில் கிடத்தப்படுகிறார்கள்; மரணம் அவர்களை மேய்ந்துபோடும். செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள்; அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தில் நிலைத்திருக்கக்கூடாதபடி அவர்களுடைய ரூபத்தைப் பாதாளம் அழிக்கும்.

**2. பெருமைக்காரருக்குக் கர்த்தருடைய நாளில் கிடைக்கும் பலாபலன்கள்.**

*"அழிவுக்குமுன்னானது அகந்தை, விழுதலுக்குமுன்னானது மனமேட்டிமை," "பெருமையுள்ளவனுக்குத் தேவன் எதிர்த்துநிற்கிறார். தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான்."*

இவ்வுலகத்தில் ஒருவன் எவ்வளவுக்குத் தன்னை உயர்த்துகிறானோ அவ்வளவுக்குத் தாழ்த்தப்படுகிறதற்கும், ஒருவன் எவ்வளவாய் ஜனங்களால் புகழப்படுகிறானோ அவ்வளவாய் இகழப்படுகிறதற்கும், உலகம் கொடுக்கிற நன்மைகளையும் இன்பங்களையும் எவ்வளவு அனுபவித்தானோ அவ்வளவு தீமைகளையும் துன்பங்களையும் அனுபவிக்கிறதற்கும், சுயநயத்தையேநாடி திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களைவிசாரியாமல் அவர்களைக் கைவிட்டுவிட்டது எவ்வளவோ அவ்வளவாய் சகல ஜனங்களாலும் கைவிடப்படுகிறதற்கும், தன்னைத்தான் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, தன்னையே தேவனாக்கி, மகிமையின் கர்த்தரை எவ்வளவு தூரம் அவமதித்தானோ அவ்வளவுதூரம் அவரால் அவமதிக்கப்பட்டுக் காலால் மிதிக்கப்படுகிறதற்கும் காலம் சீக்கி



ரமாய் வருகிறது. "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். காலம் சமீபமாயிருக்கிறது. அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; (பெருமையுள்ளவன் இன்னும் பெருமையாயிருக்கட்டும்); நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்; (தாழ்மையுள்ளவன் இன்னும் தாழ்மையாயிருக்கட்டும்). இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது." பெருமைக்காரருக்கு, அவர்களுக்கு ஏற்ற தண்டனையைக்கொடுக்க இதோ கர்த்தர் சீக்கிரித்துவருகிறார்.

பெருமையுள்ளவர்கள் வாதிக்கப்படப்போகிற இடம் நரகமே. இது உலகமுண்டாகிறதற்கு முன்னமேயே ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. இது தேவ கோபாக்கினையினாலும், மகா பயங்கரங்களாலும் வேதனைகளாலும் நிரம்பி வழிகிறது. பெருமைக்காரருடைய வீம்பும், அவர்களுடைய சகல அக்கிரமங்களும், ஆகாமியங்களும் மேட்டிமைகளும் எவ்வளவுக்கு அதிகமாய் இவ்வுலகில் பெருகி வானபரியந்தம் எட்டிவருகிறதோ அவ்வளவுக்கு அதிகமாய் அவர்களை வாதிக்கப்போகிற நரகாக்கினி சூடாக்கப்பட்டு வருகிறது. ஆதியாகமம்முதல் வெளிப்படுத்தல்வரை தேவன் கூறியிருக்கிற சாபங்களும், "ஐயோ" என்ற வார்த்தைகளும் பெருமையுள்ளவர்களுக்கு விரோதமாகவே சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் அவன் பட்டு உத்தரிக்கவேண்டும். இவனுடைய குடியிருப்பாகிய நரகத்தைப்பற்றி நாம் வாசிக்கிறது சொற்பமென்றாலும், வேதத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறவரையில் அது மிகவும் பயங்கரமும் அரோசிக்கப்படத்தக்கதுமாயிருக்கிறது. அது "வேதனையுள்ள இடம்" என்று லூக்கா 16-அதிகாரத்தில் வாசிக்கிறோம். அது "அழுகையும் பற்கடிப்புமான இடம்" என்று சுவி

சேஷங்கள் கூறுகின்றன. அது "அவியாத அக்கினியுள்ள நரகம்" என்றும், "அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும்" என்றும் இரட்சகர் மூன்றுதரம் அழுத்திச்சொல்லுகிறார் (மாற். 9: 43-48).

பெருமையுள்ளவர்களுக்கு விரோதமாய்வரும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் அதிகபயங்கரமாகத்தான் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. "அது பெரிதும் பயங்கரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள், இருளும் அந்தகாரமுமான நாள். அந்த நாள் உக்கிரத்தின் நாள், அது இக்கட்டும், இடுக்கமுமான நாள். கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரிக்கிறது. கர்த்தருடைய நாள் என்கிற சத்தத்திற்கு பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான்."

கர்த்தருடைய நாளானது எதெதற்கு விரோதமாக வருகிறதென்று எசாயா 2: 12-16-ல் வெகு தெளிவாய் வாசிக்கிறோம். "எல்லாம் தாழ்த்தப்படும்பொருட்டு, சேனைகளுடைய கர்த்தரின் நாளானது பெருமையும் மேட்டிமையுமான எல்லாவற்றின்மேலும், உயர்ந்த எல்லாவற்றின்மேலும், லீபனோனிலுள்ள உயரமும் ஓங்கலுமான எல்லாவற்றின்மேலும், உன்னதமான எல்லாப் பர்வதங்களின்மேலும், உயர்ந்த எல்லாக் கோபுரத்தின்மேலும், அரணான எல்லா மதிலின்மேலும், எல்லாச் சித்திர விநோதங்கள்மேலும வரும்." உயரமான, உன்னதமான, உயர்ந்த முதலிய வார்த்தைகளை நாம் நன்றாய்க் கவனித்துச் சிந்தித்து எச்சரிப்படையவேண்டும். கிறிஸ்துவானவர் உலகத்தில் உதித்தபோது பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு கோணலானது செவ்வையாகி கரடுமுரடானவை சமமாக்கப்பட வேண்டியதிருந்தது. அப்படியே அவர் இ



னிமேல் இராஜாதி இராஜாவாக சகல மகிமையோடும் அக்கினி அவர் முன்பட்சிக்க, தமது கோடாகோடித் தூதர்களால் சூழப்பட்டு மிகுந்த ஆரவாரத்தோடும் எக்காளசத்தத்தோடும் வரும்போது சகல பெருமையும், மேட்டிமையும், வீம்பும், சகல உன்னதமும் உயரமுமானவைகளும் அவருக்குமுன் தாழ்த்தப்படவேண்டும்.

அந்நாளில் பெருமைக்காரருடைய நிலைமை மகா பரிதாபமாயிருக்கும். "நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீறுப்புத்தணியும்" (எசா. 2: 11, 17; 5: 15). அகந்தையுள்ளவர்களுக்கு உச்சந்தலைமொட்டையும் அவர்கள் மானம் குலைக்கப்படுவதுமே கிடைக்கும் (எசா. 3: 16, 17). "இதோ சூளையைப்போல் எரிகிற நாள்வரும். அப்பொழுது அகங்காரிகள்யாவரும் அக்கிரமஞ்செய்கிறயாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்தநாள் அவர்களைச்சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும், கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் வெளியே புறப்பட்டுப் போய் கொழுத்த கன்றுகளைப்போல் வளருவீர்கள். துன்மார்க்கரை மிதிப்பீர்கள். நான் இதைச்செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல். 4: 1—3).

பெருமைக்காரருடைய மூறுக்கெல்லாம், அவர்களுடைய ஆட்டமெல்லாம் இவ்வுலகத்தில்தான். இவர்களுடைய சகல மேன்மைகளும், சகல வம்பும், அகந்தையும், துன்மார்க்கமும், வீண் உல்லாசமும் ஆடம்பரமும் நாசமாய்ப்போம். இவ்வுலகத்தில் தங்களை வானபரியந்தம் உயர்த்தினவர்கள் பாதாளபரியந்தமும் தாழ்த்தப்பட்டிருக்கக் காண்பார்கள். இப்பொழுது இவர்கள் எல்லாருக்கும் மேல் இருக்க விரும்புகிறார்கள். அக்காலத்திலோ இவர்கள் இரட்சகருடைய காலின் கீழும் அவருடைய

பிள்ளைகளுடைய காலின் கீழும் மிதிபட்டுச் சாம்பலாயிருப்பார்கள். பெருமை தன் வாயை மூடும். "இச்சகம் பேசுகிற எல்லா உதடுகளையும், பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப்போடுவார்." (சங். 12: 3).

கர்த்தர் சொல்லுகிறார்: "இப்போதும் நீ முக்கியத்தாலும், மகத்துவத்தாலும் உன்னை அலங்கரித்து, மகிமையையும் கனத்தையும் தரித்துக்கொண்டு, நீ உன் கோபத்தின் உக்கிரத்தை வீசி, அகந்தையுள்ளவனையெல்லாம் தேடிப்பார்த்துத் தாழ்த்திவிட்டு, பெருமையுள்ளவனையெல்லாம் கவனித்துப் பணியப்பண்ணி துன்மார்க்கரை அவர்கள் இருக்கிற ஸ்தலத்திலே மிதித்துவிடு. நீ அவர்களை ஏகமாய்ப் புழுதியிலே புதைத்து, அவர்கள் முகங்களை அந்தரங்கத்திலே கட்டிப்போடு." (யோபு 40: 10-13).

ஐயோ! பெருமைக்கு வரும் பயங்கரமான முடிவை யார் சரியாய் விஸ்தரிக்கக்கூடும்? நம்மில் யாராவது இந்த பயங்கரமான முடிவை அடையாதபடி தேவன் நம்மைக் காப்பாராக. பெருமைக்காரனுடைய முடிவும் அவனுடைய பலாபலன்களும் இவ்வளவு கொடிதாயிருக்கும்போது, புல்லின் பூவைப்போல் ஒழிந்துபோகிற அற்பமான உலகமேன்மையையும் கனத்தையும் இவ்வளவு ஆவலோடும் கரிசனையோடும் தேடி நம்முடைய பிரயாசங்களையும், நேரத்தையும், பலத்தையும் இப்படி வம்பாகவும் வீணாகவும் செலவழிப்பானேன்! "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தன்னைத் தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்."



## XI. அதிகாரம்.

## பெருமையும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழி வகைகளும்.

இப்புஸ்தகத்தை வாசிக்கிறவர்கள் ஒவ்வொருவருடைய மனதிலும் உண்டாகக்கூடிய முதல் கேள்வி: யார் இந்த உலகத்தில் பெருமையில்லாமல் ஜீவிக்கமுடியும்? நாம் செய்கிற நினைக்கிற ஒவ்வொன்றிலும் பெருமை காணப்படுகிறதென்றால் பின்னே எப்படித் தேவனுக்குப் பிரியமாய் ஜீவிக்கிறது? நாம் நினைத்தாலும், பேசினாலும், நடந்தாலும், நம்மைச் சுற்றியிருக்கிறவர்களைப் பார்த்தாலும் பெருமையின் குணங்கள் இயற்கையாய் நமக்குள் இருக்கக் காண்கிறோமே. உண்ணும்போதும் உடுக்கும்போதும், வேலைசெய்யும்போதும் விளையாடும்போதும் பெருமையாயிருக்க ஏவப்படுகிறோமே. நன்மைசெய்கிறதிலும், தேவனுக்கு முன்பாகப் பக்தியாயிருக்கிறதிலும், வேதம் வாசிக்கிறதிலும் ஜெபிக்கிறதிலுங்கூடப் பெருமை நுழைந்துவிடுகிறதே, இதிலிருந்து எப்படித் தப்பிப் பிழைக்கிறது என்பதே. இக்கேள்விகளுக்கு, என் சொந்த அனுபவத்திலிருந்தும் இயேசு கிறிஸ்துவின் சிறந்த முன்மாதிரியிலிருந்தும் மாத்திரம் மறுமொழிகொடுக்கக்கூடியவனாயிருக்கிறேன். பெருமையிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியுமா? முடியும். மனமுண்டானால் இடமுண்டு. இதிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறது தனித்தனி ஆளுக்குரியது. இன்னொருவன் இவ்விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியாது. பெருமையைவிட்டுவிட எனக்கு மனமில்லையென்று ஒரு

வன் சாதித்து, எனக்கு என்ன தண்டனைவந்தாலும் நான் பெருமையாய்த்தான் நடப்பேன் என்று சொல்வானானால் தேவனுங்கூட இவ்விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியாது. முன் சொல்லப்பட்ட ஒவ்வொன்றையும் நுட்பமாய்க் கவனித்தவர்கள் பெருமையானது தனக்கு மாத்திரம் எல்லாவற்றையும் நாடித்தேடுகிற குணம் என்று அறிந்திருப்பார்கள். இதை நான் அல்லது சுயாநுபவம் என்ற வார்த்தைகளில் அடக்கலாம். இந்த நான் என்ற ஆணவம் நீங்குகிறதற்கு அவனவனே விருப்பத்தோடு பிரயாசப்படவேண்டியவனாயிருக்கிறான். ஒரு பொல்லாத குணம் நீங்கவேண்டுமானால் அதற்கு முற்றிலும் எதிரிடையான ஒரு நல்ல குணத்தைப் பழக முயலவேண்டும். இது, முழுவதும் நேர் கிழக்கேயே அல்லது நேர் வடக்கேயே போய்க்கொண்டிருக்கிற ஒருவன் முழுவதும் நேர் மேற்கே அல்லது நேர் தெற்கே திரும்புவதற்குச் சரியாகும். பெருமையையே நாடித் தேடிவந்தவனுடைய பெருமை தொலையவேண்டுமானால் அதற்கு முற்றிலும் எதிரிடையான குணமாகிய மனத்தாழ்மையையே கண்ணுங் கருத்துமாய்த் தேடவேண்டும்; பிரதான தீமையாகிய பெருமை நீங்கவேண்டுமானால் பிரதான வரமாகிய அன்பையே நாடவேண்டும்; உலகத்தாருடைய கனத்தையும் மதிப்பையுமே தேடிவந்த ஒருவன் இன்னொரு உலகத்திற்குரிய புகழ்ச்சியையே தேடவேண்டியவனாயிருக்கிறான்; உலகத்தையே பார்த்த கண்கள் மறு உலகத்தையே பார்க்கவேண்டும்; மிகவும் தாழ்வும் இழிவுமான காரியங்களையே யோசித்துச் சிந்தித்துவந்த மனம் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளையே நாடிச்சிந்திக்கவேண்டும்; நாசியிலே சுவாசமுள்ள மனுஷனையே நம்பிப் பிரியப்படுத்தப் பார்த்தவன், தேவனையே பிரியப்படுத்தி அவரையே நத்திக்கொண்டிருக்கத்தீர்மானிக்கவேண்டும்; எப்பொழுதும் தன்னயத்



தையே நாடி எல்லாவற்றையும் தானே அனுபவிக்க வேண்டுமென்று பிரயாசப்பட்டவன் தன்னைமுழுவதும் மறந்து மற்றவர்களுடைய வாழ்வையும், அவர்கள் நன்றாயிருப்பதையும் அவர்கள் முன்னேறுவதையுமே விரும்பத் தன்னை விட்டுப்போட மனமுள்ளவனாயிருக்கவேண்டும். இப்படிச் செய்ய நமக்குப் பிரியமா? இப்படிச் செய்ய மனமுடையவர்கள்மாத்திரம் இந்தப் பெருமை என்னும் பிசாசின் குணத்திற்குத் தப்பமுடியும். இந்த உலகத்தைவிட்டு மறு உலகத்திற்கு இப்படி முற்றிலும் மனதைத் திருப்புவதும், தனக்கு யாதொரு கனத்தையும் தேடாமல் தேவனுக்கே மகிமையும் துதியும் உண்டாகப் பிழைக்கத்தீர்மானிப்பதும், மற்றவர்களுக்காகவே முற்றிலும் தன்னை வெறுத்துவிடுவதும் வருத்தமாய்த்தான் துவக்கத்தில் காணப்படும். உலகத்தார்முன் பெருமையாய் நடந்தால் போதும், மறுஉலகத்தைப்பற்றி நமக்குக் கவலை ஏன், அதைக் கண்டதார் கேட்டதார், மரித்தபின் மோட்சத்தைக் கண்டதார், நரகத்தைக் கண்டதார், ஆகையால் இவ்வுலகத்திலேயே நாலுபேரைப்போல் நன்றாயிருந்தால்போதும், சகல மகிமையையும் புகழ்ச்சியையும் இங்கேயே அடைந்துகொள்ளுகிறது நலம், இதுவே நமக்குக்கிடைக்கக்கூடிய கண்கண்ட பலன். ஆதலால் இவ்வுலகத்தில் எவ்வளவு பெருமையாயிருக்கக்கூடுமோ அவ்வளவு பெருமையாயிருந்து, எவ்வளவு நன்றாயிருக்கக்கூடுமோ அவ்வளவு நன்றாயிருந்து நமது காலத்தைக் கழிப்போம், மறு உலகத்திற்குரியவைகளைத் தேடுகிற பெரியதனம் நமக்கென்னத்திற்கு என்று சொல்லி மோசம்போய் பரலோக நித்திய வாழ்வை இழந்துபோகிறவர்கள் ஏராளம். இப்படிப்பட்டவர்களுக்குப் பெருமையிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறது மிகவும் வருத்தமாகத்தான் காணப்படும். இப்படிப்பட்டவர்கள் ஒற்றைக்கண்ணர் என்றே சொல்லவேண்டும். இவர்கள் கொஞ்சம் பயற்றங்கூழுக்குத் தன்

ஜேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போன்றவர்கள். இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி பரலோக பேரின்பத்திற்கு அபாத்திரராய்ப் போகிறவர்கள். "இவ்வுலக இம்மையில் தங்கள் பங்கைப்பெற்றிருக்கிற உலகமக்கள்." இரட்சகர் சொன்னபடி, "இவர்கள் தங்கள் பலனை இங்கேயே அடைந்துதீர விரும்புகிறவர்கள்."

ஜனங்கள் இப்படி இவ்வுலகத்தின் வாழ்வையே விரும்பிப் பெருமையாய் நடந்து வருகிறதற்குக் காரணமென்ன? இந்தப்பாவம் உலகத்தாரை இவ்வளவு மும்முரமாய் ஆண்டுகொண்டிருக்கிறதற்குக் காரணமென்ன? காரணம் உண்டு. எது ஒருவனுக்கு அதிக அருமையாகக் காணப்படுகிறதோ அதுவே அவனை அதிகமாய் ஆண்டுகொள்ளக்கூடும். உலகமும் அதிலுள்ள சகல மேன்மைகளும் காணப்படாமல் நித்தியமாயிருக்கிற பரலோகத்தின் மாட்சிமைகளைப் பார்க்கிலும் அதிக அருமையாய்த் தோன்றுகிறதினால்தான் அப்படி நடக்கிறார்கள். "தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்" என்று இரட்சகரே சொல்லியிருக்கிறார். தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையின் உன்னத மேன்மை அவர்களுக்குக் கொஞ்சமேனும் அருமையாகத் தோன்றுகிறதில்லை. தேவனாலே வருகிற மகிமை உலகத்தாருக்கு இவ்வளவு அற்பமாய்த் தோன்றுகிறதற்குங் காரணமென்ன? இதற்குக்காரணமென்னவெனில், பரலோகம் கொடுக்கக்கூடிய மகிமை மனுஷருடைய கண்களுக்குப் பிரத்தியட்சமாய்க் காணப்படுகிறதில்லை, அது அந்தரங்கமாயிருக்கிறது. மனுஷருடைய கண்களும் தேவனுடைய கண்களும் பார்க்கிற இருபார்வை உண்டென்பதை அநேகர் இன்னும் அறியவில்லை. உலகத்தாருக்கு மனுஷபார்வை அதிக பிரத்தியட்சமாய்த் தெரிகிறது. தேவபார்வையோ அவர்களுக்குக்



கொஞ்சமேனும் தெரிகிறதில்லை. தேவனுடையபார்வையின் அருமையை முழுவதும் அறிவோமானால் நலமாயிருக்கும். இவ்வுலகத்தாருடைய பார்வை வெளிப்பார்வை மாத்திரம். அவர்கள் வெளித்தோற்றத்தை மாத்திரம் பார்க்கிறார்கள். "மனுஷன் முகத்தைப்பார்ப்பான்." உலகத்தார் புறம்பான அலங்காரிப்பையும் அழகையும் மாத்திரம் பார்ப்பார்கள். இவர்கள் கண்களைக் கவரக்கூடியது, யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லுகிறபடி, "பொன் மோதிரமும், மினுக்குள்ள வஸ்திரமும்" தான். ஒரு புருஷன் அல்லது ஸ்திரீ உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி ஆபரணங்களினால் தங்களைச் சிங்காரித்து ஒரு கூட்டத்திற்கு வந்தால், அவர்கள் நடக்கையில் எவ்வளவு பொல்லாதவர்களாயிருந்தாலும், அவர்களுக்கு மரியாதை செய்து அவர்களுக்கு முதன்மையான இடம் கொடுத்து அவர்களைப் புகழ்ந்துகொள்வார்கள். சரீர அழகற்று, புறம்பான அலங்காரிப்பொன்றுமில்லாமல் சிறந்த நற்குணங்களையுடைய ஒரு மனுஷனைக்கண்டால் அவனைக் கண்ணேறிட்டுப்பார்க்கக்கூட மாட்டார்கள். "கர்த்தரோ இருதயத்தைப்பார்க்கிறார்." "உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்" (லூக். 16: 15). இவ்வுலகத்தாருடைய பார்வை தன்னயமும் வஞ்சனையுமான பார்வை. பெருமைக்காரன், தன்னையே மற்றவர்கள் எப்பொழுதும் பார்த்து மதித்து வருகிறார்கள் என்று நினைத்துக்கொள்ளுகிறான். அவர்களோ அவனைப் பார்த்தும் பாராதவர்களாகவும், அவனுக்குக் கனத்தைக் கொடுக்கிறவர்களாகக் காணப்பட்டும் அவனை முழு இருதயத்தோடு விரோதித்து அருவருத்து வருகிறவர்களாகவும் இருக்கிறார்கள். தேவனும் பரலோகத்திலிருக்கிறவர்களுமோ, ஆவியில் சிறுமைப்பட்டு தேவனுடைய வசனத்திற்கு நடுங்குகிறவனை எப்பொழுதும் நோக்கிப்பார்த்து அவனைப் புகழ்ந்து வருகிறார்கள். நித்தம் அவனுடைய பேர் பரலோகத்தில் சொல்லிக்கொள்ளப்படுகிறது. பா

லோக முழுவதும் அவன்நிமித்தம் சந்தோஷப்படுகிறது.
இப்பேர்ப்பட்ட பார்வையையும் கனத்தையும்மதிக்கிறவ
ன் எவனோ அவனே ஞானவான், அவனே பொறுமைசா
லி, அவனே மனத்தாழ்மையுள்ளவன் அவனேபெருமை
யிலிருந்து தப்பித்துக்கொள்ளக் கூடியவன். ஆகையால்
ஒருவன் பெருமைக்குத் தப்பித்துக்கொள்ள விரும்பினால்
உலகத்தாராலே தனக்கு வரக்கூடிய மகிமையை முக்கி
யப்படுத்தி அதை அருமையாக எண்ணுகிறதைவிட்டு,
தேவனாலே வருகிற மகிமையை மாத்திரம் அதிகமாய்
முக்கியப்படுத்தி அதையே மேன்மையாக எண்ணவேண்
டும் என்று பார்க்கிறோம். பூமிக்குரிய மேன்மை எவ்
வளவு இழிவும், அற்பமும் நிலையற்றதுமானதென்ப
தை நாம் நன்றாய் உணரவேண்டும். இதைத் தேவமகி
மையோடே ஒப்பிட்டுப்பார்த்தால், அது அம்மகிமையோ
டே ஒப்பிடப்படக்கூடாதபடி அவ்வளவு அற்பமானது
என்று அறிந்துகொள்வோம். தேவனாலே வருகிற மகி
மையை ஒரு சமுத்திரத்திற்கு ஒப்பிட்டால் உலகம் கொ
டுக்கக்கூடியதை ஒரு துளி தண்ணீருக்கு ஒருவேளை ஒப்
பிடலாம். மேலும் இது ஒரு நிமிஷத்தில் ஒழிந்துபோ
கக்கூடியது. ஒருவனுடைய பேர் எவ்வளவு சீக்கிரமாய்
மறக்கப்பட்டுப்போகிறது! தேவன் நமக்குக் கொடுக்கப்
போகிற மகிமையோ நித்திய நித்தியகாலமாக நிலைநிற்கக்
கூடியது. தேவன் நமக்கு அவருடைய மகிமையின் அ
ருமையைக்காட்டி, அதையே அதிகமாக மதித்து, உலக
மேன்மையைக் காலின்கீழ் மிதித்துப் புறம்பாக்கத் தே
வன் நமக்குக் கிருபைசெய்யக் கெஞ்சுவோமாக.

நான் என்ற ஆணவமாகிய பெருமையிலிருந்து தப்
பித்துக்கொள்ள விருப்பமுடையவர்களுக்கு மாத்திரம்
நான் தேவனுடைய ஒத்தாசையைக்கொண்டு சொல்லப்
போகிற ஆலோசனைகள் பிரயோஜனமுள்ளவைகளாயி
ருக்கும்.



I. மனிதரால் வருகிற மகிமையை அற்பமாய் எண்
ணி அதை ஏற்றுக்கொள்ளாமல் எப்பொழுதும் எல்
லாவற்றிலேயும் தேவனுக்கே மகிமைசெலுத்தப் பழ
குவதினாலே பெருமைக்கு நீங்கலாகலாம்.

"தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தி
னாலும் உங்கள் ஆவியினாலும் தேவனைமகிமைப்படுத்து
ங்கள்" (1 கொ. 6:20). வானலோகத்திலுள்ளவைக
ளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய சகலமும் தேவ
னுடைய மகிமைக்கென்றே சிருஷ்டிக்கப்பட்டன. நா
மும் அவருக்கு மகிமையாக ஜீவிக்கவும், அவருடைய ம
கிமையை அறிவிக்கவுமே உண்டாக்கப்பட்டோம். நாம்
நம்முடையவர்களல்ல. நாம்கிரயத்திற்குக்கொள்ளப்பட்
டோம். சகல மகிமையும், கனமும், துதியும், ஸ்தோத்
திரமும் தேவனுக்கே எப்பொழுதும் செலுத்தப்பட
வேண்டும். அவைகளுக்கு அவரே உரியவரும் பாத்திர
ருமாயிருக்கிறார். தேவனுக்குச் செலுத்தப்படவேண்டி
ய மகிமையை யார் யார் தங்களுக்குத் தேடுகிறார்களோ
அவர்களே பெருமைக்காரர். பாவஞ்செய்த தூதர்கள்,
தேவனுக்குச் செலுத்தப்படவேண்டிய மகிமையைத் தங்
களுக்குத் தேடினபடியால்தானே பெருமை உற்பவித்த
து. நாம் முன்கண்டபடி, நமது கிரியைகள் ஒவ்வொன்
றிலும் பெருமை கலந்திருக்கிறது. நாம் இயற்கையாய்ச்
செய்துவருகிற நன்மையான காரியங்களிலும் பெருமை
நுழைந்திருக்கிறதென்றும் பார்த்தோம். நாம் நடக்கி
றதிலும், பார்க்கிறதிலும், உண்கிறதிலும், உடுக்கிறதி
லும், வேலைசெய்கிறதிலும், விளையாடுகிறதிலும், தேவ
னுக்கு முன்பாகப் பக்தியாயிருக்கிறதிலும் பெருமை இ
ருக்கிறதென்று ஏன் சொல்லுகிறோம்? இவைகளெல்
லாம் நன்மையான காரியங்கள்தானே. மேலேசொல்லப்
பட்டவைகளினாலே நாம் மனுஷரிடத்திலிருந்து யாதே
னும் மதிப்பைப் பெறவிரும்பும்போதுதான் அவைக
ளெல்லாம் பெருமையாகக் காணப்படுகிறது. ஆகை

யையால், நமது சரீரத்தினாலும் ஆவியினாலும், நாம் செய்கிற கிரியைகள் எல்லாவற்றினாலும் தேவனுக்கு எப்பொழுதும் மகிமையைச் செலுத்திக்கொண்டே யிருப்போமானால், அப்பொழுது பெருமைக்கு நீங்கலாகிறோம். நாம் நமக்கு மகிமையைத் தேடுவது தேவனுடையதைத் திருடுகிறதற்கும் அவரை வஞ்சிக்கிறதற்கும் சமானம். ஆகையால் நாம் தேவனுக்கு முன் திருடர்களாகவும் வஞ்சிக்கிறவர்களாகவும் காணப்படாதபடி தேவனுக்குரிய மகிமையை அவருக்கே குறைவின்றி நிமிஷந்தோறும் செலுத்தும்படி பிரயாசப் படுவோமாக.

மனுஷரிடத்திலிருந்து யாதொரு கனத்தையும், மதிப்பையும் எதிர்பார்க்கவே மாட்டேன் என்று தீர்மானிக்க நமக்குப் பிரியமா? உலகம் தரக்கூடிய எந்தவிதமான மேன்மையையும் அரோசிக்க நமக்குப் பிரியமா? நம்மையும் நாம் செய்கிற எல்லா நற்கிரியைகளையும் மற்றவர்கள் எப்படியாகிலும் பார்த்து நம்மை மதிக்கவேண்டும் என்ற எண்ணம் நம்மெல்லாருக்கும் இலேசாக வரக்கூடியது. அவர்கள் அவைகளை மெச்சிக்கொள்ளுகிறார்கள் என்று அறியுமளவும் மனதிற்கு ஆறுதலிராது. இவ்விஷயத்தில் நாம் செய்யக்கூடியதென்ன? அப்படிப்பட்ட எண்ணம் நம்மில் எழும்பும்போது அதைச் சட்டைபண்ணாமல் அதை அடக்கப் பிரயாசப்பட்டு முதலாவது தேவனை நோக்கவேண்டும். அவரை நோக்கி: இந்த மகிமை எனக்கு வேண்டாம், நீரே சகல கனத்திற்கும் பாத்திரர், நீரே இதை ஏற்றுக்கொள்ளும். நீர் மாத்திரம் மகிமைப்படவேண்டும். நான் இதை எனக்குத் தேடாதபடி என்னைக் காத்துக்கொள்ளும் என்று சொல்வோமாக. “எங்களுக்குஅல்ல, கர்த்தாவேஎங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்” என்று எப்பொழுதும் சொல்லக்கூடுமானால் நலமாயிருக்கும்.



நாம் நடக்கும்போதும், பேசும்போதும், சிரிக்கும்போதும் முதலாவது தேவனையே நினைப்போமாக. வேலைஸ்தலங்களிலும், விளையாடும் இடங்களிலும், வீட்டிலும் வெளியிலும், நமக்குப் பெருமைவரக்கூடிய வேறே எந்த இடத்திலும், அவரையே நினைத்து அவருக்கே மகிமையைச் செலுத்தப்பழகுவதே பெருமையைக் கொல்லும் மருந்து. நாம் ஒவ்வொரு நிமிஷமும் எப்படித் தேவனுக்கு மகிமையைச் செலுத்தலாமென்பதைப் பற்றி இப்பொழுது பார்ப்போம்.

ஒருவன் நமக்குச் சலாம் பண்ணினால், அவனுக்குச் சலாம் பண்ணுகிறதோடு தேவனே உமக்குச் ‘சலாம்’ என்று சொல்லப் பழகுவோமாக. வஸ்திரங்களை உடுக்கும்போது என் தேவனுடைய மகிமைக்காக இதை உடுக்கிறேன் என்று சொல்லக்கூடுமோ? ஆபரணங்களை அணிகிறதற்கு ஆசை வரும்போது தேவன் இவைகளின் மூலமாய் மகிமைப்படுவாரா என்ற கேள்வியைக் கேட்போமாக. வாலிபரே, வாலிப ஸ்திரீகளே, இது விஷயத்தில் நமக்கு வரக்கூடிய சோதனைமெத்த. நன்றாய் உடுத்தவேண்டும், நன்றாய் அலங்கரிக்கவேண்டும், அழகாய் விளங்கவேண்டும் என்ற எண்ணங்கள் நமக்கு இலேசாக வரக்கூடும். நமது கண்கள் ஒரு நிலையில் நில்லாமல் நம்மையும், மற்றவர்களையும் அங்கும் இங்கும் பார்த்த வண்ணமாகவே இருக்கும். இதை எப்படி மேற்கொள்ளப் போகிறோம்? இது விஷயத்தில் தேவன் தான் நமக்கு உதவிசெய்து நம்மைக் காக்கவேண்டும். நமது அழகோடு கிறிஸ்துவும் சேர்ந்து காணப்படுவாரானால் நாம் எவ்வளவு அதிக அழகாய்க்காணப்படுவோம்! நம்மையும் நமது அழகையும் மறந்து விடுவோமாக. நமது வஸ்திரங்களின்மேலும், நகைகளின் மேலும், அலங்காரிப்பின் மேலும், நமது பார்வைசெல்லவேண்டாம், கிறிஸ்துவையே நோக்கிப் பார்ப்போமாக. வஸ்திரப் பிரியத்தையும், ஆபரணப்பிரியத்தையும் முற்றிலும் அகற்றிவிட நமக்

குப் பிரியமா? இவைகளை நான் உடுக்கும்போதும், போடும்போதும் கிறிஸ்து என் பக்கத்திலிருந்தால் அவர் அவைகளைப்பற்றி என்ன நினைப்பார்? அவைகளினால் என்னை அலங்கரிக்க எனக்கு உத்திரவு கொடுப்பாரா? கிறிஸ்துவின் மகிமையைத் தேடுகிறேனா, என் அழகை மட்டும் தேடுகிறேனா என்று நம்மை நாமே கேட்போமாக. கிறிஸ்துவானவர் மட்டும் நம்மில் காணப்படுகிறதுண்டானால் நாம் கறுப்பாயிருந்தாலும் அழகாயிருப்போம், கந்தையை உடுத்தியிருந்தாலும் காசிப்பட்டைத் தரித்தவர்கள்போலக் காணப்படுவோம். யாதொரு நகையும், புறம்பான அலங்கரிப்பும் இல்லாதவர்களாயிருந்தாலும், சகல விலையேறப்பெற்ற ஆபரணங்களையும் அணிந்து, சகல அலங்கரிப்பினாலும் அலங்கரிக்கப்பட்டு மிகவும் சௌந்தரியமுள்ளவர்களாய் விளங்குவோம். "நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள்போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்." வாலிபரே, வாலிப ஸ்திரீகளே, நம்மைக் கொள்ளைகொண்டுபோகிற இந்தப் பெருமையைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருந்து, நமது நடபடிகள் எல்லாவற்றிலும் தேவனுக்கே எப்பொழுதும் மகிமையைச் செலுத்துவோமாக.

ஒருவன் நம்மில் யாரையாவது பார்த்து, நீ அதிக அழகாயிருக்கிறாய் என்றாவது, நீ அதிகக் கெட்டிக்காரனென்றாவது, இன்று உன் வேலையை எல்லாரைப் பார்க்கிலும் மிகவும் நன்றாய்ச் செய்திருக்கிறாயென்றாவது, கூட்டத்தில் இன்று வெகு சாதுரியமாய்ப் பேசினாயென்றாவது சொல்லும்போது, தேவனே இவைகளினால்வருகிற கனத்தை உமக்கே கொடுக்கிறேன் இது என்னுடையதல்லவென்று உடனே சொல்லுவோமாக. அநேக ஜனங்கள் கூடியிருக்கிற கூட்டத்தில் நமது பேர் வாசிக்கப்படும்போதும், நம்மைப்பற்றிப் புகழ்ச்சியாய் நற்சாட்சி கொடுக்



கும்போதும், அவர்கள் மத்தியில் நமக்கு இனம் அளிக்கப்படும்போதும், இவைகளினிமித்தம் ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக்கொட்டி ஆர்ப்பரிக்கும்போதும் நம்மைத்தாழ்த்தி, கர்த்தாவே உமக்கே மகிமை, உமக்கே மகிமை என்று நமது இருதயத்தில் ஆர்ப்பரிப்போமாக. விசேஷித்த கூட்டங்களை நடத்தும்படியாக ஏற்படுத்தப்பட்டுக் கூட்டங்களில் முதன்மையாய் நின்று நடத்தும்போதும், ஆவிக்குரிய காரியங்களில் அதிக முயற்சியாய் அங்கும் இங்கும் ஓடித்திரியும்போதும் நமக்குப் பெரிய சோதனைவரும். எல்லாரும் என்னை பக்தியுள்ளவனென்று நினைத்து என்னைக் கனம் பண்ணுவார்கள் என்ற எண்ணம் இலேசாக நமது மனதில் எழும்பும். அந்தச்சமயத்தில் தேவனையே நோக்கிப்பார்த்து அவருக்கே மகிமையைச் செலுத்துவோமாக.

அதிகாரிகளாயும், உயர்ந்த உத்தியோகம் பெற்றவர்களாயுமிருக்கிறவர்கள் கூட்டங்களில் சபாநாயகர்களாக வீற்றிருக்க இடம்பெற்று, மற்றவர்கள் அவர்கள் கழுத்துகளில் பூமாலைகளையும் தங்கமாலைகளையும் போட்டு வந்தனோபசார பயனோபசார பத்திரங்களை வாசிக்கும்போதும், அவர்கள் ஜனங்களோடு ஏதாவது பேச சிலாக்கியம் பெறும்போதும், அவர்களெல்லாரும் கைகொட்டி ஆர்ப்பரிக்கும்போதும் அவைகளினால் வருகிற கனத்தையும் மதிப்பையும் கொஞ்சமேனும் ஏற்றுக்கொள்ளாமல் தேவனுக்கே சகல அதிகாரத்தையும், மேன்மையையும் கொடுக்க மனமுடையவர்களாயிருக்க வேண்டும்.

சாதுரியமாய்ப் பிரசங்கிக்கத் திறமையுடையவர்கள், பல இடங்களிலும் பிரசங்கம்பண்ணக் கேட்டுக்கொள்ளப்பட்டுப் பிரசங்கிக்கும்போது, அவர்களுடைய சாதுரிய பிரசங்கத்தினிமித்தம் அவர்கள் கைகளைக் குலுக்கி மெச்சிக்கொள்ளுவார்கள். அந்தச்சமயத்தில் கனத்தைத் தங்களுக்குரியதாக எண்ணி ஏற்றுக்கொள்ளாமல் தேவ

னை ஸ்தோத்திரிக்கப் பிரயாசப்படவேண்டும். "இது மனுஷ சத்தமல்ல, இது தேவ சத்தம்" என்று ஜனங்கள் ஆர்ப்பரித்தபோது ஏரோது தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியால் அவன் புழுப்புழுத்து இறந்ததை மனதிலெண்ணி எச்சரிப்படையவேண்டியது.

தேவ ஊழியர் கிறிஸ்துவுக்காகத் தங்களை வெறுத்து, ஆத்துமாக்களுக்காக மிகவும் கவலைப்பட்டு உழைத்து வருகிறதினாலே அவர்கள் மூலமாய் அநேக ஆத்துமாக்கள் பல இடங்களிலும் குணப்படும்போதும், அநேக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுச் சபையார் காணிக்கைகொடுக்கிறதிலும், ஆவிக்குரிய ஜீவியத்திலும் முன்னேறி நற்சாட்சி பெறும்போதும், அவர்களுடைய பேர்கள் பத்திரிகைகளில் அதிகப் புகழ்ச்சியாக எழுதப்படும்போதும், தங்களுடைய அபாத்திர தன்மையை உணர்ந்து தேவனுக்கே மகிமையைச் செலுத்துவார்களானால் பரலோகத்தில் அதிக பலனையடைவார்கள். "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்". (லூக். 17 : 10).

பொதுஜன நன்மையை விரும்பி தங்கள் பணத்தையெல்லாம் செலவழித்து வருகிறதினாலே சகல ஜனங்களாலும் உபகாரிகள் என்று எண்ணப்படுகிறவர்கள், தங்கள் பணத்தினாலே அநேக ஏழைகள், அனாதப்பிள்ளைகள் ஆதரிக்கப்பட்டு, அநேக கட்டடங்கள் அவர்கள் பேராலே கட்டப்பட்டு அவர்கள் பேர் பத்திரிகைகளில்போடப்பட்டு உலகமெங்கும் சொல்லிக்கொள்ளப்படும்போது, தங்களுக்குக்கிடைக்கிற மதிப்பைத் தேவனுக்குக் கொடுப்பார்களானால் பெருமைக்கு நீங்கலாகி பாக்கியமடைவார்கள்.

ஐசுவரியவான்கள், சகல நிலைமைக்கும் வேராயிருக்கிற



தங்களுடைய ஐசுவரியத்தைக்குறித்துப் பெருமைபாராட்டாமல், தேவனை நோக்கி: வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள், ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது, என் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தேன், வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பவும் போவேன் என்று சொல்லி தேவனுடைய மகிமைக்கென்று தங்கள் ஆஸ்திகளையெல்லாம் அவருக்கே தத்தம் பண்ணுவார்களானால் பரலோகஇராஜ்யம் அவர்களுடையதாகும்.

ஞானிகளென்றும் கல்விமான்களென்றும் எண்ணப்படுகிறவர்கள், தங்களைப் பைத்தியக்காரரென்றும், அறிவீனரென்றும் எண்ணி, பவுல் அப்போஸ்தலன் பின்வருகிறபடி சொல்லுகிற அருமையான வார்த்தைகளின்படித் தங்களை முழுவதும் தாழ்த்தித் தங்களுக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமான கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டுவார்களாக. "ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன். ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத்தின் தர்க்க சாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா? ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்திலே பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராடாதபடிக்கு அப்படிச் செய்தார்." இப்படியே ஒவ்வொருவரும் தங்களுக்குப் பெருமைவரக்கூடிய எல்லாவற்றிலும் தேவனையே நினைத்து அவருக்கே சகல மகிமையையும் ஒவ்வொரு நிமிஷமும் செலுத்திக்கொண்டு வரும்போது பெருமைக்கு

இடமில்லை. பெருமைக்காரரென்று பேரெடுக்கவும் எ
துவில்லை. தேவன் அவர்களை மேன்மேலும் ஆசீர்வ
தித்து எல்லாருக்கும் மேலாக உயர்த்தி அவர்களில் ம
கிழ்ச்சிகொள்ளுவார்.

II. தேவன் சிருஷ்டித்திருக்கிற அவருடைய மகத்
துவமான கிரியைகளையும், அவர் ஞானமாய் நடத்தி
வருகிற பலவித ஆச்சரியமான காரியங்களையும் பார்த்
துத் தியானித்து வருகிறதினாலே ஒருவனுடைய பெரு
மை நீங்கும்.

தேவனுடைய மகத்துவத்தையும், அவருடைய மகிமை
யையும் காணக்காண, அவரை தரிசிக்கத் தரிசிக்க நம்மை
மிகவும் தாழ்த்த ஏவப்படுவோம். எசாயா தேவனுடை
ய மகிமையைக் கண்டபோது அவன்: "நான் அசுத்த
உதடுகளுள்ள மனுஷன்" என்று சொல்லித் தன்னை எவ்
வளவாய்த் தாழ்த்தினான்! நாம் துணிகரமாய்ச் செய்து
வருகிற அநேக பாவங்களுக்கும், நம்மைத்தான் உயர்த்
தி மேட்டிமையாய் நடக்கிறதற்கும் காரணம் தேவனு
டைய மகிமையைக் கொஞ்சமேனும் உணராமல் ஜீவிக்கி
றதே. அவருடைய மகத்துவமும், அவருடைய பயங்க
ரமும் எவ்வளவென்று சரியானபடி அறிந்திருக்கிறோமா?
அவர் உண்டாக்கியிருக்கிற ஆச்சரியமும் அதிசயமுமான
வைகளை உற்றுப்பாருங்கள். பர்வதங்களின் மேலேறி
அவருடைய கிரியைகள் எவ்வளவு அழகாயிருக்கின்றன
வென்று பாருங்கள். என் மனதில் அடிக்கடி ஒரு எண்
ணம்வருகிறதுண்டு. அதாவது: அருமை இரட்சகர் என்
மேல் கிருபைகூர்ந்து என்னை ஆவிக்குள்ளாக்கி, தமது
மகிமையை முதலாவது எனக்குக் காட்டி, பின்பு என்
னைத்தம்மோடுகூடக் கூட்டிக்கொண்டுபோய் தமது மகத்
துவமான கிரியைகள் ஒவ்வொன்றையும் எனக்குக் காட்
டவேண்டும். தமது இரதத்தில் என்னை ஏற்றி, முதலா
வது சூரியனுக்குக் கூட்டிக்கொண்டுபோய் அதின் காந்



தையையும் அதின் விஸ்தீரணம் முழுவதையும் காட்டி,
பின்பு அறுமீன், மிருகசீரிஷம், துருவச்சக்கரநட்சத்திரம்
முதலியவைகளின் அதிசயத்தையும் அவைகளின் சுகிர்த
சம்பந்தத்தையும் எனக்கு விபரித்து, பின்பு வானமண்ட
லங்களிலுள்ள அவருடைய ஆச்சரியமான கிரியைகள்
எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் காண்பிக்கவேண்
டும். பின்பு சமுத்திரங்களின் ஆழங்களுக்குள் என்னைக்
கொண்டுபோய் அங்கே உலாவி விளையாடுகிற சிறிதும்
பெரிதுமான மச்ச வகைகளையும், அங்கு விளைகிற முத்
துக்களையும், அங்குகாணப்படுகிற ஆச்சரியமான பொருட்
களையும் எனக்குக் காட்டவேண்டும். அவருடைய சகல
கிரியைகளையும் காட்டின பின்னால், பரலோகத்தின் மத்
தியில் என்னைக்கொண்டுபோய் நிறுத்தி, தூதர்கள் தேவ
னுக்குச் செலுத்துகிற மகிமையையும், தயவில் அன்புகூ
ருகிறவர்களுக்கு அவர் ஆயத்தம் பண்ணிவைத்திருக்கிற
வைகளையும், மோட்சத்தின் சகல மகிமைகளையும் என்
கண்கள் காணும்படி செய்யவேண்டும். பின்பு நரகலோ
கத்திற்குப்பக்கமாய் என்னைக்கொண்டுபோய், பெருமை
யினால் தங்கள் ஆதிமேன்மையை இழந்த தூதர்கள் அந்
தகாரச் சங்கிலிகளினால் கட்டுண்டு கிடக்கிறதையும்,
மேட்டிமையாய் நடந்து, துணிகரமாய்ப் பாவங்களைச்
செய்துவருகிறவர்களுக்கு அவர் ஆயத்தம்பண்ணி வைத்
திருக்கிற அவியாத அக்கினியையும், மற்றும் பயங்கரமா
ன காரியங்களையும் எனக்குக்காட்டவேண்டுமே என்பதே.
இவைகளையெல்லாம் என கண்ணால் பார்த்தபின் நான்
எப்படிப்பட்ட நிலைமையில் இருப்பேன்! என் இருதயம்
எப்படியிருக்கும்! எவ்வளவாக நான் என்னை அருவருத்
துத் தாழ்த்துவேன்! பூமியின் மேன்மைகளும் அதின்
இன்பங்களும் எவ்வளவு அற்பமும், கேவலமுமாகத்
தோன்றும்! தேவனுடைய மகத்துவம் முழுவதும் நமக்
குத் தெரியுமானால் நலமாயிருக்கும். அப்பொழுது நாம்
நம்மை அருவருத்து, தூளிலும், சாம்பலிலும் உட்காரு

து நம்மைத்தாழ்த்துவோம். நாம் அவருடைய மகத்துவத்தைக் காணக்காண, அவருடைய மகிமை நமது இருதயத்தை நிரப்ப நிரப்ப நாம் பரவசப்பட்டு: நான் ஒரு புழு, தூசி மாத்திரம் என்று சொல்லி அவரில் காணப்படாமல் போவோம். "ஆ! தேவரீருடைய ஐசுவரியம், ஞானம், அறிவு, என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள்! அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! சகலமும் அவராலும், அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக, ஆமென்."

III. ஒருவன் தன்னையும், தன் குறைவுகளையும், தன் ஒன்றுமில்லாமையையும் அறிந்து, தன்னில் அதிருப்திகொண்டு, தன்னைத்தாழ்த்தி வெறுமையாகிறதினாலே பெருமைக்குத் தப்பித்துக்கொள்ளலாம்.

நாம் யாரென்றும், நமது கிரியைகள் எப்படிப்பட்டவையென்றும் நமக்குத் தெரியுமா? நாம் நம்மைக்குறித்து என்ன சாட்சி கொடுக்கிறோம்? நம்மைப்பற்றி நமக்கிருக்கிற எண்ணமும் மதிப்புமென்ன? நாம் மிகுந்த பெருமைக்காரரென்றும், நமது கிரியைகள் எல்லாம் பெருமையின் கிரியைகள்தான் என்றும் உள்ளபடியே அறிந்திருந்தால் நாம் பாக்கியவான்களாயிருப்போம். நான் செய்கிறதெல்லாம் பெருமையாயிருக்கிறதே, நான் என்னசெய்வேன் என்று புலம்பி அழுகிறோமா? அப்படியானால் நமக்கு நம்பிக்கை உண்டு. பெருமையாயிருப்பது எனக்குக் கொஞ்சமேனும் பிரியமில்லை, என்றாலும் என்னை அறியாமலே பெருமை எனக்குள் நுழைந்துவிடுகிறதே என்று நித்தம் அங்கலாய்த்து அழுகிறோமா? பெருமையிலிருந்து சீக்கிரம் விடுதலை பெறுவோம். ஒருவனுக்கு ஒரு காரியத்தைப்பற்றி வெறுப்பில்லாவிட்டால் அவன் அதை எப்படி அருவருத்துவிட்டுவிடக்கூடும்?



பெருமையாயிருப்பது எனக்குச் சம்மதியில்லையென்றால் எப்படியாகிலும் நித்தம் தாழ்மையாயிருக்கக் கொஞ்சங் கொஞ்சமாகிலும் பிரயாசப்படவேண்டாவா? நாம் அடிக்கடி மற்றவர்களுடைய கனத்தைத்தேடப் பிரியப்பட்டுவிட்டாலும், இந்தச்சோதனையில் திரும்பத்திரும்ப விழுந்துவிட்டாலும், அதைரியத்திற்குஇடங்கொடுத்துத் தளர்ந்துபோகாமல், இதுதான் கடைசி, நான் இனிமேல் தேவ ஒத்தாசையைக்கொண்டு உலக மேன்மையை நாடமாட்டேன் என்று சொல்லுவோமாக. பதினாயிரந்தரம் அப்படிச்சொல்லியும் பதினாயிரம் தரமும் விழுந்துபோனாலும், பதினாயிரத்தோராவதுதரமும் அப்படிச் சொல்லுவோம். நிச்சயமாகவே முடிவில் வெற்றிபெறுவோம். ஜனங்கள் எல்லாரும் தாங்கள் பெருமைக்காரர் என்பதை ஏற்றபடி அறிந்து, பெருமையைவிட்டுவிடப் பிரயாசப்படுவார்களானால் எத்தனை நன்மையாயிருக்கும். நான் மிகுந்த பெருமைக்காரன் என்ற பட்டம்பெற்றவனாயிருந்தாலும், எனக்குள்ளே நான் சந்தோஷப்படுகிற ஒரு காரியம் உண்டு. அதென்னவெனில், நான் மிகுந்த பெருமைக்காரன் என்று எனக்கு நன்றாய்த்தெரிவதும், பெருமையானது என் நடபடிகள் ஒவ்வொன்றிலும் எப்படிக் கிரியை செய்கிறது என்பதைக்கண்டுகொள்ளுவதும், மற்றவர்கள் பெருமையாய் நடக்கும்போது அவர்கள் நடிப்பையும், மேட்டிமையான காரியங்களையும் காண்கையில் அவர்கள்மேல் எனக்கு வெறுப்புவருகிறதினால், நானும் அப்படி மற்றவர்களால் அருவருக்கப்படாதபடி பார்த்துக்கொள்ளப் பிரயாசப்படுவதுமே. நமது பெருமையெல்லாம் பட்டப்பகல் போல நமக்குத்தெரியுமானால், அநேக பாவங்களுக்குத் தப்பித்துக்கொள்வோம் என்பதற்கும், பெருமையானது நாளுக்குநாள் குன்றி, தாழ்மையானது நம்மை நமக்குத் தெரியாமலே மூடிக்கொண்டுவரும் என்பதற்கும் சந்தேகமில்லை.

நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் திருப்தியடைந்துபோகாமல், அதிருப்திகாட்டுவதே நலம். நமது திறமையையல்ல நமது பெலவீனங்களையே அடிக்கடி நினைப்பது நலமாயிருக்கும். நாம் கெட்டிக்காரரென்றும் நல்லவர்களென்றும் நமக்கே தெரியாமலிருப்பது நலம். நாம் நமது பார்வையில் பெரியவர்களாய்க் காணப்படுகிறோமா, மிகவும் சிறியவர்களாகக் காணப்படுகிறோமா? நம்மைப் பற்றிப் பெரிய எண்ணமுடையவர்களாயிருக்கிறோமா, தாழ்ந்த எண்ணமுடையவர்களாயிருக்கிறோமா என்று சோதித்துப்பார்க்கவேண்டும். நம்மிலிருக்கிற ஏதேனும் ஒன்றைகுறித்துக்கூட மேன்மைபாராட்ட இடமில்லை. "ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும் தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால் தன்னைத் தானே வஞ்சிக்கிறவனாவான்." நம்மை நாம் ஒரு பொருட்டாக எண்ணுகிறோமோ? "நான் ஒரு மனுஷனல்ல, ஒரு புழு". நாம் அதிக அறிவுள்ளவர்கள் என்று எண்ணி நம்மை மெச்சிக்கொள்ளுகிறோமோ? "ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால் ஒன்றையும் அறியவேண்டியபிரகாரம் அவன் இன்னும் அறியவில்லை". நாம் அதிகப் பக்தியுள்ளவர்களென்றும், மகா பிரதான பரிசுத்தவான்களென்றும் நினைத்துப் பெருமை பாராட்டுகிறோமோ? "உன் நீதி கந்தை. உன் இருதயத்தின் நினைவெல்லாம் நித்தமும் பொல்லாதது" என்று தேவன் நம்மைப்பார்த்துச் சொல்லுகிறார். "எப்பிராயீமே, உனக்கு என்னசெய்வேன்? யூதாவே, உனக்கு என்னசெய்வேன்? உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப்போலவும் ஒழிந்துபோகிறது" என்று துக்கத்தோடு சொல்லுகிறார். மேன்மைபாராட்டல் எங்கே? நாம் எல்லாரும் தேவனுக்குமுன்பாகச் சுத்த சூனியமல்லவோ? நாம் மாயையிலும் இலேசானவர்களல்லவோ?



இப்படி நாம் நமது குறைவுகளையும், நமது ஒன்றுமில்லாமையையும் உணர்ந்து சிந்தித்து நம்மைத்தாழ்த்தி வரும்போது நமது இருதயம் நொறுங்குண்டு, சொல்லிமுடியாத துக்கத்திலும் வியாகுலத்திலும் மூழ்கியிருப்போம். அப்பொழுது உல்லாசமாயிருக்கவும், பெருமையான கிரியைகளை நடப்பிக்கவும் நமக்கு மனம் வராது. இவ்விதமாய்ப் பெருமையிலிருந்து தப்பித்துக்கொள்ளுவோம்.

**IV. சுயநயத்தை முற்றிலும் தவிர்த்து, பிறர் நயத்தைத் தேடுவதினாலும், நமது தேசத்தின் நிர்ப்பந்த நிலைமையை நினைத்து அதற்காகக் கவலைப்பட்டு வருகிறதினாலும் பெருமைக்குத் தப்ப ஏதுவுண்டு.**

"உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல உன் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்ற இராஜரீக பிரமாணத்தையும், "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்ற பொற்பிரமாணத்தையும் நாம் நிறைவேற்றக்கூடுமானால் பெருமையும் நம்மைவிட்டு நீங்கும். நமது சகல எண்ணங்களும், நமது வாஞ்சையும் மற்றவர்களுக்காகவே இருக்கட்டும். நமது சந்தோஷத்திற்காக அல்ல மற்றவர்களுடைய சந்தோஷத்திற்காகவே பிழைப்போமாக. ஒருவன் தன்னையும், தன் வாழ்வையும் நினைக்கும்போதுதானே பெருமை அவனுக்குள் நுழைகிறது. நாம் பிறனையும் அவர்களுடைய வாழ்வையுமே விரும்பி உழைக்கிறதுண்டானால் பெருமைக்கு இடமிராது.

நமது தேசத்தின் நிர்ப்பந்த நிலைமையை அடிக்கடி நினைப்போமாக. நமது தேசத்தின் அஞ்ஞானமும் அறிவீனமும் எப்போதும் நமது கண்முன் இருப்பதாக. "என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்திற்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்?" என்று எஸ்தர் கொண்

டவைராக்கியம் நமக்கும் இருக்குமானால் நலமாயிருக்கும்.

தேசத்திலுள்ள தரித்திரரையும், பலவித கொள்ளை நோய்களினால் நாடோறும் வாதிக்கப்படுகிறவர்களையும், ஆஸ்பத்திரிகளிலும், மற்றும் இடங்களிலும் பலவித வியாதிகளினால் வருத்தப்பட்டுக் கஷ்டமும் வேதனையும் அடைகிறவர்களையும், அக்கினி, கப்பல் சேதம், பூகம்பம் முதலிய ஆபத்துகளில் அகப்பட்டுத் துக்கத்தில் மூழ்கியிருக்கும் நானாவித ஜனங்களையும் நினைத்து அவர்களுக்காக மனத்தோடு கண்ணீர் விட்டு ஜெபித்து வருவோமாக.

நாம் ஒரு பிரேதத்தண்டை நிற்கும்போது, துக்கமடைந்து: இப்படித்தானே என் முடிவும் இருக்கும், நான் இந்த உலகத்தில் மற்றவர்களால் புகழப்படும்படி வாழ்ந்தென்ன பிரயோஜனம் என்று சொல்லி நம்மைத் தாழ்த்தி வெறுக்கிறதில்லையா? அப்படியானால் ஒரு நிமிஷத்திற்கு மாத்திரத்தில் மேலாக சாகிற ஜனங்களை நினைத்துப் பார்ப்போம். அவர்களில் மிகுதியானபேர் எரிநரகத்திற்கு விரைந்து செல்லுகிறார்களே என்பதையும் நினைத்துக் குறைப்படாத ஆத்துமாக்களுக்காகக் கவலைப்பட்டு அவர்களுடைய இரட்சிப்புக்கென்று நம்மைத் தத்தம் பண்ணுவோமாக. ஒவ்வொரு நிமிஷமும் சாகிறவர்கள் எல்லாரையும் சரியாய் நின்றுபார்த்து அவர்களுக்காகக் கண்ணீர் விடக்கூடுமானால் நமது இருதயம் எப்படியிருக்கும்! நானும் இந்த உலகத்தைவிட்டுச் சீக்கிரம் போய்விடுவேனே, இது ஒருவருக்கும் தெரிந்தது கூடச் சொந்தமில்லையே, இவ்வுலகத்தாராலே சீக்கிரம் மறக்கப்பட்டுப்போவேனே, இவ்வுலக மேன்மைகளையும் இன்பங்களையும் நான் அப்பாலத்தே தள்ளவேண்டும் என்று சொல்ல வைக்கப்படுகிறோமல்லவா? அப்பொழுது இந்த உலகம் நமக்கு வெறும் மாயையாகவும், சுத்த குப்பையாகவும் காணப்படும், பெருமையாயிருக்கப் பிரியப்படமாட்டோம்.



V. பெருமைக்குத் தப்பப் பிரியமானால் மற்றவர்களால் நமக்குவரும் துன்பங்களையும் அநியாயத்தையும் பொறுமையோடு சகிக்கவேண்டும்:

“நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப்பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது பாக்கியவான்களாயிருப்பீர்கள். புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும்விஷயத்தில் அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீனமான மனுஷருடைய (பெருமைக்காரருடைய) அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரமல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள். ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அது பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர்

பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.”

நமக்கு இயல்பாய் வரக்கூடிய எவ்வித சரீரவேதனையையும், எவ்வித நஷ்டத்தையும், வியாதியினாலும் பல ஆபத்துகளினாலும் வரக்கூடிய எவ்வித கஷ்டத்தையும் நாம் எப்படியாகிலும் சகித்துக்கொள்ளுவோம். ஆனால் மனதார எளிதில் சகிக்க நமக்கு மிகவும் கடினமாகத் தோன்றுகிற காரியம் ஒன்றுண்டு. அதாவது நம்மைச்சுற்றிலுமிருக்கிறவர்களிடத்திலிருந்து நமக்கு விரோதமாய் வருகிற அநியாயங்களையும் பொய்யான காரியங்களையும் சகிப்பதுதான். இவைகளைப் பொறுத்துக்கொள்ளுகிறது நமக்கு இலேசாகத் தோன்றுகிறதில்லை. மனதில் எவ்வளவு வருத்தமும் சாவுக்கேதுவான வைராக்கியமும் உண்டாகிறது! நாம் யாதொரு பொல்லாப்பையும் செய்யாதிருக்கும்போது நமக்குவிரோதமாக வம்பாக நமதுபேரில் வருகிற அநியாயங்களைச் சகிக்கிறதற்குப் பதிலாக, நாம் வேறெதையும், நமது ஜீவனையுங்கூடச் சந்தோஷமாய் இழந்துவிடுவோம். சில வேளைகளில் நித்திய ஜீவனையுங்கூட விட்டுவிட மனதுவரும். ஏனென்றால், பிறரால் நமக்கு வேண்டுமென்று வருகிற பொய்யான காரியங்களினால் நாம் எவ்வளவோ தாழ்த்தப்படவும், நிந்திக்கப்படவும், நமது உரிமைகளை வம்பாக இழக்கவும் நேரிடுகிறது. ஆ! இவைகளின்மூலமாக அந்தச் சமயங்களில் இருதயத்திற்கு உண்டாகிற கசப்பு, வேதனை, படபடப்பு, சொல்லிமுடியாத மனவருத்தம் எவ்வளவென்பதை யார் சரியாய் அறியக்கூடும்! நம்மிடத்திலிருந்து எப்பொழுதும் நன்மையையே பெற்று அனுபவித்துவந்தவர்கள் நமக்கு விரோதமாய் எழும்பிப் பொய்ப்பிராதுகளை உண்டுபண்ணி அபாண்டமான காரியங்க



ளைச் சுமத்தி வழக்காடுகிற சமயங்கள் நமக்கு வரும். நமது அண்டைவீட்டுக்காரர் நமதுபேரில் அவதூறான காரியங்களைச் சுமத்தி நமதுபேரைத் தெருவெல்லாம் கேவலமாகத்தூற்றிக்கொண்டு திரிகிற நாட்கள் வரும். நமது கூடப்படித்து, கூடச்சாப்பிட்டு, சகலத்தையும் பொதுவாக வைத்து அனுபவித்துவருகிற நமது உத்தம சிநேகிதர் திடீரென்று சத்துருக்களாய் மாறி வேண்டுமென்று கோபமூட்டிச் சண்டைக்கு இழுக்கிற வேளைகள்வரும். நம்மோடு அடிக்கடி சம்பாஷித்து வருகிற அந்தச் சகோதரனுடைய வார்த்தைகள் நமக்கு ஒருவேளை பிடியாது. இப்படிப்பட்ட சமயங்களில் நம்மைக் கோபத்திற்கும், மூர்க்கத்திற்கும், எரிச்சலுக்கும் இடங்கொடாமல் அமர்ந்திருக்கப் பார்ப்போமாக. இப்படிப்பட்ட வருத்தமான வேளைகளில்தான், கொஞ்சமேனும் இணங்கிப்போகப் பிரியமில்லாதபடிசெய்கிறதும், எவ்வளவேனும் தாழ்ந்து பொறுத்துக்கொள்ளாமல் தீமையோடு எதிர்த்து நிற்கச்செய்கிறதுமான பெருமையின் அகோரத்தையும், அதின் ஆழத்தையும் அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட சமயங்களில் பாடுகளையும் அநியாயங்களையும் பொறுமையோடே சகிக்கும்படி நமக்கு உதவியாயிருக்கக்கூடிய சில குறிப்புகளைக் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியம்.

நமது அன்றாட ஜீவியத்தில் இவ்வித அநியாயமான காரியங்கள் நமக்கு விரோதமாய் வரும்போது, அந்த அநியாயத்தைச் செய்த ஆளின் பேரில் நமது எண்ணம் போகவிடாமல், நம்மை அடக்கிக்கொண்டு, சற்றுநேரம் அமைதியாய் நின்று (1) நான் இவ்விஷயத்தில் தேவனை மகிமைப்படுத்துகிறேனா என்று பார்க்கவும், எனக்குத் தாழ்மையைப் படிப்பிக்கிறதற்குமே தேவன் எனக்கு இந்த அநியாயத்தை வரவிட்டிருக்கிறார் என்று நினைக்கவேண்டும். இது தேவனுடைய சித்தம் என்றும், அவருக்கு அடங்கியிருப்பதினால்தான் நான்

பூரணமடையக் கூடுமென்றும் நாம் நினைக்கும்போதும், இவ்விதமாய் நமது கண்கள் அவரை நோக்கும்போதும், அந்தச் சோதனை அவ்வளவு கடினமாய்த் தோன்றாது. அந்தச் சமயத்தில் நாம் நடந்துகொள்ளவேண்டியவிதம் இன்னதென்று தேவனே நமக்குக் காட்டுவார். நான் தாங்கக்கூடாதகாரியத்தை எனக்கு விரோதமாக இந்த அற்பன் செய்திருக்கிறான். நான் என் கனவிலும் நினைத்திராத காரியங்களாலே என்னைக் குற்றப்படுத்தி இந்தப் பொல்லாப்பைச் செய்திருக்கிறான். நான் இந்தக்காரியத்தில் அவனுக்குச் சரிக்குச் சரிக்கட்டாமல் எப்படிப் பொறுமையாய்ச் சகிப்பேன். வேறே யாராவது இந்தக் காரியத்தை எனக்கு விரோதமாய்ச் செய்திருந்தால் ஒருவேளை பொறுத்துக்கொள்ளுவேன். ஆனால் இந்த மனுஷன் செய்த அநியாயத்தை நான் எப்படிச் சகிக்கட்டும் என்று மனவேதனையோடும் படபடப்போடும் சொல்லுகிறாயோ? சகோதரனே, இவ்விதமான எண்ணங்கள் புத்தியீனமான எண்ணங்கள் என்று முதலாவது நினைத்துக்கொள். அந்த அநியாயம் நல்லவனிடத்திலிருந்து வந்தாலும்சரி, பொல்லாதவனிடத்திலிருந்து வந்தாலும்சரி; உனக்குத் தாழ்வானவனிடத்திலிருந்து வந்தாலும்சரி, உனக்கு மேற்பட்டவர்களிடத்திலிருந்து வந்தாலும்சரி; அது எவ்வளவு கொடூரமானதாயிருந்தாலும்சரி, அது எவ்வளவு அடிக்கடி வருகிறதாயிருந்தாலும்சரி, அது தேவனுடைய கரத்திலிருந்தே வந்தது என்றும், தாழ்மையை எனக்குப் படிப்பிக்கிற ஒரு உபாத்தி என்றும் நினைப்பாயானால் மாத்திரம் நீ புத்திமானும் பொறுமைசாலியுமாவாய்.

(2) நமது கனத்தையும் உரிமைகளையும் இழந்துவிடாதபடி பார்த்துக்கொள்ள நாம் எவ்வளவுக்குக் கவலைப்படுகிறோமோ அவ்வளவுக்கு எத்தனையோமடங்கு அதிகமாய்த் தேவன் அவைகளுக்காகக் கவலைப்படுகிறார் என்றும் நம்பவேண்டும்.



நாம் மற்றவர்களால் பொய்யாய்க் குற்றஞ் சாட்டப்படும்பொழுது, நாம் குற்றவாளிகள் அல்ல என்று பலநியாயங்களால் ருஜுப்படுத்தவும், நமது மரியாதையை இழந்துவிடாதபடி வழக்காடவும் மிகவும் பிரயாசப்படுகிறோம். இப்படிப் பிரயாசப்படுகிறதில் நமது கனத்தை இழந்துபோகிறோமேயொழிய அதை நாம் நிலைநிறுத்துகிறதில்லை. எல்லாவற்றையும் அந்தரங்கத்தில் பார்க்கிற நமது பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுவோமானால் அவர் அவைகளுக்காகக் கவலைப்படுவார். கிறிஸ்துவானவர், "நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்ததுபோல" (117—119 ம் பக்கம் பார்க்க) நாமும் நமது காரியங்களை அவரிடத்தில் ஒப்புவிக்கவேண்டும். தீர்ப்புச்செய்கிறதில் நாம் தவறிப்போவோம். தேவனோ தவறமாட்டார். அநியாயமான காரியங்கள் நமக்கு விரோதமாய் வரும்போதெல்லாம்: தேவன் என் காரியத்தைக் கவனித்துக்கொள்ளுவார், அவர் எனக்காகக் கவலைப்படுவார் என்று முழு நிச்சயமாய் நம்பி நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்கு நம்மை ஒப்புவிப்போமாக.

(3) நாம் எவ்வளவுக்கு அநியாயங்களைப் பொறுமையோடு சகிக்கிறோமோ அவ்வளவுக்குப் பரலோகத்தில் நமது பலன் அதிகரித்துக்கொண்டேவருகிறதென்று நம்பவேண்டும். அவன் எனக்கு விரோதமாகச் செய்த அநியாயத்தைச் சகிக்கமாட்டேன். நான் எப்படியாகிலும் தீமைக்குத்தீமை செய்யத்தான் வேண்டும். எனக்கு மறுமையில் பங்கு கிடையாவிட்டாலும் பரவாயில்லை. நான் அவனுக்குமட்டும் தாழ்ந்துபோகமாட்டேன் என்று சொல்லுவோமானால் பரலோகத்தில் நமக்கு ஒரு துளியளவு மகிமைதானும் கிடையாது. பரலோகத்தில் தங்கள் பலனை மிகுதியாய்ச் சேர்த்துவைக்க விருப்பமுள்ளவர்கள் இவ்வுலகத்தில் தங்களுக்கு யாதொரு கனத்தையாவது, மகிமையையாவது எதிர்பாராமல், கிறிஸ்துவினிமித்தம் தங்களுக்குவரும் நிந்தைகளி

லும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் பிரியப்படவேண்டும். "சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" என்று இரட்சகர் சொல்லுகிறார். மிகுதி என்ற வார்த்தையில் எவ்வளவு அடங்கியிருக்கிறதோ நாமறியோம்.

## VI. பெருமையாகிய பிசாசின் தந்திரங்களை அறிந்து அவைகளுக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

பெருமை ஒருவனுடைய இருதயத்தில் குடிகொண்டிருக்கிறதை அல்லது உன் இருதயத்தில் அது குடிகொண்டிருக்கிறதை நீ காணும்போது அதில் அநேக லேகியோன்களான பிசாசுகள் குடியிருக்கிறதாக நினைத்துக்கொள். இருதயக்கண்ணாடி யென்ற புஸ்தகத்தில் பிசாசு ஒருவனுடைய இருதயத்தில் தன் சிம்மாசனத்தைப்போட்டிருக்கும் பாவனையாகக் காட்டப்பட்டிருக்கிற படத்தை உன் ஞாபகத்திற்குக் கொண்டுவா. அது எவ்வளவு பயங்கரமான படம்! அதுதான் பெருமை குடியிருக்கிற இருதயத்தின் படம். ஆ, முழுவதும் பெருமையினாலேயே நிறைந்த ஒரு இருதயத்தைத் தேவன் உள்ளபடியே நமக்குக் காட்டுவாரானால் பெருமையின் அகோரத்தை நாம் முழுவதும் அறிந்து திடுக்கிடுவோம். அகோர பயங்கர இராட்சதனாகிய பிசாசின் கிரியைகளை அழிக்கவந்த இரட்சகருக்குத்தான் பெருமையின் மகா பயங்கரமான கிரியைகள் நன்றாய்த்தெரியும். நமது பெருமையைத் தேவன் நம்மில் காண்கிறபடி நமக்கும் காட்டும்படி அவரை நோக்கி ஓயாமல் மன்றாடுவோமாக. பெருமையை முழுவதும் அறிந்துவிட்டோமென்றாவது, அது நம்மைவிட்டு முற்றிலும் நீங்கிவிட்டதென்றாவது நினைத்து மனதைத் தேற்றிக்கொள்ள இடமில்லை. பெருமையின் தந்திரமான கிரியைகளை சரியாய் உள்ளபடியே விஸ்தரிக்கக்கூடிய வல்லவன் ஒருவனுமில்லை. பெருமையைப்பற்றி எழுதுகிற நான்



என்னிலுள்ள பெருமையில் எத்தனையில் ஒருபங்கை அறிந்திருக்கிறேனென்று தேவன்தான் அறியக்கூடும். அது எவ்வளவு கொஞ்சம்மாத்திரந்தான் என்று நான் நினைக்கும்போது திகில் என்னைப்பிடிக்கிறது. பெருமையைப்பற்றியெழுதுகிற நீதானே உன் பெருமையில் கெட்டுப்போய் ஆகாதவனென்று தள்ளப்படாதபடி எச்சரிக்கையாயிரு என்ற சத்தம் என்காதில் நித்தம் தொனித்துக்கொண்டிருக்கிறதை அறிந்து நித்தம் தேவனிடத்தில் கெஞ்சிவருகிறேன்.

பெருமையின் தந்திரங்களை நீ முழுவதும் அறியவிரும்புகிறாயா? அப்படியானால் தேவனைக் கிட்டிச்சேர். நீ எவ்வளவுக்குப் பெருமையைவிட்டுத் தேவனிடத்திற்கு ஓடித் தாழ்மையாயிருக்க விரும்புகிறாயோ அவ்வளவுக்கு அதிகமாய்ப் பெருமையாகிய சாத்தான் உன்னைத் தொடர்ந்துவந்து உன்னை ஆட்கொள்ளுவானென்று அறி. நீ தேவனிடத்தில் நெருங்கிச் சேரச்சேரத்தான் அவன் முன்னிலும் அதிகமாய் உன்னோடு போர்செய்ய வருவானென்றும், நீ எவ்வளவாய்த் தேவ ஆவியானவரால் நிரப்பப்பட்டுக்கொண்டுவருகிறாயோ அவ்வளவாய் அவன் உன்னைச் சோதித்துக்கெடுக்கத் தன் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் உன்மேல் எய்வானென்றும் அறிந்து எச்சரிக்கையாயிரு. மகா பிரதான அப்போஸ்தலருக்கும், மகா பிரதான பக்திமான்களுக்கும் அவன் சற்றும் பயந்தவனல்ல. இவன் படுத்துகிறபாட்டினால் பரிசுத்தவான்கள் நாள்தோறும் விடுகிற கண்ணீரை யார் அளவிடக்கூடும்? மனுஷரால் வரும் வீண் புகழ்ச்சியை நாடும்படி அவன் எவ்வளவாய் அவர்களை ஏவிப் பரலோகத்திலுள்ள தங்கள் பலனை இழந்துபோகும்படி செய்கிறான்! "ஒருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்துநின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவே வந்து நின்றான்" என்பதை வாசித்து பயத்தோடும் நடுக்கத்தோடும் தேவனுக்கு அடங்கியிரு. இரட்சகர் அவன்

தலையை நசுக்கிப்போட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவன் தன் வாலைமாத்திரந்தான் ஆட்டிக்கொண்டு ஜனங்களை இப்படி வஞ்சித்துத்திரிகிறான். அவன் பயமுறுத்த முடியுமேயொழிய வேறொன்றும் அவனால் செய்யமுடியாது. ஆகையால் அவனைக்குறித்து நம்முடைய இருதயம் கலங்கவேண்டியதில்லை. யூதாக்கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் நம்மோடிருக்கிறார்.

சாத்தானுடைய தந்திரங்களையும் அவன் தேவனுடைய பிள்ளைகளை வஞ்சித்துக்கெடுக்கும் விதத்தையும் நாம் எவ்வளவுக்கு அறிகிறோமோ அவ்வளவுக்கு அவைகளினின்று தப்பித்துக்கொள்ளவும் வல்லவர்களாவோம். "புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கது" மாயிருக்கிறவைகளைக்கொண்டே அவன் நம்மை ஏய்க்க வகைதேடுவான். அவன் நமது கண்முன் கொண்டுவருகிறவைகளெல்லாம் தள்ளப்படத்தக்கவைகளாயிருக்கமாட்டா. தேவனுக்குரியவைகளைக்கொண்டும், மிகவும் நன்மையானவைகளைக்கொண்டுமே நம்மை வசப்படுத்தப்பார்ப்பான். எந்தெந்த மீனுக்கு எந்தெந்த வகையான இரையைப்போட்டு மீனைப் பிடிக்கலாமென்பது தூண்டில்காரனுக்குத் தெரியும். அப்படியே, ஆத்துமாக்களைத் தன் வசப்படுத்தும்படியான வழிவகைகளும் சாத்தானுக்கு நன்றாய்த்தெரியும். நீ பக்தியுள்ளவனா, உன் பக்திக்கு உதவியானவைகளைக்கொண்டும்; நீ வேதவாக்கியங்களை நன்றாயறிந்தவனா, உன் வேத அறிவைக்கொண்டும்; நீ பேசுகிறதிலும், தர்க்கம்பண்ணுகிறதிலும், நியாயந்தீர்ப்பதிலும் அதிக சாமர்த்தியமுள்ளவனா, உன் சாதுரியப்பேச்சைக்கொண்டும்; நீ முற்கோபியா, உன் கோபத்தைக்கொண்டும்; நீ பொறுமையுள்ளவனா, உன் பொறுமையைக்கொண்டும்; நீ மகா பிடிவாதமுள்ளவனா, உன் பிடிவாதத்தைக்கொண்டும் உன்னை



வஞ்சித்துக் கெடுக்கப்பார்ப்பான். இப்படிச்செய்கிறது பாவமா, இதில் நன்மைதானே இருக்கிறது, இதைச் செய்தாலென்ன என்ற கேள்விகள் உன்னில் எழும்பும்போது அவைகள் சாத்தானுடையவைகள் என்று எண்ணிக்கொள்.

"இவன் மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவன்; கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவன்; பொய்யனும் பொய்க்குப் பிதாவுமானவன்." தேவன் இல்லையென்று சொல்லுகிற மதிகெட்டவன் இவன்தான். ஜனங்கள் எவ்வளவு லேசாகவும், இயல்பாகவும் கடவுளைத் தூஷிக்கிறதை நாம் நித்தம் பார்க்கிறோம். எவ்வளவு கேவலமானபேர்களைக்கூடச் சொல்லித் திட்டுகிறார்கள்! தேவனைத் தூஷிக்கும்படி செய்கிறதைப்பார்க்கிலும் சாத்தானுக்குப்பிரியமானது வேறொன்றுமில்லை. இவன் நாஸ்திகர்களின் கூட்டத்திற்குத் தலைவன். தேவன் இல்லையென்று சொல்லும்படியாக எத்தனையோ சாஸ்திரிகளையும், ஞானிகளையும் கல்விமான்களையும் வெகு தந்திரமாய் ஏய்த்துவந்திருக்கிறான் என்று பார்க்கிறோம். அவர்களுடைய கல்வியறிவைக்கொண்டும், அவர்களுடைய சாஸ்திர அறிவைக்கொண்டுமே அவர்களை வஞ்சித்துத் தங்கள் அறிவில் கர்வங்கொள்ளவும், வேதத்தைப் புரட்டவும், தேவன் இல்லையென்று சொல்லவும் செய்திருக்கிறான். தற்காலத்திலுள்ள சில மாணாக்கரிடத்தில் தேவன் இல்லையென்று சொல்லுகிறவர்களெல்லாரும் கையை உயர்த்துங்கள் என்றுகேட்டால் சிலர் உடனே வேண்டுமென்று கௌரதைக்காக தங்கள் கைகளை உயர்த்துவார்கள். மற்ற மாணாக்கர் மத்தியில் தாங்கள் நாஸ்திகர் என்று எண்ணப்படுவது அவர்களுக்குப் பெருமையாம். தற்காலத்தில் அறிவு மிகுந்துவிட்டது; சாஸ்திர அறிவும், லௌகீக ஞானமும் அதிகரித்துவிட்டது, நாஸ்திகர்கள் பெருகிவிட்டார்கள். தேவனையும் அவர் எழுதிக்கொடுத்த மகத்துவமான வேதத்தையும்

அலட்சியம்பண்ணுகிறவர்களின் கூட்டம் மிகுதி. வேத வாக்கியங்களை வெகு தாராளமாயும், இலேசமாயும் கண்ட இடமெல்லாம் கவலையில்லாமல் உபயோகித்து வருகிறவர்கள் எத்தனை ஏராளம். மறைவான கருத்துகள் அடங்கிய வேதவாக்கியங்களையும், சில உபதேசங்களையுங்குறித்துச் சிலர் நாள்முழுதும் தர்க்கம்பண்ணிக் கொண்டிருப்பார்கள். தேவனுக்கே உரியவைகளாகிய மறைவானவைகளைக்குறித்து அநாவசியமாகத் தர்க்கம் பண்ணுகிறதைக்குறித்து எச்சரிக்கையாயிருப்போமாக. "லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும்பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றினதல்ல" (கொலோ. 2: 8) என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிற எச்சரிப்பான வார்த்தைகளைத் தற்காலத்து ஞானிகளும் கல்விமான்களும் அறிவார்களானால் நலமாயிருக்கும்.

தேவனுடைய சித்தமின்னதென்று தெளிவாய்த் தெரியாமல் இயங்குகிற தேவனுடைய பிள்ளைகளைத் தந்திரமாய்த் தப்பிதமான வழிகளிலே இவன் நடத்துகிற விதமும் மகா பயங்கரமாயிருக்கிறது. இவ்விஷயத்திலும் அவன் தேவனுடைய சித்தத்திற்கு இசைந்ததுபோல் காணப்படுகிறவைகளைக்கொண்டே வஞ்சிப்பான். அவருடைய நோக்கத்திற்கு இசைவான நல்ல தீர்மானங்களை அவர்கள் மனதில் தோன்றச்செய்துவிடுவான். உடனே தாங்களே அநேக காரியங்களைத் தங்கள் பிரியப்படி முன் தீர்மானிப்பார்கள். பிற்பாடு இத்தீர்மானங்களைத் தேவனுக்கு முன்பாகக்கொண்டுபோய், அவைகளை ஆசீர்வதிக்கும்படி அதிக ஊக்கத்தோடு கெஞ்சி ஜெபிப்பார்கள். ஜெபிக்க ஜெபிக்க தங்கள் எண்ணங்களும் தீர்மானங்களும் அதிக நன்மையானவும், சித்தி பெறக்கூடியவைகளாகவும் தோன்றும். தேவனுடைய சத்தம்போல்



தோன்றுகிற சத்தங்களையும் எண்ணங்களையும் இங்குமங்கும் அவர்கள் மனதில் கடந்துபோகும்படி செய்வான். இப்படிப்பட்ட சமயங்களில் அவர்கள்: தேவன் எங்களோடு பேசினார், இதுதான் தேவனுடைய சித்தம் என்று தங்கள் இஷ்டப்படி சொல்லும்படி செய்துவிடுவான். இக்காரியங்களில் பிசாசின் ஒரு தந்திரத்தை அறிந்துகொள்ளவேண்டும். தேவன்பேரில் முழுநம்பிக்கையையும் வையாமலும், அவர்பேரில் அதிகமாய்ச்சாராமலும், தங்கள் பேரிலும் தங்கள் சுயஇஷ்டத்தின் பேரிலுமே சார்ந்து, தங்களோடு தேவன் பேசினாரென்றும், தேவனுடைய சித்தத்தை அறியும் சக்தியுள்ளவர்களாயிருக்கிறோமென்றும் கர்வங்கொள்ளச் செய்துவிடுகிறான். இவைகளை நினைக்கும்போது என்ன பயங்கரமாயிருக்கிறது! இவ்விஷயங்களில் தேவனுடைய பிள்ளைகளுக்கு அவருடைய பெலத்தைக்கொண்டு ஆலோசனை சொல்லுகிற பெரியவர்களையும் சற்று இந்தச் சோதனைக்குள்ளாக்கி விடக்கூடும் என்பதையும் அறியவேண்டும். அவர்கள் சொல்லுகிற ஆலோசனைகள் புத்திமதிகளெல்லாம் அநேகமாய்த் தேவனுடைய சித்தத்திற்கு இசைந்தவைகளாய்த்தானிருக்கும். என்றாலும், நான் அந்தச்சகோதரனை மோசமான வழிகளினின்று திருப்பிவிட்டேன், தேவனுடைய சித்தத்தைத் தெளிவாய் அவனுக்குக் காட்டிவிட்டேன், நான் இல்லாவிட்டால் அந்தச்சகோதரன் கெட்டுப்போயிருப்பான் என்று சற்று பெருமை கொள்ளும்படியான எண்ணத்தையும் அவர்களுக்குக் கொண்டுவந்து தங்கள் பலனை இழந்துபோகும்படி செய்துவிடுவான். தேவ ஆவியானவரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களிடத்திலும், தேவனுக்கு மிகவும் நெருங்கி ஜீவிக்கிற மகா பரிசுத்தவான்களிடத்திலும் அவன் நடப்பிக்கிற மகா தந்திரமான கிரியைகளைப் பூரணமாய் அறியும்படி தேவன்தான் கிருபைசெய்யவேண்டும். அவனுடைய இவ்வித சோதனைகளினின்றும் தக்

திரங்களினின்றும் நாம் எப்படித் தப்பித்துக்கொள்ளுகிறது? இது மனுஷராலே கூடாததுதான். தேவனுடைய கிருபையினாலேமாத்திரம் நாம் தப்பித்துக் கொள்ளக்கூடும். நாம் பெரிய பெரிய வழிவகைகளைத் தேடாவிட்டாலும் பின்வருகிறதைப்போலொத்த ஒரு சிறு ஜெபத்தை அடிக்கடி செய்வோம். தேவனை நோக்கி: உம்முடைய பிள்ளைகளை ஒருக்காலும் கைவிடாமல், எக்காலும் நன்றும் செவ்வையுமான வழிகளிலேயே நடத்திக்கொண்டுவருகிற அன்புள்ள பிதாவே, நான் உம்முடைய பிள்ளையாயிருக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். அப்பா என்று சொல்லி உம்மிடத்திற்கு அடிக்கடி வரும்படியான உரிமையையும், தைரியத்தையும் நீர் எனக்குக் கொடுத்திருக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம். பிதாவே, எப்பொழுதும் உமது சித்தத்தையே செய்ய நிதோ ஆயத்தமாயிருக்கிறேன். ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? உமது காரியங்களைப்பற்றியும், உமது சித்தத்தைப்பற்றியும் தெளிவாய் ஒன்றுமறியேன். நான் என்னாலே ஒன்றும் செய்யமுடியாது. என்னாலே ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நான் என்னாலே தகுதியானவனல்ல. என்னுடைய தகுதி உம்மாலேயேதான் உண்டாகவேண்டியதிருக்கிறது. என் பெலத்திலும் என் சுய சித்தத்திலும் சாய்ந்து; என் கை என்னை இரட்சித்தது என்று நான் உமக்கு விரோதமாக வீம்புபேசுகிறதற்கு இடமில்லாதிருக்கும்படி என்னைக் கிருபையாய்க் காத்துக்கொள்ளும். நான் ஒரு புழு, ஒரு தூசிமாத்திரம். என் நீதியெல்லாம் கந்தை. எனக்குச் சுயபுத்தியே கிடையாது. நீரே என்னில் எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருந்து என்னைச் செவ்வையான வழியிலே நடத்தும். தேவனே, பாவியாகிய என்பேரில் கிருபையாயிரும், கிருபையாயிரும். ஆமென். தேவனுடைய சித்தம் இன்னதென்று தெளிவாய்த் தெரியவில்லையே என்று கலங்கி



அங்கும் இங்கும் ஆத்திரத்தோடு ஓடி அலைந்துதிரிவதைப்பார்க்கிலும், பயத்தோடும் நடுக்கத்தோடும் வேதத்தை வாசித்து தியானித்து தேவனுடைய சமுகத்தில் அமைதலோடு காத்திருந்து நமது காரியங்களையெல்லாம் அவரிடத்தில் ஒப்புக்கொடுப்போமானால், படிப்படியாக அவருடைய தயவுள்ள சித்தத்தின்படி தமது காரியங்களை நமக்கு வெளிப்படுத்தி, அவருக்குப் பிரியமான வழிகளிலே நடத்தித் தமது நோக்கம் நம்மில் பூரணமாய் நிறைவேறும்படி செய்வார்.

நான் இதுவரையில் சொல்லி வந்த ஆலோசனைகள் எல்லாவற்றைப்பார்க்கிலும், நான் கடைசியாய் சுருக்கமாய்க் காட்டப்போகிற இயேசு இரட்சகரின் சிறந்தமாதிரியும், அவர் பெருமையை ஜெயித்த விதமுமே நமக்கு அதிக உதவியாயிருக்குமென்று நம்புகிறேன்.

## VII. இயேசுகிறிஸ்துவின் சிறந்தமாதிரி.

நமது இரட்சகர் பெருமையாயிருக்கும்படியான சோதனை வந்ததா? ஆம். கேட்டின் மகன் யாரைத்தான் விட்டான்? இயேசுவானவர் ஆவியைப்பெற்றுத் தமது ஊழியத்தை ஆரம்பிக்கப்போகும் சமயத்திலேயே அவரைச் சோதித்துக்கெடுக்கப்பார்த்தான். இவன் தன்னைத் தேவனுக்குகிறவன். பொய்யனும் பொய்க்குப் பிதாவுமானவன். ஏவாளிடத்தில் வந்து, "இதைப்புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்களென்றும் தேவன் அறிவார்" என்று துணிகரமாய் அவளைச் சோதித்துக் கேட்டுக்குள்ளாக்கினதுபோல, கிறிஸ்துவானவரிடத்திற்கும் வந்து அதே மாதிரிதான் அவரைச் சோதிக்கிறான் (மத். 4: 1—11). "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்கிறான். சாத்தானுக்கிருந்த அகங்காரத்தையும் துணிகரத்தையும் பார்த்தீர்களா! வானலோக இராஜா "சாஷ்டாங்க

மாய் விழுந்து" அவனைப் பணியவேண்டுமாம். தன்னைத்தான் தேவனாக்கிச் சகல மகிமையையும் தனக்கே தேடுகிற பெருமையான அவனுடைய குணத்தைப் பாருங்கள். இவனுடைய மேட்டிமைச் சுபாவத்தை நன்றாய் முதலிலேயே அறியவே இந்தச் சோதனையை முதலில் எழுதுகிறேன். இரட்சகருக்கு வந்த முதல் சோதனை என்ன? சுயநயத்தைத் தேடவும், தேவன் பேரில் அவநம்பிக்கை கொள்ளவும், தம்மேல் சார்ந்து தம் இஷ்டப்படி நடக்கவும் அவரை ஏவுகிறான். இரண்டாவது சோதனையில், உப்பரிகையின் மேலிருந்து குதித்தால் எல்லாரும் இவரைக் கனம்பண்ணுவார்கள் என்ற எண்ணத்தைக் கொண்டுவந்துவிட்டு அவரைக் குதிக்கச் சொல்லுகிறான். தனக்குத் தெரிந்த வேதவாக்கியங்களைத் தன் இஷ்டத்திற்கு இசையச் சொல்லி அவரை ஏய்க்கப்பார்க்கும் விதத்தைச் சிந்தித்துப் பாருங்கள். ஒளியின் வேஷத்தைத் தரித்து, நன்மையாகத் தோன்றுகிற அநேக காரியங்களைக்கொண்டுகூட அவன் நம்மைச் சோதித்துக் கெடுக்கப்பார்ப்பான் என்பதை நாம் தியானித்திருக்கிறோம். இந்தச் சோதனைகளை இரட்சகர் எப்படி ஜெயித்தார்? (1) தமது திருவசனமாகிய ஆவியின் பட்டயத்தைக் கொண்டுதான்:— "எழுதியிருக்கிறதே" "எழுதியிருக்கிறதே" "எழுதியிருக்கிறதே" என்று சொல்லி அவனை ஜெயித்தார். வேதபுஸ்தகம் நமது கையில் இருக்கிறது. வேதத்தை முழுவதும் கற்று, "எழுதியிருக்கிறதே" என்று அவனை நித்தம் ஜெயித்து வருகிறோமா? பிசாசுக்கு ஒருவேளை வேதம் நம்மைப் பார்க்கிலும் நன்றாய்த் தெரியும் என்பதையும் நினைத்துக்கொள்வோமாக. அவனுங்கூட, "எழுதியிருக்கிறது" என்று சொன்னான். வேதத்தை அருமையாக மதித்து அதை நித்தம் கருத்தோடும், ஜெபத்தோடும் ஆராய்ச்சிசெய்து வருகிறவர்கள், பெருமையை வெகு இலேசாய் ஜெயிக்கக் கூடியவர்களாவார்கள்.



(2) ஜெபம். வேறொரு சமயத்தில் அவருக்கு ஒரு பலத்தசோதனை வந்தது. அது அவர் ஐயாயிரம் பேருக்குப் போஜனம் அளித்த சமயத்தில்தான். "இயேசு செய்த அந்த அற்புதத்தை அந்த மனுஷர்கண்டு, மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" (யோ. 6: 14) என்றார்கள். "ஆதலால் அவர்கள் வந்து தம்மை இராஜாவாக்கும்படி பிடித்துக்கொண்டுபோக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்" (15 வா) என்று வாசிக்கிறோம். அவருக்கு இந்தச் சமயத்தில் நேரிட்டது எவ்வளவு பலத்த சோதனை என்று பாருங்கள். இதோ, ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாரும் அவருடைய மகத்துவத்தைக் கண்டு அவரில் அதிகப் பிரியமுடையவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் இவர்கள் நடுவில் இராஜாவாகி அவர்களால் போற்றப்படலாம். என்றாலும் அவர் இந்தச் சோதனைக்கு இடங்கொடாமல் தனியே மலையின்மேல் ஏறி இராமுழுவதும் ஜெபத்தில் தரித்திருந்தார். பெருமையை நாடத்தக்க அநேக சந்தர்ப்பங்கள் நமக்கும் வரும். அந்தந்த சமயங்களில், நமது தேவனுடைய பாதத்தண்டைபோய், கூடுமானால் இராமுழுவதும் அவரோடே தனித்திருந்து அவருக்கே மகிமையைச் செலுத்துவோமானால், இந்தச் சோதனைக்குத் தப்பித்துக்கொள்வோம். இயேசுநாதர் எவ்வளவாக ஜெபித்தார்! அவரே அவ்வளவு ஜெபித்தால், நாம் எவ்வளவு அதிகம் ஜெபிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்!

(3) தேவன்பேரிலேயே எப்பொழுதும் சார்ந்து ஜீவித்தார். தமது சுயமாய் ஒன்றும்பேசாமலும், தமது சித்தத்தின்படி யாதொன்றையும் செய்யாமலும், மனுஷராலே வருகிற மகிமையைத் தேடாமலும், தம்மை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதையே தம்முடைய போஜனமாக்

கித் தமக்கு மனுஷரால் கிடைக்கக்கூடிய சகல மகிமையையும் தமது பிதாவுக்கே செலுத்தி வந்தார். இதைக் காட்டத்தக்க வாக்கியங்கள் யோவான் சுவிசேஷத்தில் அதிக ஏராளமாயிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்கே எழுதுவோம். "நான் மனுஷரால் மகிமையைப் பெற்றுக்கொள்ளுகிறதில்லை (5: 41). நான் எனக்கு மகிமையை தேடுகிறதில்லை, அதைத்தேடி நியாயம் விசாரிக்கிறவர் ஒருவர் இருக்கிறார் (8. 50). பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார் (5: 19). நான் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை. எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என் பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு மெய்யாயிருக்கிறது (5: 30). என் சித்தத்தின்படியல்ல என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன் [illegible]). என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது (7: 28). நாம் செய்யவேண்டியதென்ன? பெருமைக்குக் காரணமாயிருக்கிற சுயசித்தம், சுயநன்மை, சுயநீதி, சுயமகிமை, சுயவல்லமை முதலிய எல்லாவற்றையும் ஆண்டவருக்கு முழுவதும் ஒப்புக்கொடுத்து அவர்பேரில் மாத்திரம் சார்ந்து, அவருடைய சித்தத்தையே எப்பொழுதும் செய்வோமாக. தேவனே, எனக்குள்ள புத்தி, சித்தம் யாவையும் நீரே எடுத்து [illegible] யருளும். [illegible] ஆனல்ல, என் சித்தமல்ல, நீரே என்னை ஆண்டு [illegible] மாத்திரம் உமக்குப் பிரியமுள்ளவனாக்கும் என்று முழு இருதயத்தோடு சொல்லக்கூடியவர்களாயிருந்தால் பெருமை அடியோடே ஒழிந்துபோகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

(4) கிறிஸ்து சகல நிந்தைகளையும், விபரீதங்களையும், சகல அநியாயத்தையும் எதிர்பேசாமல் பொறு[illegible]



"அவர் தம்மைத்தாழ்த்தினபோது, அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுத்துப்போடப்பட்டது" என்ற வாக்கியம் அவருடைய ஜீவியத்தில் நிறைவேறிற்று. அவருடைய ஜீவியத்தின் ஒவ்வொரு சம்பவத்தையும் எடுத்துப் பார்ப்போமானல், எதிர்நியாயம்பேசாமல் சகல அநியாயத்தையும் பொறுமையோடு சகித்துத் தம்மைத் தாழ்த்தினர் என்று அறிவோம். உலகத்தார் அவருக்குச்செய்ததெல்லாம் அநியாயம். அவர் அவர்களுக்கு எப்பொழுதும் நன்மையையே செய்துகொண்டுவந்தும், அவர்கள் அவருக்குத் தீமையையே செய்துவந்தார்கள். எத்தனையோ சமயங்களில் அவரை மலையிலிருந்து கீழே உருட்டித்தள்ளப்பார்த்தார்கள், அவர்மேல் கல்லெறிய எத்தனித்தார்கள் என்று வாசிக்கிறோம். அந்தந்த சமயங்களில் அவர்களோடு எதிர்த்து நிற்காமல் அவர்களைவிட்டு மறைந்துபோனர் என்று பார்க்கிறோம்.

பாவிகளின் நேசராகிய நமது இரட்சகருக்குக் கிடைத்த பேர்களை எழுதவும் என் கை கூசுகிறது. நீ சமாரியன், பிசாசுபிடித்தவன், போஜனப்பிரியன், மதுபானப்பிரியன், எத்தன் என்று சொன்னர்கள். யாராவது கேவலமான பேர்களைச் சொல்லி நம்மைத் திட்டுவார்களானல் நமக்கு எவ்வளவு கோபம் வரும்! தமக்கு அவமானமாக இடப்பட்ட இப்பேர்களையெல்லாம் எவ்வளவு பொறுமையோடு ஏற்றுக்கொண்டார் பாருங்கள்.

அவர் அநியாயமாகவும், பொய்யாகவும் குற்றம் சாட்டப்பட்டார். "என்னிடத்தில் பாவமுண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்" என்று தைரியமாய்க் கேட்ட பாவமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய நமது இரட்சகர் நியாயஸ்தலங்களுக்கும் அதிகாரிகளுக்கு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தப்பட்டார். மகத்துவமுள்ள இராஜாதி இராஜா அவர்கள்முன் தமது கைகள் கட்டப்பட்டுநிற்க நேரிட்டது.

"இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" யென்று அவரை நியாயம் விசாரித்தவர்கள் அடிக்கடி சொன்னார்கள். என்றபோதிலும் வம்பாக அவரைச் சிலுவையிலறைய ஒப்புக்கொடுத்தார்கள். எல்லாவற்றையும் பொறுமையாய்ச் சகித்தார். இவர் தமதுபட்சத்தில் யாதொரு நியாயத்தையும் பேசித் தப்பிக்கொள்ளும்படி பிரயாசப்படவில்லை. இரட்சகர் நியாயம்பேச ஆரம்பித்தால் எவன் தன் தலையை இவருக்கு விரோதமாய் அசைக்கக்கூடும்? எவன் எதிர்த்து நியாயம் பேசுவான்? அவர் இவர்களோடே நியாயம்பேசுவது அவருக்கு மிகவும் அற்பக்காரியம். அவர் இவர்களிடத்தில்வந்துபேசவும் இவர்கள் பாத்திரவான்களல்ல. "அவரோ பேசாமலிருந்தார். அவர் ஒருவார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை" என்று வாசிக்கிறோம்.

பெருமையைக் களைந்து தாழ்மையைத் தரித்துக்கொள்ள நமக்குப் பிரியமா? ஒருவார்த்தையும் பேசாதே என்றதை நமக்கு நித்திய பிரமாணமாக வைத்துக்கொள்ளுவோமாக. மற்றவர்கள் நம்மை அநியாயமாய்த் தூஷிக்கும்போதும், காரணமில்லாமல் வேண்டுமென்று நமக்குக் கோபமூட்டி அடிக்கும்போதும், வம்பு வழக்காடி அநியாயமாக நமது பொருட்களை மற்றவர்கள் எடுத்துக்கொள்ளும்போதும், நாம் யாதொரு குற்றத்தையும் செய்யாதிருக்க, அநேக குற்றங்களை நமதுபேரில் பொய்யாய்ச் சாட்டும்போதும், ஒருவார்த்தையும் பேசாமல் அவர்களுக்குத் தாழ்ந்துபோகப் படித்துக்கொள்ளுவோமாக. இந்தச் சத்தியத்தைப்பற்றி மலைப்பிரசங்கத்தில் இரட்சகர் அதிக விஸ்தாரமாய்ப் பேசியிருக்கிறார். அநியாயத்தைச் சகிக்கும் விதத்தைப்பற்றி இதற்குமுன் பார்த்திருக்கிறோம். நாம் நமது மரியாதையையும் மதிப்பையும் இழந்துபோகப் பிரியமில்லாமலிருக்கிறபடியால், நாமும் நியாயம்பேச ஆரம்பித்துப் பெருமைக்குள்ளாகிக் கெட்டுப்போகிறவர்களாயிருக்கிறோம். இப்



படிப் பேசுவதினாலே நமக்குக் குறைவு வருமேயொழிய யாதொரு மேன்மை கிடைக்கப்போகிறதில்லை. ஆகையால் நமது சாந்தமுள்ள இரட்சகரைப்போல் நம்மைத் தாழ்த்தி சகல அநியாயங்களையும் பொறுமையோடு சகித்துக்கொள்ளுவதே மேன்மை. இந்த உலகத்தில் தன்னை உயர்த்திக்கெட்டவன் உண்டேயொழிய தன்னைத் தாழ்த்திக்கெட்டவன் இல்லை. நாம் மாத்திரம் எல்லாக்காரியங்களிலும் தாழ்ந்துபோகப் படித்துக்கொண்டோமானால், அப்பொழுது நம்முடைய ஜீவியம் எவ்வளவு மேன்மையும், பிரயோஜனமும், வல்லமையும் நிறைந்ததாயிருக்கும்! உலகத்தில் எவ்வளவு தீமை நீங்கும். பரலோகத்தின் சகல பாக்கியங்களும் உயர்வும் நம்முடையதாகும்.

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்ட அருமையானவர்களே, பெருமையிலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு நான் கடைசியாகச் சுட்டிக்காட்டுகிறது ஒன்றே ஒன்று. அது கிறிஸ்துவின் சிலுவைதான். சிலுவையிலறையப்பட்ட இரட்சகரைமாத்திரந்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "இதோ, உலகத்தின் பாவத்தைச்சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!" "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னதை நினைத்துக்கொள்வோமாக. கிறிஸ்துவின் சிலுவைமாத்திரம் நம்மைப் பெருமையிலிருந்து நீக்கக்கூடியது. நமக்குப் பெருமைவரும்போது சிலுவையில் தொங்கின இரட்சகரையே நோக்கிப் பார்ப்போமாக. அவர் இவ்வுலகில் அடைந்த தரித்திரத்தையும், பசியையும், தாகத்தையும், ஈனர்களால் அவர் நமக்காகப் பட்ட பாடுகளையும் சிந்திப்போமாக. இப்படி அவருடைய—பாடுகளையும், அவரு

டைய மரணத்தையும் நித்தம் சிந்தித்து வருவோமானால் நமக்குப் பெருமையுமா வரும்!

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் ஆம் சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."

"அவர் தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல, சிலுவையைச் சகித்து, தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்து, அமர்த்தப்பட்ட அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்."

என் அருள் கர்த்தர் இயேசுவே,
சிலுவை காட்சி பார்க்கையில்,
பூலோக மேன்மை நஷ்டமே,
என்றுணர்ந்தேன் என்னுள்ளத்தில்.

A. M. Lenox Press, Pasumalai—1912.

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் ; என நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் ; அப்பொழுது உங்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்."